Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

பெப். 26 - மார்ச். 04, 2009

ரூபா 30.00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 803

மூன்றாவது கண்

8 வயதுச் சிறுவனும் - 70 வயது மூதாட்டியும் பயங்கரவாதிகளா?

## அப்பாவித் தமிழர்களை மீட்க இந்தியா உதவும்!





## போர்க் கோலம் பூண்டிருக்கிறது புதுக்குடியிருப்பு



## மேல் மாகாண சபைத் தேர்தல் மலையகக் கட்சிகளுக்கு மீண்டுமொரு வாய்ப்பு

## இளசுகளைச் சீரழிக்கும் இணையத்தளங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## கொன்றை மலரான் அடிதொழு!

**இறைவனைத்** தொழப் பல வழிகளைக் காட்டியுள்ளார்கள். ஆயினும் சைவம் கூறுவதெல்லாம் சோதிப் பிளம்பாக நின்று அடியார்க்கு ஒளிதரும் இறைவனாகிய சிவனைத்தான் என்பது துணிவு. ஆதலின் அவனை அடைகின்ற வழிகளைத் தேர்ந்தெடுப்பதுதான் முறை என்பதைப் பல பாடல்களில் கூறப்பெற்றுள்ளது. அவற்றுள் திருமூலர் சுவாமிகள் வெகு இலகுவாக விளங்க வைத்திருப்பது நோக்கத்தக்கது. இதோ பாடல்.

*"கோது குலாவிய கொன்றைக் குழற்சடை*
*மாது குலாவிய வாள்நுதல் பாகனை -*
*யாது குலாவி அமரரும் தேவரும்*
*கோது குலாவிய குணம் பயில் வாரே"*

கொன்றை மாலை அணிந்தவனும், சுருண்ட சடையுடையவனும் உமையாளை இடப்பாகத்தில் கொண்டவனுமாகிய இறைவனை அமரரும்,தேவரும் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவர் என்பதாம்.

**என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.**



## வஞ்சக உள்ளத்தை நிச்சயம் இறைவன் தண்டிப்பார்

**சகோதர** சகோதரிகளே, நீங்கள் ஆணையிடவே வேண்டாம், விண்ணுலகின் மீதும் மண்ணுலகின் மீதும் வேறு எதன் மீதும் ஆணையிடாதீர்கள். நீங்கள் ஆம் என்றால் ஆம் எனவும், இல்லையென்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்.

(யாக்கோபு 5-12)

பிரியமானவர்களே!

அழகான ஆடையணிந்து ஆலயமே தஞ்சம் என்றும் மற்றவர்கள் தங்களைப் புகழவேண்டும் என்றும் ஆலயம் செல்வோர் ஏராளம். ஆனால் உள்ளமோ கொடிய நாகத்தின் விஷத்தை விட மேலானதாயிருக்கும். தன் குற்றங்களை மூடி மறைத்துப் பிறர் செய்யாத குற்றங்களைச் சுமத்தி அவர்களை இழிவு படுத்துவதும் பிறர் முன்னிலையில் வைத்துக் கடவுள் சத்தியமாக இவள் இவன் இதைத்தான் செய்தான் என்று கூறி அவமானப்படுத்தி வேதனையை ஏற்படுத்திவிடுவர். இப்படியானவர்கள் பயங்கரப் பொறாமை வஞ்சகம் நிறைந்தவர்கள். சுயநலப் பேய்கள். தங்களுக்கு இப்படி நடந்தால் வேதனை எப்படி இருக்கும் என்று உணராதவர்கள். இப்படியானவர்களுக்கு இறைவனின் தண்டனை குறைவின்றி நிறைவாகக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். முதலில் நீ திருந்து உலகம் தானாகத் திருந்தும்.

**- D.A.J .அருள்சாமி, இராஜவெல்ல.**

## பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படும்

**ஆண்கள்** குடும்பத்தின் தலைமை நிர்வாகிகளாக இருந்தாலும் அதை நிர்வகிப்பதில் பெண்களுக்கும் பாரிய பங்குண்டு. எனவே, அவர்கள் தமது பொறுப்பை மிகக் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள் அவரவரது பொறுப்பைப் பற்றி(மறுமையில்) ஒவ்வொருவரும் விசாரிக்கப்படுவர் எனக் கூறி நபி (ஸல்) அவர்கள் "பெண் தனது கணவனின் வீட்டின் பொறுப்பாளியாவாள். அவள் அவளது பொறுப்புப் பற்றி விசாரிக்கப்படுவாள்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்: புகாரி,முஸ்லிம்)

"எந்த ஒரு முஸ்லிமுக்கு அல்லாஹ் ஒரு பொறுப்பைக் கொடுத்து, அவன் தனது பொறுப்பில் இருப்போருக்கு மோசடி செய்தவனாக மரணித்தால் அவன் மீது அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கி விடுகின்றான்" என நபி(ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

(நூல்: முஸ்லிம்)

எனவே, மறுமையில் விசாரணை மன்றத்தில் நாம் விசாரிக்கப்படுவோம் என்பதை உணர்ந்து ஒவ்வொரு பெண்ணும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

**-ஹஸீனா ஏ அஸீஸ், கல்முனை -05.**

## கவிதைப் போட்டி இல.780



பாராட்டுக்குரியது

### பூச்சாண்டி!

பலம் காணும்போது
சமாதி கட்டி
பயம் கொள்ளும்போது
சமாதானம் பேசி
சிறு பிள்ளைத்தனமாய்
காதில் பூச்சூடியோருக்கு
கடைசியில்...
காடுமில்லை, நாடுமில்லை!

-பலஹத்துறையூர்,
இப்னுதாஹிர்.





## கவிதைப் போட்டி இல.803



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.03.2009

கவிதைப் போட்டி இல. 803
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.

### திரும்பாத ஊருக்கு!

போராட்ட
தலைவர்களின்
புத்திர சிகாமணிகள்
ஐரோப்பிய நாடுகளில்
உயர் கல்வி பயில
உங்களைப் போன்ற
ஏழைச் சிறார்களின்
படிப்பைப் பாழடித்து
அவர் தம் உதிரத்தை
பூமாதேவிக்கு
அபிஷேகம் செய்த
தன்னலத் தியாகிகள்
திரும்பாத ஊருக்கு
சென்று விடுவர்
இன்னும் சில தினங்களில்.

-ஏ.எம்.அல்-அக்தர்,
ஏறாவூர்-02.

### லேபிள்

நான் என்ன கடைச்சரக்கா
இல்லை குட்டிச்சுவரா
என் நெற்றியில் ஏன்
இத்தனை லேபிள்கள்
பெயர் ஜாதி
மதம் மொழி
இனம் குலம்
நல்லவன் கெட்டவன்
அறிஞன் முட்டாள்
Bsc - Msc
இப்படி ஏராளம்
இறுதியில் பிணம்.

-உயிர்ப்பித்தன்,

### ம(னி)தமா?...

மந்தைகளோ
மானங்கெட்ட
மனிதனுக்குச் சொல்கிறது
நிறத்தால்
மதத்தால்
வேறுபட்டாலும்
மண்ணில் ஒன்றாகத்தான்
செல்வோம் என்ற
மனிதத்தை - இந்த
மதியுகத்தில்...

-எம்.ஐ.எம்.ஷியாம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

### "காதில் பூவும்..."

நெற்றியில் பட்டையும்...
அவையளைக் கண்டனீயோ?
விரையும் படையில்
விளையும் பயிராய்
இணையச் சொன்னவையோ?

-ஏ.எம்.கமால், புத்தளம்.

### சிறுபிள்ளைத் தனம்

நெற்றியில் பட்டையும்
காதில பூவுந்தான்
கடைசியில் எமக்குக்
கிடைக்கப் போகும்
தமிழீழம்.

-பாண்டியூர், ஏ.ஆர்.என்.நவநீதன்.

### நினைப்பு...

இந்தப் பிஞ்சு
மகனின் எதிர்பார்ப்பு...
நாளைய சுதந்திர
இலங்கையில்...
மூவின மக்களும்
ஒற்றுமையுடன்
கரம் கோர்க்கும்
நினைப்பு!

-மீராமுகைதீன்-ஹாலித்,
ஏறாவூர்-03ஏ.

### விடுதலை!

வஞ்சகமில்லா
இந்த...
பிஞ்சு மனம்
வன்னி மக்களின்
விடுதலைக்காய்
வேண்டி நிற்கிறது
கடவுளிடம்.

'ஜமு'-காத்தான்குடி.

### நயவஞ்சகம்!

உலகத்தை அறியாத
குழந்தையே!
உன் காதில் பூச் சுற்றிய
நயவஞ்சகன்,
தனது குழந்தையின் காதில்
பூச்சுற்றவில்லை...
தெரிந்துகொள்!

-ஆர்.இளங்கோவன், கொழும்பு-14.

### எதற்கு?

உனக்குப் பூ வைத்துப்
பொட்டிட்டு
வைத்திருப்பது
புதையலெடுக்கப்
பலியிடவா - அன்றேல்
ஈழப் போரின்
இறுதிப் பலியாக
போர்க்களம் அனுப்பவா?

-அ.சந்தியாகோ, கண்டி.

# உங்கள் பக்கம்

## வீதி திருத்தி அமைக்கப்படுமா?

**கோறளைப்** பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சந்திவெளி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையிலிருந்து சந்திவெளி இந்து மயானத்திற்குச் செல்லும் உள் வீதி, குன்றும் குழியுமாக இருப்பதுடன் மழை பெய்யும் காலங்களில் நீர் நிறைந்து சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வீதி சேதமடைந்துள்ளதால் வாகனங்களும், பொதுமக்களும் பாடசாலை மாணவ-மாணவிகளும், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் இந்து மயானத்திற்குச் செல்பவர்களும் போக்குவரத்து மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இவ்வீதியை திருத்தித் தருமாறு அரச உயர் அதிகாரிகளிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பலமுறை கேட்டும் இதுவரையில் எந்த அதிகாரிகளும் கவனம் செலுத்தவில்லை என இவ் ஊர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வீதியின் பெரும் பகுதி மணலாக இருக்கிறது.

எனவே பொதுமக்கள் கட்டிட இடிபாடுகளைக்கொண்டு ஒரு பகுதியை நிரப்பி உள்ளனர். இந்த வீதியை முழுமையாகச் சந்திவெளி இந்து மயானம்வரை கிறவல் பரவித் திருத்தியமைத்துத் தரும்படி இவ்வூர் மக்கள் சார்பாகத் தினமுரசு "உங்கள் பக்கம்" வாயிலாக வேண்டுகின்றேன்.

**S.சதீஸ்,**
**சந்திவெளி.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: -011 --2360903
தொலை நகல் (Fax):-011-2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

# வாசகர் சாலை

## காலத்திற்கேற்ற கருத்துக்கள்

கடந்த 796ஆவது முரசின் மூன்றாவது "விழி"ப் பகுதியை எனது இரண்டு கண்களும் நோக்கியது. இதில் இடம்பெற்ற ஆங்கிலம் கட்டாயமாகிறது.

ஜீ.சி.ஈ.(சா/த) பரீட்சையில் மற்றுமொரு சர்ச்சை! என்ற தலைப்புத் தகவலில் சுய பாஷைக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி முரசு முன்வைத்த கோரிக்கைகள் வாசகர் வரவேற்பைப் பெறும் காலத்திற் கேற்ற கருத்துக்கள்.

**எம்.சீ.கலீல்,**
**கல்முனை-05**

## தினமுரசின் மேல் எனக்கோர் மோகம்

என் உள்ளக் கதவினைத்
தட்டித் திறந்த
புத்தம் புது மலராய்
வாரம் ஒருமுறை மலர்ந்து
இரத்த ஓட்டத்திற்குப்
புத்துணர்வு கொடுத்துச்
சுவாசப் பரப்புக்களில்
சுகமாக இறங்கி
இதயத்தின் மத்தியிலே
இதமாக வாழ்ந்து
மனச்சுவர்களில் ஆக்கம் எழுதத்
தூண்டி
அறிவாற்றலை விருத்தி செய்து
உண்மையின் பக்கங்களை
உணர்வுடன் தந்து
உயிரிலும் மேலாக
உலாவிடும் தினமுரசே,
உன்னை என்
விரல்கள் தீண்டுவதாலும்
உன் அணைப்பு
எனக்குக் கிடைப்பதாலும்
வாழ்கிறேன் சுகமாய்
நானிங்கே.
நம் இருவருக்குமிடையே
இருக்கும் பிணைப்பு
உலக அதிசயத்தில்
ஒன்றாக மலர்ந்திட
வா என்
வசந்தகால மேகமே.

**-வே.அகிலேஸ்வரன்,**
**மிருசுவில் படைமுகாம்.**

## அன்புள்ள தினமுரசே!

வாரம் ஒரு முறை நீ வெளிவந்தாலும் மக்களை என்றுமே அச்சத்திலிருந்து விடுவித்து, அவர்களுக்கு எதிர்ப்பு மருந்தை வழங்குவது போல அவர்களை தைரியசாலியாக மாற்றுகின்றாய். இதனாலேதான் நீ என்றும் மக்களின் இரசிகனாய் உள்ளாய். நீ என்றுமே சூடு, சுவை, சுவாரசியம் கலந்த ஒருவனாகவே வெளியாகின்றாய். நீ உங்கள் பக்கம் என்ற தலைப்பினூடாக வாசகர்களுக்கு அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வேண்டி அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதை இட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அவற்றிற்கு நான் முதற்கண் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ம.மபிலன்,நெளுக்குளம்.**

## முதன் முதலாக விமானத் தாக்குதல் நடத்தியவர்கள் புலிகளல்லர்!

கொழும்பிலும் நீர்கொழும்பிலும் சுட்டு வீழ்த்தப்பட்ட புலிகளின் மென்ரக விமானங்கள் இரண்டும் செக். குடியரசில் உற்பத்தி செய்யப்பட்டவையென ஊர்ஜிதம் செய்யப்பட்டாலும், புலிகளின் விமானக் கொள்வனவு தொடர்பான



மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகச் செக்.குடியரசு இரகசியப் பொலிஸாரின் உதவிகள் கோரப்பட்டுள்ளன. இரண்டே இரண்டு பேர் மட்டுமே ஒரு விமானத்தில் பயணம் செய்யக்கூடியதான நான்கு மென்ரக விமானங்கள் புலிகள் வசம் இருந்தனவெனக் கூறப்படுகிறது. செக். தயாரிப்பான இந்த விமானங்கள் கனடிய நிறுவனமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்டுப் பின்னர், தென்னாபிரிக்காவிலுள்ள விமானிகள் கிளப் ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கிருந்து தான் புலிகள் இந்த மென்ரக விமானங்களைக் கொள்வனவு செய்திருக்கலாமென்றும் தெரிய வருகிறது. இருந்தாலும் முதன் முதலாக விமானத் தாக்குதலை நடத்திய பிரிவினைவாத ஆயுதப் போராட்டக் குழு புலிகள் இயக்கமல்ல. நைஜீரியாவில் பிரிவினை கேட்டுப் போராட்டம் நடத்திய பயாப்ரா ஆயுதக் குழுவே ஐந்து மென்ரக விமானங்களைப் பயன்படுத்தி நைஜீரியத் துறைமுகம் ஒன்றின்மீது முதன் முதலாகத் தாக்குதல் நடத்தியது. 1960களின்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# புலித் தலைவர்கள் தப்பிச் செல்லவே யுத்த நிறுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவின் சிறிய நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டுள்ள புலிகளின் முக்கிய தலைவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பாதுகாப்பாகத் தமக்குத் தஞ்சம் தரும் ஏதாவதொரு நாட்டுக்குத் தப்பிச் செல்வதற்காகவே யுத்த நிறுத்தத்துக்கு உதவுமாறு இணைத்தலைமை நாடுகளைக் கோரியுள்ளனர். தற்காலிகமாக யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு புலி இயக்கத் தலைவர்களுக்கு மன்னிப்பு அளிக்குமாறு கோருவதே அவர்களின் திட்டமாகும். முடிந்தால் ஒட்டுமொத்தமாக அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தப்பிச் செல்லலாம் என்ற நப்பாசை இன்னமும் அவர்களுக்கு இருக்கிறது. இதற்காகச் சில சர்வதேச சக்திகள் இலங்கை அரசோடு பேசுவதற்கு முயற்சி செய்து வருவதாகவும் தெரியவருகிறது.



பா.நடேசன்,

இருந்தாலும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுப் புலிகள் சரணடையும் வரை யுத்த நிறுத்தமென்ற பேச்சுக்கே இடமில்லை என்று அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. இலங்கைப் படையினர் வெற்றியின் விளிம்புவரை வந்துவிட்ட நிலையில், யுத்தத்தை நிறுத்துவதற்கு முட்டாள்கள் இல்லை என்கிறார் அரசியல் ஆய்வாளர் சமரபால லியனகே.

முப்பது மாதங்களுக்கு முன்னர் 15 ஆயிரம் சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகக் கூறிய புலிகள் இயக்கம், இன்று 73 சதுர கிலோமீற்றர்கள் நிலப் பரப்புக்குள் முடக்கப்பட்ட நிலையில் யுத்த நிறுத்தத்துக்கு உதவுமாறு கோரி இணைத்தலைமை நாடுகளுக்குக் கடிதம் எழுதியுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவிலாறு அணைக்கட்டைப் புலிகள் மூடி, முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளின் நீர்பாசனத் தேவையைத் தடுத்ததாலேயே நான்காவது ஈழ யுத்தம் வெடித்தது. புலிகள் இயக்கம் இறுதித் தாக்குதலை எதிர்கொண்டிருக்கும் இன்றைய நிலையில், யுத்த நிறுத்தத்துக்கு உதவுமாறு கோரி புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், இணைத்தலைமை நாடுகளின் நான்கு தலைவர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

''யுத்த நிறுத்தமும், அரசியல் தீர்வுமே முதன்மையானவை, இப்போதைக்கு ஆயுதங்களைக் கீழே போடு என்று கேட்பது தேவையற்றது'' என்ற தொனிப்பொருளில் இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

''சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும், உத்தரவாதத்துடனும் தமிழ் மக்களுக்கென நிரந்தரமான அரசியல் தீர்வொன்று காணப்படுமானால், புலிகள் ஆயுதங்களை வைத்திருக்க

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## மக்கள் மீது வன்செயல்கள் வேண்டாம்; இரு தரப்புக்கும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

வன்னி யுத்த வலயப் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறுவதைத் தடுப்பதற்குப் புலிகள் இயக்கம் வன்செயல்களைப் பயன்படுத்துவதோடு மிரட்டல்கள் விடுத்து வருவதையும் ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது. கடந்த 23 ஆம் திகதி பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸில் கூடிய ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவிவகாரங்களுக்கான குழு நடத்திய கூட்டத்திலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ''இலங்கையின் நீண்ட காலப் பிணக்குக்கு இராணுவ நடவடிக்கையால் தீர்வு கண்டுவிட முடியாது. இராணுவ ரீதியில் புலிகள் தோற்கடிக்கப்படுவதானது, நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் தீர்வொன்றினைக் காண வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகிறது'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''புலிகள், வன்செயல்களையும், பயங்கரவாதத்தையும் கைவிட்டு, ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். மனிதாபிமானமற்ற முறையில் சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்துவதையும், வலுக்கட்டாயமாக ஆட்களை யுத்தத்துக்குத் திரட்டுவதையும் புலிகள் நிறுத்திக்கொள்வதோடு, நீடித்த - நியாயமான தீர்வொன்றினைக் காண்பதற்காக அரசியல் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வரவேண்டும்'' என்றும் வலியுறுத்தியுள்ளது. இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் தற்காலிக முகாம்களுக்கு மக்கள் செல்வது மற்றும் பரிசோதனைக்கு உட்படுத்துவது போன்ற பணிகளைச் சர்வதேசச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது.

## ஆயுதங்களைக் கையளித்துவிட்டுச் சரணடையுங்கள்; புலிகளுக்குப் பிரபல கனடிய ஆய்வாளர் அறிவுரை

''புலிகளின் பிரசார ஊடகங்கள் இலங்கையில் இனவொழிப்பு இடம்பெறுவதாக எவ்வளவுதான் உரக்கக் கத்தினாலும், இலங்கை அரசின் மீது அவ்வாறான குற்றச்சாட்டினைச் சுமத்த முடியாது. சுமார் 25 வருட கால கெரில்லா யுத்தத்துக்கும், 33 வருட கால பயங்கரவாதத்துக்கும் பின்னர் இறுதியில் புலிகள் நசுக்கப்பட்டு வருகிறார்கள்'' என்று ரொறன்ரோ, கனடாவிலுள்ள மக்கென்ஸி ஆய்வு நிறுவனத்தின் தலைவரான ஜோன் சி தொம்சன் தெரிவித்தார். பயங்கரவாதம், யுத்தம், அரசியல் தீவிரவாதம் உட்பட பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் பற்றி ஆய்வுகளை நடத்திவரும் முன்னணி நிறுவனமே மக்கென்ஸி நிறுவனமாகும். வன்னி யுத்தம் குறித்து மேலும் கூறியதாவது:-

நாட்டின் முழுப் பிராந்தியங்களுமே கடந்த சில மாதங்களாக அமைதியாக இருக்கின்றன. புலிகளின் விமானப் படையணி காணாமல் போய்விட்டது. அவர்களின் ஆட்டிலறிகள், பீரங்கிகள் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அந்த இயக்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான பிரபாகரன் எஞ்சியிருக்கக்கூடிய உறுப்பினர்களைக் கைவிட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டார். ஹிட்லரைப் போன்று அல்லது சதாம் ஹுசைனைப் போன்று வேலுப்பிள்ளை பிரபாகரனும் தனது இயக்க உறுப்பினர்களைப் பலியிட நிர்ப்பந்திக்கக் கூடியவர். கடைசியாக இருந்த புலிகளின் கெரில்லா அணிகள், தமது இறுதிச் சரணாலயத்துக்குப் பின்வாங்கும்போது, மனிதக் கேடயமாகப் பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு தமிழ் மகனையும் தம்மோடு இழுத்துச் சென்றுள்ளனர்.

மனிதக் கேடயங்களாகத் தாம் பயன்படுத்தும் மக்கள் தற்போது இன ஒழிப்புக்கு உள்ளாக்கப்படுவதாகப் புலிகள் கத்திக் குளறுகிறார்கள். ஆயுதங்களைக் கையளித்துவிட்டுச் சரணடைவதன் மூலம் இலகுவாக இந்தப் பிரச்சினையைப் புலிகளால் தீர்க்க முடியும்.

ஆனால் இதற்குப் பதிலாகச் சாகும் வரை போராட அவர்கள் தீர்மானித்துள்ளார்கள் போலத் தெரிகிறது. இவ்வாறு ஜோன் சி தொம்சன் தெரிவித்தார்.

## தமிழகத்தில் இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரம் தூண்டி விடுகிறார் பா.ம.க.தலைவர் ராமதாஸ்

''இலங்கைக் கடவுச் சீட்டுக்களை வைத்திருக்கும் பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்களும், கருணா அணியைச் சேர்ந்தவர்களும் இந்தியாவுக்குள் ஊடுருவி எக்மோர், கோழிக்கூடு, பெங்களூர் போன்ற இடங்களில் தங்கியிருந்து தமிழீழ ஆதரவாளர்களை இலக்கு வைத்துச் செயற்படுகின்றனர்'' என்று அண்மையில் கூறினார் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ். ''இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற சங்கதி வெளிவந்ததால் இந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது. தமிழ் நாட்டின் கோடான்குளம், கல்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள அணுசக்தி நிலையங்களுக்கு இக்குழுவினரால் ஆபத்து ஏற்படலாம். ஆதலால் போரை நிறுத்துமாறு இந்தியா இலங்கைக்கு உத்தரவிடவேண்டும். சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் இலங்கை நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறது'' என்றும் சொன்னார் டாக்டர் ராமதாஸ்.



ராமதாஸ்

சென்னையில் எக்மோர் ரயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள பௌத்த விகாரையிலேயே பாகிஸ்தானிய மற்றும் இலங்கை உளவாளிகள் தங்கியிருக்கின்றனர் என்றும் சொன்னார் ராமதாஸ். இப்படிப் பச்சைப் பொய்களைப் பரப்புவதன் மூலம் இலங்கை முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரான வன்செயல்களைத் தமிழகத்தில் தூண்டி விடுவதே இவர்களின் நோக்கமாகும்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸுக்குச் சென்னையில் இயங்கும் மக்கள் ரி.வி. சொந்தமானதாகும். தரிசனம் தொலைக்காட்சி புலி இயக்க முகவர்களால் நடத்தப்படுவது. மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் 'தரிசனம்' தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கும் 'தரிசனம்' நிகழ்ச்சிகளை மக்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்குமான பரஸ்பர ஒப்பந்தமொன்றும் உள்ளது. அதனால்தான் சுதந்திரபுரத்தில் இடம்பெயர்ந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு மத்தியில் புலிகளால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை, இராணுவம் நடத்திய குண்டுத் தாக்குதலென திரிவுபடுத்திச் செய்தியில் குறிப்பிட்டது மக்கள் தொலைக்காட்சி.

''இலங்கையில் இரண்டு கோடித் தமிழ் மக்கள் முன்னர் வாழ்ந்தார்கள்'' என்று சினிமா நடிகர் விஜயகாந் கடந்த வாரம் தமிழகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டிருந்தார். இலங்கை பற்றி ஒன்றுமே தெரியாத மண்டுகங்கள் எல்லாம் கூட்ட மேடைகளில் இன்னும் சில காலத்துக்கு இப்படித்தான் பேசும் என்கிறார் தமிழகக் கல்விமானான சிதம்பரம் பிள்ளை. எல்லாமே தேர்தல் வரும்வரைக்கும்தான் என்றும் சொல்கிறார் அவர்.

## மீண்டும் ஒளி பெறுகிறது யாழ்ப்பாணம் கொழும்பு ரயில் சேவைக்கும் திட்டம்

வன்னியில் நிலவும் யுத்தக் கெடுபிடிகள் விரைவில் முற்றுப் பெற்றுவிடும் என்பதால், யாழ்.குடாநாட்டில் நிலவிவந்த குறைபாடுகளைப் போக்கி, மீண்டும் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் ஏ-9 தரைவழிப் பாதை மீண்டும் மக்கள் பாவனைக்குத் திறக்கப்படக்கூடிய சாத்தியம் நிலவுகிறது. இந்நிலையில் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவையை மீண்டும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட எம்.பி.யான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சிகளின் காரணமாக இதற்குத் தேவையான திட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையைப் புனரமைப்பதற்கு 400 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவிலிருந்து தண்டவாளங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும், இலங்கையில் இதற்குத் தேவையான சிலிப்பர் கட்டைகளைத் தயாரிக்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் ரயில்வே பொது முகாமையாளர் லலிதசிறி குணருவன் தெரிவித்தார்.

இதற்கிடையில் யாழ்.குடாநாடு முழுவதற்கும் 24 மணி நேரமும் மின்சார விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும். முதற்கட்டமாகத் தற்போது தென்மராட்சிப் பகுதிக்கு 24 மணி நேரமும் மின்சாரம் பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆறு ஜெனரேட்டர்களில் மூன்று இதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. யாழ்.குடாநாட்டுக்கு வெளியிலும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, யாழ்ப்பாணத்துக்குத் தேவையான ஒரு தொகுதி மருத்துவப் பொருட்கள் விமான மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. தட்டுப்பாடான மருந்து வகைகளைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## யுத்த நிறுத்தமல்ல, யுத்தம் இடைநிறுத்தப்படுவதையே கோருகிறது ஐ.நா.

யுத்தம் இடம்பெறும் பகுதியிலிருந்து தப்பிச் செல்ல முனையும் மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வசதியாகக் குறிப்பிட்ட காலத்துக்கு யுத்தம் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்தார். கடந்த 23 ஆம் திகதி நியூயோர்க்கில் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையில் இடம்பெற்றுவரும் மோசமான யுத்தத்தில் சிக்கியிருக்கும் மக்கள் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வருட ஆரம்பத்திலிருந்து இதுவரை வன்னி யுத்தப் பகுதியில் இரண்டாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனரென்று மனித உரிமைகள் காப்பகம் தெரிவித்துள்ளதே என்று சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):–011 2-360920
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk
murasu@live.com

## முரசம்

### பிரபாகரனின் பாவங்களை தமிழ் மக்கள் சுமக்க முடியாது!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஏழு வருடங்கள் உருண்டோடி விட்டன. அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் வெவ்வேறான இடங்களில் 22.02.2002 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது. "இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு" என்பது போலப் புலிகளுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு இந்த ஒப்பந்தம். இன்று 22.02.2009 ஆம் ஆண்டு எவரும் அலட்டிக்கொள்ளாமல் அடக்கி வாசிக்கப்பட்டது. புலிகள் கூட அதைப்பற்றி வாய்திறக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தனியே தனது அரசியல் இலாபங்களைக் கணக்கிட்டு செய்து கொண்டிருந்தாலும், பிரபாகரனைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கில் சுதந்திரமாக நடமாடவும், பரப்புரைகளை மேற்கொள்ளவும், நாடெங்கும் சுதந்திரமாக நடமாடவும், அரச வானூர்திகளில் உலாவரவும், வெளிநாடுகளுக்கு உறுப்பினர்களைப் பல தேவைகளுக்காக அனுப்பவும் ஏதுவாக அமைந்தது.

அதேவேளை மாற்று அரசியல் கட்சிகள், இயக்கங்களை வடக்கு - கிழக்கை விட்டு அப்புறப்படுத்தவும், சுட்டுக் கொல்லவும், தமது பகுதிகளுக்குள் அரச படைகளை நுழையவிடாமல் தடுக்கவும், விரும்பிய வரி, கப்பம் என்பவற்றை அறவீடு செய்யவும், இயக்கத்துக்கு ஆள் பிடிக்கவும், பொங்குதமிழ் நடத்திக் கொண்டாடவும் தமது இருப்புப் பகுதியை மேலும் பாதுகாப்பாக அமைத்துக்கொள்ளவும், அரசியல் அதிகாரத்தைச் சுருட்டி அள்ளிக்கொள்ளவுமாகவென அத்தனை வாய்ப்புக்களையும் இந்த ஒப்பந்தம் வழங்கியது.

இது தவிரவும் நோர்வேயின் விஷேட கவனிப்புக்கள், சர்வதேச நாடுகளின் தலையீடு, இலங்கை அரசுக்கு நிகரான சம அந்தஸ்து என்ற அங்கீகாரம் இப்படிப் பல நல்ல சந்தர்ப்பங்கள் வாய்ந்தன. புலிகள் நினைத்திருந்தால் அத்தனை வாய்ப்புக்ளையும் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் தனி நாட்டுக்கான பல அம்சங்களை ஏற்படுத்தியிருப்பதோடு, அரசியல் பிரச்சினைக்கும் கௌரவமான தீர்வு கண்டிருக்க முடியும். அதேவேளை சர்வாதிகாரப் போக்கைக் கைவிட்டு ஜனநாயகப் பன்முகத் தன்மையைத் தடுக்காது விட்டிருந்தால் தமிழ் தலைமைகளின் கூட்டு உழைப்பைத் தமிழ் மக்கள் அனுபவித்திருக்கச் செய்திருக்கலாம்.

புலிகள் அதையிட்டுச் சிந்திக்கவில்லை. தங்களையும் ஏமாற்றி மற்றவனையும் ஏமாற்றவே முயற்சித்தனர். இப்போது மண் கவ்விக்கொண்டு இருக்கின்றனர். இந்த நேரத்தில் பிரபாகரன் வெட்டிய குழிக்குள் அவரே விழுவது கவலைக்குரிய விடயமல்ல. பிரபாகரனின் கட்டாயத்தால் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பிள்ளைகளினதும், *அப்பாவி மக்களினதும் பாதுகாப்பை நினைக்கத்* தான் கவலையாக இருக்கிறது. புலிகளால் பலாத்காரமாகத் தடுத்து வைத்திருக்கும் மக்களையும், பொது வாழ்வுக்கு வர விரும்பும் புலி உறுப்பினர்களையும், பிரபாகரனைப் பார்க்கும் அதே கண்ணோட்டத்தோடு பார்க்க முடியாது, அது சரியுமல்ல. அவர்கள் பழிவாங்கப்படவும் விட முடியாது. பிரபாகரன் எனும் கொலை வெறி கொண்ட ஒரு தனி மனிதனின் பாவங்களை எமது மக்கள் அனுபவிக்கவோ, சுமக்கவோ முடியாது. எனவே அப்பாவி மக்களைப் பாதுகாக்கவும், பொதுவாழ்வுக்கு விரும்பிவரும் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது குறித்தும் மனித நேயத்தோடு சிந்திக்க வேண்டும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# அப்பாவித் தமிழர்களை மீட்க இந்தியா உதவும்!



வன்னியில் இடம்பெயரும் அப்பாவித் தமிழ் மக்கள்

**இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் 2000 பேர் இந்தியாவுக்குள் ஊடுருவல்**

"கருணா அம்மானின் ரி.எம்.வி.பி. கட்சியில் இணைந்து, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.புலனாய்வுப் பிரிவில் பயிற்சி பெற்ற இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரம் முஸ்லிம் இளைஞர்கள் இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ளனர்" என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் கூறினார். புதுடில்லியில் இந்திய லோக சபைக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக நடத்தப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். இலங்கையில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தியும், புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவும் ஒருநாள் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

கருணா புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்று, இலங்கை அரசோடு இணைந்து புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றார் என்பது உண்மை. அதற்காக ஒன்றிரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கூட அங்கம் வகிக்காத கருணாவுக்குப் பாகிஸ்தானின் உளவுப் பிரிவோடு என்ன தொடர்பு இருந்திருக்கும்? இந்தியாவில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரம் முஸ்லிம் இளைஞர்களுக்குப் பாகிஸ்தான் பயிற்சி கொடுத்ததா? கருணா அணியில் முஸ்லிம் இளைஞர்கள் இருந்தார்களா? இப்படித்தான் ராமதாஸ் போன்ற புலி முகவர்கள் இந்திய இளைஞர்களை ஏமாற்றித் தீக்குளிக்கத் தூண்டுகிறார்கள்.

**இந்திய** லோக சபைக் கூட்டத் தொடர் கடந்த பதினெட்டாம் திகதி நடைபெற்றுக்கொண்டிருந்த போது உறுப்பினர்கள் சிலர் கொந்தளித்தனர்; கூக் குரலிட்டனர்; குழப்பம் விளைவித்தனர். இரண்டு தடவைகள் பாராளுமன்ற நிகழ்வுகளை ஒத்திவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் சபாநாயகருக்கு ஏற்பட்டது. முல்லைத்தீவின் யுத்த வேட்டுகள், இந்தியப் பாராளுமன்றத்துக்குள்ளும் எதிரொலித்ததே இதற்குக் காரணம்.

"இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பு புலிகள் இயக்கம். இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குப் புலிகள் இயக்கம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது" என்று எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதே கொந்தளிப்புக்குக் காரணம். "புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சகல மக்களையும் உடனடியாக விடுவிப்பதோடு, ஆயுதங்களையும் கைவிட வேண்டும். புலிகள் இவற்றைச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரணாப் முகர்ஜி கூறினார். லோக சபையில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.க்களே குழப்பம் விளைவித்தனர். பிரணாப் முகர்ஜி தனது வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டுமென்பதே தமிழக எம்.பி.க்கள் கலகம் விளைவித்தமைக்கான காரணம். "வன்னிக்குள் புலிகள் தடுத்து வைத்திருக்கும் அப்பாவித் தமிழ் மக்களை இந்தியா மீட்பதற்கு உதவும். இலங்கை அரசுடனும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் இணைந்து யுத்த வலயத்தில் சிக்கியிருக்கும் மக்களை வெளியே கொண்டுவருவதற்கு இந்தியா தயாராக இருக்கிறது" என்று முகர்ஜி கூறியதுதான் தாமதம், லோக சபை மண்டபத்துக்குள்ளும் வன்னி யுத்தம் நடைபெறத் தொடங்கியது.

இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் தனது இருக்கையை விட்டெழுந்து, முகர்ஜியை நோக்கிச் சென்றார். காதுக்குள் ஏதோ குசுகுசுத்தார். 'ஆமாம்' என்று தலையாட்டும் சமிக்ஞையோடு, சோனியா காந்தி வழமையாக அமரும் ஆசனத்தைக் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னார் பிரணாப் முகர்ஜி. பாராளுமன்றக் கலரியில் அமர்ந்திருந்து நிகழ்வுகளை அவதானித்துக்கொண்டிருந்த பத்திரிகையாளர்களினதும் , படை அதிகாரிகளின் மூளைக்குள் புலனாய்வுப் பொறிகள் தட்டின.

"சோனியா காந்தி மடம்! இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தாரா?" என்று அமைச்சர் சிதம்பரம், வெளிவிவகார அமைச்சர் முகர்ஜியைக் கேட்டிருக்கலாம். "ஆமாம்" என்ற பாணியில் சோனியா அம்மையாரின் இருக்கையைச் சுட்டிக்காட்டி, முகர்ஜி பதிலளித்திருக்கலாம்" என்கிறார் முன்னாள் இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் அசோக் கே மெஹ்தா.

ஜெனரல் அசோக் மெஹ்தா சாதாரண மனிதரல்லர். இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் எமது நாட்டில் பணியாற்றி யவர். புலிகளுக்கெதிரான யுத்தத்தில் பெரும் பங்களித்தவர். 1988 ஜுலை மாதம் முதல் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இலங்கையில் பணியாற்றியவர். 1990 மார்ச்சில் இலங்கையில் நிலை கொண்டிருந்த கடைசி இந்தியத் துருப்புக்கள் எமது நாட்டைவிட்டு வெளியேறியபோது, கடைசியாகச் சென்ற இந்திய இராணுவ அதிகாரிகளில் இவரும் ஒருவர். அது மட்டுமல்ல, பாதுகாப்புத்துறை ஆய்வாளராகப் பல ஊடகங்களுக்குக் கருத்துக்களை வழங்கி வருபவரும் அவர்.

ராஜீவ் காந்தியின் மனைவியான சோனியா காந்தி, இத்தாலிய நாட்டுப் பெண்மணி. ராஜீவ் காந்தியைப் புலிகள் தமிழ் நாட்டின் ஸ்ரீ பெரம்புதூரில் வைத்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்திக் கொன்ற தன் பின்னர், சோனியாவைப் பிரதமராக்குவதற்கான பகீரத முயற்சிகள் காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்தே தலையெடுத்தன. ராஜீவின் கொலையால் ஏற்பட்ட அனுதாப அலையை, 1991 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் பயன்படுத்தும் ஒரு முயற்சியாக இது இருந்திருக்கலாம். அல்லது கணவனின் அல்லது தகப்பனின் படுகொலையின் பின்னர் மனைவியையோ அல்லது மகளையோ அரசியல் வாரிசாக முன்தள்ளும் தென்கிழக்காசியப் பாரம்பரியத்தின் வழிமுறையாகவும் அது இருந்திருக்கலாம். ஆனால் காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகித்த மும்பையின் 'கிங் மேக்கர்' சரத் பவார் போன்ற சக்திமிக்க தலைவர்கள் சோனியாவுக்கு எதிராக எழுப்பிய போர்க் கொடியால் சோனியாவால் பிரதமராக முடியவில்லை. "இத்தாலியப் பெண்ணான சோனியா, இந்தியாவின் தலைவியாவதா?" என்பதே இந்த எதிர்ப்பலைகளின் தொனிப்பொருள். சோனியா காந்தி பின்தள்ளப் பட்டாலும், காங்கிரஸ் கட்சிக்குள் முன்னணி அந்தஸ்துப் பெற்றவர். காங்கிரஸ் கட்சியின் தலைவி. இதனால் ஆளுந் தரப்புக்குள் அபரிமிதமான செல்வாக்கோடு இன்னமும் இருந்து வருபவர். அவர் சொல்வதுதான் சட்டம் என்ற நிலை காங்கிரஸுக்குள் நிலவுவதாகவே பெரும்பாலான இந்திய அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள்.

மன்மோகன் சிங் பிரதமராவதற்கு முன்னரும், பிரதமராகியதன் பின்னரும் பிரணாப் முகர்ஜியைச் 'சேர்' என்றுதான் அழைப்பாராம். அந்தளவிற்குக் கட்சிக்குள் சிரேஷ்ட அந்தஸ்தும், ஆளுமையும் கொண்டு விளங்கியவர் பிரணாப் முகர்ஜி. உண்மையில் பிரதமர் பதவியில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டியவர் அவரென்றும் சில இந்திய அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள். ராஜீவ் காந்தியோடு ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக "கிடைத்திருக்க வேண்டிய அந்தஸ்தை இழந்து விட்டவர்" என்றும் கூறப்படுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கைப் பிரச்சினையில் அமைதியான தீர்வொன்றினை ஏற்படுத்த ராஜீவ் காந்தி எடுத்த முயற்சியே புலிகள் அவரைப் படுகொலை செய்ததற்கான முக்கிய காரணம். எனவே புலிகளும் - இலங்கையும் சம்பந்தப்பட்ட விடயத்தில் சோனியாவின் சொற்களுக்கு அதிக அந்தஸ்து இருக்கும் என்பதையும் நிராகரிக்க முடியாது.

பிரணாப் முகர்ஜி வெறுமனே வெளிவிவகார அமைச்சர் மட்டுமல்லர். பிரதமர் மன்மோகன் சிங் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதால், பதில் பிரதமரைப் போன்று மன்மோகன் சிங்கின் பணிகளையும் இன்று ஏற்றுக்கொண்டிருப்பவர் அவர். அத்துடன் 1987 ஆம் ஆண்டு வாக்கில் ராஜீவ் காந்தியின் பிரதிநிதிகளாக அமைச்சர்கள் பி.சிதம்பரமும், நட்வார் சிங்கும் இலங்கைப் பிரச்சினையில் ஈடுபாடு காட்டியதுபோல, இன்று இலங்கை தொடர்பான இந்தியாவின் உத்தியோகபூர்வக் குரலாகவும் ஒலித்துக்கொண்டிருப்பவர் பிரணாப் முகர்ஜி. ஆகவேதான் முகர்ஜி புலிகளை வழிக்கு வருமாறு பாராளுமன்றத்தில் வலியுறுத்தியபோது, புலிச் சார்பு தமிழக எம்.பி.க்கள் கூச்சல் போட்டனர். அமைச்சர் சிதம்பரம் காதோடு காதாக முகர்ஜியுடன் பேசியதற்கும் இதுவே காரணமாகவும் இருக்கலாம். ஈழத் தமிழர்களுக்குச் சார்பாகத் தமிழகத்திலும் இந்தியாவிலும் எழுந்த அலையைப் புலிகளுக்குச் சார்பாகத் திசைதிருப்ப எடுக்கப்பட்ட முயற்சிகள் பிசுபிசுத்துப் போய்விட்டன.

இன்னும் மூன்றே மூன்று மாதங்களுக்குள் இந்தியப் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தேர்தலுக்குப் பின்னர் மே மாதம் 21 ஆம் திகதி புதிய லோக சபை கூடவும் வேண்டும். மே மாதம் 21 ஆம் திகதிதான் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட தினமாகும். எனவே இலங்கை இனப் பிரச்சினையும் வன்னி யுத்தமும் இந்தியத் தேர்தலில் நிச்சயமாக ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படும்.

இந்தியாவில் அடிப்படைவாத இந்துத்துவக் கட்சிகளுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் பாரதிய ஜனதாக் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரும் புதிருமான

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

நிலைப்பாடுகளைக் கொண்டவை. இலங்கையில் ஐ.தே.க.வும், ஜே.வி.பி.யும் போல என்றுமே கூட்டுச் சேர முடியாதவை. ஆனால் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டுமென வற்புறுத்தும் கூட்ட மேடைகளில் பாரதிய ஜனதாவும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றாகவே பங்குபற்றுகின்றன. இதுதான் பச்சை அரசியல் சந்தர்ப்பவாதம் என்பது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் இந்திய அரசியல் வானப் பரப்பில் இலங்கை தொடர்பான விசித்திரமான வாண வேடிக்கைகளைப் பார்க்க முடியும். வன்னி யுத்தம் முடிவுக்கு வந்தாலும் கூட, அதன் எதிரொலிகள் தொடர்ந்தும் தமிழகத்திலும், இந்தியாவிலும், சர்வதேசத்திலும் கேட்டுக் கொண்டுதான் இருக்கும்.

## ஊரிலிருந்து....



மேற்குலக நாடுகள் உட்பட சர்வதேசம், புலிகளினதும் அதன் அமைப்புக்கள் மீதும் கடும் பாய்ச்சல் நடாத்தியதற்கு இங்குள்ள தமிழ் ஊடகங்களும் ஒரு காரணமாம்.

வன்னியில் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் புலிகள் வைத்திருப்பதை உலகமே அறிந்து வைத்திருக்கின்றது. ஆனால் அதுகுறித்து ஒரு வசனம் தன்னும் வெளிப்படுத்த இங்குள்ள தமிழ் ஊடகங்களினால் முடியவில்லை என்ற விடயம் தூதரகங்களூடாக நன்றாகவே காட்டப்பட்டிருக்காம்.

ஜனநாயக மறுப்புக்கு எங்கை அடி விழுகுது எண்டு பாத்தீங்களோ.

# போர்க் கோலம் பூண்டிருக்கிறது புதுக்குடியிருப்பு

**புதுக்குடியிருப்பை** அண்டியிருக்கும் 70 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் நடக்கும் மனிதப் பேரவலத்தை எவரும் மறுக்க முடியாது. மன நோயாளிகள் சிலவேளை இதற்கு வேறு அர்த்தங்களில் கற்பிதம் கூறலாம்.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலான போராட்டப் பாதையில் இப்போதுதான் தமிழ் மக்கள் பாரிய அழிவுகளையும், அனர்த்தங்களையும் சந்தித்து வருகின்றனர். தமிழ் இனம் தன் வரலாற்றிலேயே சந்திக்கும் மனித அவலம் இப்போது வன்னியில் நடந்து கொண்டிருக்கிறது. மரணமும், அங்கவீனமும் மாறி மாறி அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

சுட்டெரிக்கும் வெயிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடும், மருத்துவ வசதியின்மை, உறவுகள் - பிரிவு என நெருக்கடிகளுக்கு அங்கு வாழும் தமிழ் மக்கள் முகம் கொடுத்துவருகின்றனர். இத்தகைய நிலையிலும், மக்களைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளும் கட்டாயமும், அழைப்பும் நடக்கிறது.

மக்கள் சாகும் - காயமடையும் கோரமான புகைப்படங்களை இணையத்தளத்தில் வெளியிட்டுப் புலிகள் சர்வதேசமெங்கும் வாழும் தமிழர்களின் உணர்வுகளை உசுப்பிவிட்டனர்.

புலம்பெயர்ந்த உறவுகள் வீதியில் இறங்கினால் அது உலக மக்களின் காதுகளில் கேட்கும் என்று புலிகள் நினைத்தனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் புலிகள் போடும் மகா திட்டங்கள் எல்லாமே பிசுபிசுத்துப் போனதோடு, "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை யாகி விட்டது.



முக்கியமான திட்டங்களில் ஒன்று, தமிழ்நாட்டைக் குழப்பி தப்பிக்கொள்ள எடுத்த முயற்சிகள், புலிகளின் பாசிசத்தை மேலே கிளப்பி விட்டதைக் கூறலாம். பின்னர் வன்னி மக்களைப் பலாத்காரமாகத் தடுத்து வைத்தால் மக்களுக்காக படை நடவடிக்கை தடுக்கப்படும் எனப் புலிகள் போட்ட கணக்குத் தமிழ் மக்களைப் புலிகள் பழிவாங்குகின்றனர் என்று நிருபனமானதும், மக்கள் ஆபத்துக்கு முகம் கொடுத்ததும் நிகழ்ந்தது. இதைக் கொண்டு புலம்பெயர் தமிழர்களை உசுப்பேத்தினார்கள். இது சர்வதேசத்தின் காதுகளுக்குக் கேட்டு அமெரிக்கா உட்பட ஐக்கிய நாடுகள் வரைக்கும் இப்போது புலிகள் மக்களை மனிதக் கேடயமாகத் தடுத்து வைத்திருக்கின்றனர். அவர்கள் வெளியேற விடவேண்டும் என்று புலிகளுக்குச் சாட்டை அடி அடித்தனர். போதாக்குறைக்கு மனித உரிமைகள் அமைப்புக்கள் உட்படப் புலிகளின் கைப்பொம்மைகளான தமிழ்க்கூட்டமைப்பு வரை புலிகள் தமிழ் மக்களைத் தடுத்து வைத்திருப்பது தவறுதான் அது கண்டனத்துக்குரியது, ஏற்க முடியாதது என்று கூறுமளவுக்கு நிலைமை புலிகளுக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றது.

இறுதி நிகழ்வாக நாளுக்கு நாள் படையினர் முன்னேறி வருவதும், புலிகளின் பலவிதமான தளபாடங்கள், கருவிகளைக் கைப்பற்றி வருவதும் நிகழ்ந்து வருகையில் புலிகளிடமிருந்த இரண்டு விமானங்களையும் கூடப் பாதுகாக்க முடியாத சூழலில் அதைக்கொண்டு கொழும்பில் நடத்தத் திட்டமிட்ட தாக்குதலும் சறுக்கிவிட்டது.

விமானப் படைத் தலைமையகத்தைத் தகர்க்க வந்த விமானத்தைப் படையினர் தாக்கியபோது நிலை தடுமாறி இறைவரித் திணைக்களக் கட்டிடத்தில் மோதியதும், அடுத்த விமானம் கட்டுநாயக்கா விமானத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த விமானப் படை விமானங்களைத் தாக்கச் சென்றபோது அதையும் படையினர் தாக்கினர். அந்த விமானம் வெடிக்காமலே விழுந்து நொறுங்கியதும் புலிகளுக்குப் பெரும் தோல்விதான். அதை மறைக்கக் கட்டுநாயக்காவில் விழுந்த விமானத்தைச் செலுத்திய சிரித்திரனை மறந்து, கொழும்பில் வெடித்துச் சிதறிய விமானத்தில் பலியான ரூபனின் பெயரால் தமிழக, புலம்பெயர் மக்களுக்கும், வன்னியில் உள்ள மக்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கும் உருக்கமான கடிதமும், புலிகளின் பலவீனத்தைக் காட்டுகிறது.

வன்னியில் மக்கள் தம்முடன் போராட வரவேண்டும் எனப் புலிகள் பலவந்தப்படுத்துவதும், அவர்களை அரசு அறிவித்திருக்கும் பாதுகாப்பு வலயத்துக்குச் செல்ல விடாமல் தடுத்தும் வருகின்றனர்.

புதுக்குடியிருப்பில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இழப்புக்களுக்கும், படுகாயங்களுக்கும், அவலங்களுக்கும் முழுப் பொறுப்பாளிகள் புலிகள்தான். இதை யாரும் மறுப்பதற்கில்லை. புலிகள் மக்களைத் தடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே அங்கிருக்கும் மக்களைப் புலிகளாகக் கருதமுடியாது என்ற தெளிவையும் அரசாங்கம் பெறவேண்டும்.



புதுக்குடியிருப்பில் இன்னும் அகப்பட்டிருப்பதாகக் கருதப்படும் சுமார் ஒன்றரை இலட்சம் மக்களும் எவ்வித வசதிகளுமற்ற பகுதிக்குள் இருக்கின்றனர். அங்கு ஏவப்படும் ஒவ்வொரு குண்டும் புலிகளின் தலையிலோ அல்லது யாரோ ஒரு அப்பாவியின் தலையிலோதான் விழநேரிடும்.

புலிகளின் பயங்கரவாதப் பாவங்களுக்கான தண்டனையை அப்பாவிப் பொதுமக்கள் சுமக்க முடியாது. எனவே அங்கு அகப்பட்டிருக்கும் அப்பாவி மக்களை மீட்க உடனடியான தலையீடுகள், அவசரமும், அவசியமுமாகும்.

அந்த மக்களை மீட்கும் பணியில் செஞ்சிலுவைச்சங்கத்துடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக இருப்பதாகக் கூறியதும், அமெரிக்கா ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருப்பதும் ஆறுதலாக இருந்தாலும், இவை அறிக்கைகள் விட்டு அழகு பார்க்கவும், ராகு, கேது நேரம் பார்க்கவும் தகுந்த காலம் அல்ல. ஒவ்வொரு மணித்தியாலயத்திலும், ஒரு அப்பாவியின் உயிர் பலியாகிக்கொண்டிருக்கிறது.

புலிப் பயங்கரவாதம் யாருடைய கவலைகளையும், கருத்துக்களையும் கணக்கில் எடுப்பதாக இல்லை.

நமது குடும்பத்தில் யாரோ ஒருவருக்குச் சிறிய காயம் ஏற்பட்டு துளி இரத்தம் வந்தாலே பதறிப்போய் விடுவது வழக்கம். வன்னியில் ஒவ்வொரு குடும்பமும் இரத்தத்தில் நனைந்துபோய் இரத்தத்தோடு உறைந்து போய் இருக்கின்ற அவலம் நடந்துகொண்டிருக்கிறது. சடலங்களை இழுத்துப் புதைத்து அலுத்துப்போய் இருக்கிறார்கள். சுகாதார சீர்க்கேடு மோசமாகிக் கொண்டிருக்கையில், சடலங்களின் துர்நாடையும், காயப்பட்டவர்களின் காயங்களில் புழுவும் பிடித்துள்ளது.

தற்போது வெடித்துச் சிதறும் குண்டுகள் விழுந்து வெடிக்கும் சூழலைத் தீப்பற்றச் செய்வதால் எரிந்து சாகும் அவலமும், எரிகாயங்களோடு மக்கள் எழுப்பும் அவல ஓலமும் வடக்குக் கிழக்கு எங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

சுனாமியை விடவும் பேரழிவுகளுக்கு மக்கள் முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.


"ஆமி அடிக்கும் செல்லில் வயது வித்தியாசம் இல்லாமல் செத்துப்போகும் நீங்கள், ஏன் வீணாக வேண்டும். வயது வித்தியாசம் இல்லாமல் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடிச் சாவது மாவீரமில்லையா, தமிழன் போராட்டக் குணத்தை இழந்துவிட்டானா. உறவுகளே போராட்டத்தில் இணையுங்கள். நாம் போராடி வெல்வோம். நாம் போராடினால் தலைவர் தமிழீழத்தை நிச்சயம் பெற்றுத் தருவார்" இவ்வாறு புலிகள் மக்களை நோக்கிக் கூறி அப்பாவி மக்களைப் பலிக்களத்துக்கு இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

இந்த உண்மையை அறியாதவர்களாக எமது புலம்பெயர் உறவுகள் இருக்கிறார்களா, உலகமெல்லாம் தெரிந்த நீங்கள் புலிகளின் இந்த மகுடிக்கு மட்டும் எப்படி எடுபட்டு ஆடுகிறீர்கள். எங்களுக்கு இரத்தம் தேவை. உங்களால் தரமுடியுமா - புலிகளுக்குப் பணமும், ஆயுதமும் வாங்கிக் கொடுத்துச் சண்டை பிடிக்க உதவிய உங்களால் கொஞ்சம் குடிதண்ணீரும், உணவும் முடிந்தால் கொஞ்சம் இரத்தமும் அனுப்ப முடியுமா? என்று வன்னியில் அகப்பட்டிருக்கும் மக்களும், அங்கிருந்து தப்பிவந்தவர்களும் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்குப் புலம் பெயர்ந்து வாழும் எங்கள் உறவுகளின் பதில் என்னவாக இருக்கும்.

அலசுவது
- மதியூகி -

"தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா" அல்லது இனியும் புலிகளுக்குக் கொடி பிடிக்காமல் எங்களுக்காகக் காரியமாற்றப் போகிறீர்களா? தொடருகின்ற யுத்தத்தில் இன்னும் பலர் பலியாவார்கள், எஞ்சியிருப்பவர்களில் பலர் அங்கவீனமாவார்கள், புலம்பெயர்ந்த உறவுகள், அவ்வாறேதான் இருப்பீர்களா?

# அதிரடி அய்யாத்துரை



**திருவாணமலை** மருத்துவமனைக்குக் காயப்பட்டுக் கொண்டு வாரவைக்குத் தொண்டு நிறுவனங்கள் குடுக்கிற சாமான்களிலையும் சிலபேர் கையாடல் செய்யினமாமுங்கோ.

அங்கர் மாவையும், சீனியும் மட்டுமில்லையுங்கோ. அகப்படுகிற எல்லாத்திலையும் மோசடி செய்யிற சில ஜென்மங்கள் இன்னும் இருக்கினமெண்டது புது விஷயமில்லையுங்கோ. எண்டாலும் வன்னியில இருந்து காயப்பட்டு அரை உயிராக வாறவையின்ர வைத்திலையும் கை வைக்கினமே எண்டதுதானுங்கோ கவலையாக்கிடக்கு.

தாதிமாரோ, வைத்தியர்மாரோ ஏதும் கேக்கப் போனால், அவையைப் பற்றிக் கொம்பிளைன் பண்ணி டிவிசன் மாத்திப் போடுவினம். கையாடல் செய்யிறவைக்கு உவ்வளவு துணிச்சல் எண்டால் உவைக்குப் பின்னாலை சில பெரிய கைகளும் இருக்கத்தானுங்கோ வேணும். இல்லாட்டிப் எங்கட சனத்துக்கு வந்த கோழி இறைச்சியை பதுக்கிப்போட்டு மாட்டு இறைச்சியைச் சமைச்சுக் குடுப்பினமோ எண்டு சனம் கேக்கினமுங்கோ. எங்கட சனம் மாட்டிறைச்சி சாப்பிட மாட்டினம் எண்டதாலை தொண்டு நிறுவனம் ஒண்டு கோழி இறைச்சி குடுத்திச்சிதாம். அதைத்தான் சமையல் பிரிவுக்காரர் மெஜிக்கில மாட்டிறைச்சியாக்கிச்சினமாம். பாத்தியளோ, எங்கட சனம் எப்பிடி எப்பிடி டிசைன் டிசைனான கொடுமைகளை அனுபவிக்கினமெண்டு. யாரிட்டையுங்கோ சொல்லுறது.

**தமிழகத்தில** ராமதாஸும், புலம்பெயர்ந்த எங்கட உறவுகளும், ஐ.நா. சபையை எங்கட பிரச்சினையில தலையிட வேணும் எண்டு கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கினமுங்கோ. போதாக்குறைக்கு, கால் அடி மன்னன் விஜயகாந்தும் ஐ.நா. சபைக்குத் தந்தியடிங்கோ எண்டும் சொன்னவர்.

சரி நாலு பேர் சொல்லுறாங்களே எண்டு மனித உரிமைகள் விவகாரச் செயலாளர் நாயகத்தை ஐ.நா. சபை நாட்டுக்கு அனுப்பிச்சுது. அவர் வந்து நிக்கேக்கையே ரெண்டெழுத்தார் விமானத் தாக்குதல் நடத்தினம். ரெண்டெழுத்தாரின்ர பழக்கம் சரியில்லையுங்கோ. 2002க்குப் பிறகு அநேகமான பொழுதுகளில அவதானிச்சா இருப்பியள், ராஜதந்திரிகள், பிரமுகர்கள் நாட்டுக்கு வந்திருக்கேக்கதான் தாக்குதல் நடத்தியிருக்கினமுங்கோ. உது தங்கட வீரத்தைக் காட்டுகிற முயற்சியெண்டு அவை சொன்னாலும் வந்திருந்தவைக்கு "டெரரிஸ்ட் எக்டிவிடிஸ்" எண்டுதான் தெரிஞ்சுதுங்கோ.

உந்தச் சூழலும் ரெண்டெழுத்தாரை சர்வதேசம் நம்ப முடியாமல் போனதுக்கும், தடைகளைப் போடுவதற்கும் காரணமாக அமைஞ்சிட்டுதுங்கோ. உதை ஹோம்ஸ் ஐயா நடத்தின ஊடகவியலாளர் மாநாட்டிலை ஓப்பினாகவே சொன்னவருங்கோ. தான் வந்திருக்கேக்கையே ரெண்டெழுத்தார் உப்பிடித் தாக்குதல் நடத்தினது தனக்கு ஆச்சரியமளிப்பதாக இருந்துச்சுது எண்டாருங்கோ. சட்டி சுட்டதடா கை விட்டதடா" எண்ட பாட்டு இப்ப ரெண்டெழுத்தாரின்ர சிட்டுவேஷனுக்கு ரொம்பச் சூட்டபிளாக இருக்குதெல்லோ..

**ரெண்டெழுத்தாரின்ர** தலைவர் நாட்டிலை இல்லை. அவர் தென் இந்தியாவுக்குப் போயிருப்பார் இல்லாட்டில் ஆபிரிக்கா நாடொன்றுக்குப் போயிருப்பார் எண்டு சிலபேர் சொல்லிக்கொண்டு இருந்திச்சினமுங்கோ. எப்பிடிப் போயிருப்பார் எண்டு கேட்டால், அவையிட்ட நீர்மூழ்கிக் கப்பல் இருக்குது. விமான் இருக்குது. கப்பல் இருக்குது. போகணும் எண்டு தலைவர் முடிவு செய்திட்டால் போயிடலாம். எல்லாம் தயாரிப்பிலதான் இருக்குது எண்டெல்லாம் கதையளந்திச்சினமுங்கோ.

ஏதோ இவையே போய் நிண்டு செய்து குடுத்தவை மாதிரிச் சொல்லிச்சினமுங்கோ. எனக்கு என்னவோ சனங்கள் ஒரு பத்தாயிரம் பேராவது தங்கட பிடியில இருக்கும் வரைக்கும் பங்கர் தலைவர் உங்கனைக்க தான் பதுங்கிக் கொண்டு நிக்க வேணும். உள்நாட்டிலையும் சரி, வெளிநாட்டிலையும் சரி தம்பியார் தலையைக் காட்டினார் எண்டால் கழுகு, சோழிக் குருவி எண்டு தூக்கிக் குமாட்டி போலை கவ்விப் போடுவாங்கள்.

ஆளுக்கு அவ்வளவு மரியாதை இருக்குது. ஆள் சும்மா ஆள் இல்லையுங்கோ. இன்டர் நெசனல் கிரிமினல் தெரியுமோ. எண்டதாலை தம்பியார் ஆகாயத்தாலை போனாலும், கடலுக்குள்ளாலை போனாலும் நிலத்துக்கு வரத்தானேங்கோ வேணும். சிலவேளை தம்பியார் பணத்தை பொலாராக வீசி ஆபிரிக்க நாடுகளின் கண்களைக் கட்டினாலும் விஷயம் கசிஞ்சுதெண்டால் பாரதநாடு சும்மா இருக்க மாட்டா. அவாவின்ர கோபத்துக்கு ஆளாக நேரடலாம் எண்ட பயமும் இருக்கும். விலைமங்கத்தை யாரும் விலை குடுத்து வாங்கி வீட்டுக்க வச்சிருப்பினமோ.

**சகத்தமைப்புக்குள்ள** குடுமிச் சண்டை வன்னிச் சண்டை மாதிரி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகுதாமுங்கோ.

அதுவும் குடுமிச் சண்டை எண்டால் மண்டையில மூளையும் இல்லாத முடியும் இல்லாதவைக்குள்ள எப்பிடிக் குடுமிச் சண்டை சாத்தியம் எண்டு யோசிப்பியள்.

அப்பிடியெல்லாம் ரொம்பவும் லொஜிக்காக யோசிக்காதேங்கோ. ஒரு குஜாலுக்காகச் சொல்லுறது தானே. கொஞ்சக்காலமாக கூத்தமைப்புக்காரரை நோக்கி என்ன கேள்வி வந்தாலும் ஆக்கள் ஆட்டு இறக்குப்பட்டவை மாதிரி இருக்கினமாம். வாய் திறக்க மாட்டம் எண்டினமாம்.

சம்மந்தமானவர் மட்டும்தானுங்கோ. வாய் திறக்கச் சம்மதிக்கிறவராம். ஏன் உவர் மட்டும் வாய் திறக்கிறார். அதுவும் ரெண்டெழுத்தாரைப் பற்றி கேள்வி கேட்டால் அதை மறுக்கவும் பின்வாங்குகிறார். இவருக்கும் ரெண்டெழுத்தாருக்கு எதிரானவருக்கும் இடையில ஏதோ லிங் இருக்குதாக்கும் எண்டு சம்பந்தமானவரோடை சர்ச்சைப்படுகினமாமுங்கோ.

மனிசர் மாதிரி மரியாதையாக கதைக்கப் பேசுங்கோ. மற்றவை மதிக்கிற மாதிரி நடந்துகொள்ளுங்கோ. எண்டு தன்ர எக்ஸ்பீரியன்ஸில சொல்லேலக் கண்டு கொள்ளாமல் ஆடிக்கொண்டனீங்கள் இப்ப அடங்கிப்போய் இருக்கிறியள். இந்த வருஷமும் எப்பிடியும் பார்லிமென்ட் எலக்ஷன் வரும். அப்ப தெரியும் உங்கட ஆட்டத்தின்ர ரிசல்ட் எண்டு சம்மந்தமானவர் காட்டை அடிக்கிறாராமுங்கோ.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட புலிகள்!

**இந்த** நிலையில், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் மற்ற இயக்கத்தினர், புலனாய்வுக் குழுவினர் என்றெல்லாம் போட்டுத் தள்ளுவதைப் புலிகளால் எப்படி நிறுத்த முடியும். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல, புலிகளுக்கு யாரைப் பார்த்தாலும் எதிரி என்று தெரியும் நிலையில் எப்படி ஆயுதங்களைக் கீழே வைக்க முடியும்.

## இந்தியா என்ன இளிச்சவாயனா?

இந்தியா வர வேண்டும் என்று கூச்சல் போடுபவர்கள் என்ன எண்ணத்தில் கூப்பிடுகிறார்கள்? இந்தியா தன் நலன்களுக்காகத் தான் வருமே தவிர, புலிகளின் நலனுக்காக அல்ல. வந்தாலும் இந்தியா சில விடயங்களில் எந்தவித சமரசத்துக்கும் இடமில்லாத வகையில் தெளிவாக இருக்கிறது.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் உட்பட்ட முறையிலான தீர்வு.

சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கம், ஏகபிரதிநிதித்துவம் யாருக்கும் இல்லாமல் சகல முக்கிய அரசியல் கட்சிகளுக்குமான பிரதிநிதித்துவம். இத்தோடு, அரசியல் தீர்வுக்குப் பின்னாலான ஜனநாயக நீரோட்டக் கலப்பின் பின் அனைத்துக் குழுக்களினதும் ஆயுதக் களைவு.

இந்த விடயங்களில் எது புலிகளுக்குச் சாதகமாக, புலிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது? ஒன்றுமே இல்லை.

புலிகள் எதிர்பார்த்தது எதுவோ, நடப்பது வேறாக இருக்கிறது. இப்போது இந்தியாதான் புலிகளுக்கான ஆயுத மற்றும் பொருள் விநியோகங்களைத் துண்டித்ததன் மூலம் புலிகளின் கழுத்தைக் கையால் சுத்தி கையை மடக்கி வைத்திருக்க, மகிந்த அரசு புலிகளுக்கு மூக்குடைத்துக்கொண்டிருக்கிறது.

துகிலுரிந்த துச்சாதனிடம் இருந்து காப்பாற்ற வேண்டி அபயக் குரல் எழுப்பிய திரௌபதி போல, 'சிங்கள இராணுவம் தமிழ்ப் பெண்களைக் கட்டி வைத்துக் கதறக் கதறக் கற்பழிக்கிறான்' என்று கூப்பிட்டவுடன் ஓடிவர இந்தியா என்ன கோபாலபுரக் கிருஷ்ணனா? அல்லது வேண்டியபோது வேலை வாங்கிக்கொண்டு, வேண்டாதபோது அடித்து விரட்டிவிட இந்தியா என்ன தோட்டக்காட்டிலிருந்து கொண்டு வந்த வேலைக்காரனா?

## அபயக் குரலுக்கு யார்தான் வருவார்?

இதன் மறுபுறத்தில் இந்தியா வர வேண்டும் என்று எந்த 'மூஞ்சியை' வைத்துக்கொண்டு இவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்? தலைவர் வெறும் 'துன்பியல் சம்பவம்' என்றவுடன் இந்தியா எல்லாவற்றையும் மறந்துவிடுமா? தலைவரே, வரலாறுதான் தன் வழிகாட்டி என்று சொல்லும் போது, இந்தியா கடந்த கால வரலாற்றை அவ்வளவு சுலபமாக மறந்து விடுமா?

ஒப்பந்தத்தைக் குழப்பியடித்தது முதல் பிரேமதாசவோடு சேர்ந்து யுத்தம் செய்தது வரைக்கும், நான்காவது இராணுவத்தை விரட்டிய கூச்சல் முதல் ராஜீவ் கொலை வரைக்கும் இந்தியா எப்படி மறக்கும்?

இந்தியா மட்டும் அல்ல, முழு உலகமுமே இன்று எட்டி நிற்பதன் காரணம் என்ன?

தேசியத் தலைவரின் நன்றி உணர்வு!

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதும், உதவ வந்த கரங்களை உதறித் தள்ளுவதும் தவிர, தேசியத் தலைவர் இதுவரை செய்தது என்ன? எந்தக் காலத்தில் தலைவர் 'மனிசரைத் தேவை' என்று நடந்திருக்கிறார்? உயிரைக் காப்பாற்றியவர்களையே கொலை செய்தவரின் அபயக் குரலுக்கு யார்தான் ஓடி வருவார்?

ஒப்பரேஷன் லிபரேஷனில் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றி விட்ட ராஜீவுக்கு என்ன நன்றிக்கடன் செய்தார்கள், பின்னர் அதே இந்தியப் படையிடம் இருந்து காப்பாற்றிவிட்ட பிரேமதாசாவுக்கு என்ன நன்றிக்கடன் செய்தார்கள் என்று எல்லோருக்குமே தெரியும்.

பின் விளைவு பற்றிய தீர்க்கதரிசனம் இல்லாமல் மூர்க்கத்தனத்துடன் இந்தியாவை மட்டுமல்ல, எல்லோரையும் பகைத்துக்கொண்டதற்கு இப்போது அனுபவிக்கிறார்கள்.

எனவே, கியூறியஸின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமான புலம் பெயர்ந்த செம்மறிக் கூட்டமே,

செம்மறி மேய்ப்பர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? பாலையும் எண்ணெயையும் பிழிந்த பின்னான பிண்ணாக்கையும், அரிசியிலிருந்து மிஞ்சிய தவிட்டையும், கஞ்சியையும்தான் உங்களுக்கு ஊட்டுகிறார்கள். தாங்கள் தின்னாத புல்லை உங்களுக்கு மேயவிடும் இவர்கள், எப்போதாவது தங்கள் பயிர்களைக் கடிக்க உங்களை விட்டதுண்டா? கஞ்சி வைக்கும் அவர்கள் உங்களுக்குச் சோறு வைத்ததுண்டா? உங்களைக் கறந்து, பின்னர் கசாப்புக்கடைக்காரனிடம் விற்று விடுவதற்காகத்தான் உங்கள் மீது அந்த மேய்ப்பர்கள் அக்கறை கொள்கிறார்கள். இதைத் தான் வெளிநாடுகளில் இந்த ஆய்வாளர்களும், புலிக் குண்டர்களும் செய்கிறார்கள். அதிலும், உங்கள் தலைமை மேய்ப்பர்கள் புலிகள் என்றால், சொல்லவா வேண்டும்? பசி எடுக்கும் போதெல்லாம் உங்களையும் புசிப்பதுதான் புலியின் வேலை.

இதையெல்லாம் தெரிந்துகொண்டு அந்த மேய்ப்பர்களின் பின்னால் செல்லும் உங்களுக்கு, நாங்கள் சொல்பவற்றை வாசித்து விளங்கிக் கொள்ளும் அளவுக்குப் பகுத்தறிவோ, சிந்தனையாற்றலோ இருக்கும் என்று எங்களுக்கு எள்(ளுப் பிண்ணாக்கு) அளவும் நம்பிக்கையில்லை. இதில் உள்ள உண்மைகள் உங்களைச் சுடும் அளவுக்கு உங்களுக்கு மானம், ரோசம், சூடு, சுரணை ஏதாவது இருக்கும் என்றும் நாங்கள் நம்பவில்லை.

நீங்கள் இதை வாசிக்காவிட்டாலும், உங்களை மேய்க்கிற இந்தப் பேப்பர், ரி.வி., ரேடியோக்கார ஆய்வாளர்களும், உங்களைக் கறக்கிற இந்தப் புலிக் கூட்டமும் வாசித்துவிட்டு, 'கள்ளனுக்குக் தேள் கடிச்ச மாதிரி' நெளிந்துகொண்டிருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். புலிகள் சொன்னதை அப்படியே உங்களுக்குத் திருப்பிச் சொல்லும் அந்தக் கூட்டம் சொல்வதை 'நுனிப்புல் மேய்ந்து' விசுவசிப்பதுதான் மிஞ்சி மிஞ்சிப் போனா உங்கள் அரசியல் அறிவு.

மிஞ்சிப் போனால், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

'உவங்கள் துரோகியள், பொய் சொல்லுறாங்கள்' என்று சொல்லிவிட்டுத் தூங்கப் போய் விடுவீர்கள். அல்லது உங்கள் மேய்ப்பர் கூட்டம் உங்களுக்குச் சொல்லித் தந்ததை, அப்படியே விழுங்கி, வாந்தி எடுத்து, 'உவங்களுக்குச் சிங்களவன் காசு குடுக்கிறான், இந்தியா காசு குடுக்குது, உவங்கள் றோவின்ரை ஆக்கள், சி.ஐ.ஏ.யின்ரை உளவாளியள்...' என்று வாய்க்கு வந்தபடி பிதற்றுவீர்கள்.

கடந்த இருபது வருடங்களாக எங்களைப் பற்றிச் சொல்லாத எதையும் புதிதாக அவர்கள் உங்களுக்குச் சொல்லித்தரப் போவதில்லை.

எங்களுக்கு மடியில் கனமில்லை. அதனால் மனதில் பயமும் இல்லை.

உங்களில் பலர், 'ஐயோ, தலைவர் எத்தனை பேரைப் போட்டுத் தள்ளிறார், உவங்களையும் போட்டார் எண்டால், உடன ஈழம் கிடைக்கும்' என்று அங்கலாய்ப்பீர்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். உங்கள் புண்ணாக்கு மூளைக்குள் இதை விட்டா வேறு எந்த மணி ஐடியாதான் உதிக்கும்?

இந்தியா வந்திறங்கும் என்று நீங்கள் கனவு கண்டதுபோல, நீங்கள் இதையெல்லாம் வாசித்துத் திருந்தி, புலிகளுக்குப் பணம் கொடுப்பதை நிறுத்தி, இந்திய அனுசரணையுடன் ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சுவார்த்தைக்குப் போகும்படி நிர்ப்பந்திக்கப் போகிறீர்கள் என்ற கனவும் எங்களுக்கு இல்லை.

புலிகள் கெயார், நிவாரணம் என்று புதுப்பெயரில் எல்லாம் மாறுவேசத்தில் வரும்போது காசை அள்ளிக் கொடுக்கத்தான் போகிறீர்கள்.

பொங்குதமிழ், கவன ஈர்ப்பு என்று பட்டிபட்டியாக அள்ளுப்பட்டுப் போய், 'சர்வதேச பயங்கரவாதி' என்று தடை செய்த நாடுகளில் தலைவரின் படத்தைத் தூக்கிக் காட்டி, 'இந்தா பார், துள்ளி வரும் வேங்கைப் படையை' என்று சுய இன்பம் கொள்ளத்தான் போகிறீர்கள்.

புதுப் பெயர்களில் கொண்டாடப்படும் மாவீரர் தினங்களில், கள்ளிப் பலகையில் அடித்த மாவீரர் கல்லறையைத் தொட்டுக் கும்பிட்டு, தவறாமல் பக்கத்தில் வைக்கப்பட்ட உண்டியலிலும் காசு போட்டு பிறவிப் பெரும்பயனை அடையத்தான் போகிறீர்கள்.

'இந்தியா வராட்டிப் பறவாயில்லை. எங்களுக்கு ஒருத்தரும் தேவையில்லை, எங்களுக்குத் தலைவர் இருக்கிறார். அவருக்கு நாங்கள் இருக்கிறம். அவர் எங்களை உதவி செய்யச் சொல்லிக் கேட்டிருக்கிறார்' என்று, 'காசைக் குடுத்தால் சரி, தம்பி மிச்சத்தைப் பாத்துக்கொள்ளுவார்' என்று ஏஜென்சிக்காரன் முதல் சீட்டுக்காரன் வரை கொடுத்து ஏமாறுகிற நீங்கள், தலைவருக்கும் கொஞ்சக் காசைக் கொடுத்து, 'தலைவர் மண்டையில போட்டு அடிச்சுப் பறிப்பார்' என்று கனவு காணத்தான் போகிறீர்கள்.

செப்பரேட், கள்ளப் பேப்பர் வேலை, வட்டி, கள்ள கிறெடிட் காட், வெல்பெயர் மோசடி என்று சட்டத்திற்கும் மனச்சாட்சிக்கும் புறம்பான சகல 'நாக்க முக்கா' வழிகளிலும் எந்தக் கூச்ச நாச்சமுமின்றி காசு சேர்த்து, அதில் 'அஞ்சைப் பத்தை ஐயரிட்டை குடுத்து அர்ச்சனை செய்து' ஆனானப்பட்ட கடவுளையே பேய்க்காட்டுகிற உங்களுக்கு, உந்தப் புலிகளைப் பேய்க்காட்டுறது பெரிய வேலையே?

உண்மையில் இன்று அவலப்பட்டு நிற்கும் தமிழ் மக்களையும், ஏன் புலிகளையும், காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால், நீங்கள் சில உண்மைகளை உணர்ந்துகொள்ள வேண்டும்.

முதலாவது, தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு முழுக்கப் புலிகளே காரணம்.

இரண்டாவது, இன்று மாட்டுப்பட்டுத் தவிக்கும் புலிகளின் நிலைக்கும் புலிகளைத் தவிர வேறு ஒருவரும் காரணமில்லை.

மூன்றாவது, புலிகள் இருக்கும் வரையில் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வோ, விமோசனமோ, ஏன் குறைந்த பட்சமாய் இந்திய உதவியோ கிடைக்கப் போவதில்லை.

உங்களோடு ஒட்டிக்கொண்டிருக்கும் சுத்திஜீவிகளும், புலியின் பெயரை வைத்துப் பிழைப்பு நடத்தும் ஒட்டுண்ணிகளும், 'இண்டைக்கு அவங்கள விட்டால், தமிழருக்கு என்ன கதி?' என்று விடுகிற புலுடாவை நம்பி, 'அதுதானே, அவங்கள் அழிஞ்சு போனால், சிங்களவன் அழிச்சுப் போடுவான்' என்று பிற்பாட்டுப் பாடுகிறீர்கள். அதற்கு நாங்கள் பதில் சொல்ல முன்னால், ஏகபிரதிநிதிகளான புலிகள் கடந்த 25 வருடங்களாக இருந்து 'என்னத்தைக் கிழிச்சார்கள்' என்பதைச் சொன்னால், நாங்கள் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

இதுவரை காலமும் புலிகள் எடுத்த முடிவுகள் எல்லாமே தமிழ் மக்களின் நலனுக்காக எடுக்கப்பட்டவைதான், தலைவரின் சுயநலத்திற்காக எடுக்கப்பட்டவை அல்ல என்பதை நிரூபித்து எங்களை 'மனந்திருப்பினால்' 'காணாமல் போன ஆடுகள் திரும்பவும் வந்து சேர்ந்தது மாதிரி, நாங்களும் 'தண்ணீரில் ஞானஸ்நானம்' பெற்று, உங்கள் மேய்ப்பர்களின் பின்னால் அவர்கள் காட்டுகிற பசும்புற்றரைகளுக்கும் நீர்ச்சுனைகளுக்கும் பட்டிபட்டியாய் வந்து புலிகளுக்கு அல்லேலூயா பாடத் தயார்.

அன்றைக்குத் தந்தை செல்வா சொன்னார்....

தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று,

ஆனால்...

அந்தக் கடவுள் கூட இன்றைக்குப் புலிகளைக் காப்பாற்ற ரெடியில்லை.

இதற்குள் நீங்கள் அநியாய வழியில் சேர்த்த பணமா புலிகளைக் காப்பாற்றிவிடப் போகிறது?

நன்றி:- தாயகம்




என்னால் நிருபித்துகாட்டும் மலையாள மாந்திரிக சக்தியால்!

(1)தொழில் வெற்றியின்மை, (2)வியாபாரத்தில் விருத்தியின்மை, (3)கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு (4)தாம்பத்தியவாழ்க்கையிலுள்ள பிரச்சனைகளுக்கு (5)திருமணம் தடைப்பட்டுக்கொண்டு இருத்தல், ஸ்திரீ, புருஷ வசியம் (6)குழந்தை பாக்கியமின்மை, (7)வெளிநாடு செல்லத்தடை, (8)மனக்குழப்பம், (9)பணமிருந்தும் மன நிம்மதியின்மை, (10)கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை, (11)படிப்பு பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை, (12)முயற்சியிருந்தும் முன்னேற்றத்தில் தடை, (13)சூனியக்கோளாறு தீயசெய்வினைகள், (14)அதிஷ்ட வாழ்வு சொத்து சேர, இன்னும் உங்கள் சகல நிறைகுறைகளுக்கும் என்னை சந்திக்கலாம், (15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனனஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, ஜாதக கணிப்புக்கும் மட்டும் கட்டணம் ரூபா 2700/- தபால் கட்டணம் 350/-

வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை உண்டு

அருள் ஞானசித்தர் தேசபந்து, கௌரவ பேராசிரியர், ஜோதிட கலாநிதி P.K.SAMY(J.D.G.A.N) ஜீ

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்

No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13

011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831

நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்,

இல 33,கண்டி வீதி, நுவரெலியா 052 2222508.


## நெத்தியடி

**பெப்ரவரி** 11, 12, 16, 20 ஆம் திகதிகளில் 1500 வரையான காயமடைந்த பொதுமக்களை ஏற்றிக்கொண்டு கப்பல் முல்லைத்தீவிலிருந்து திருமலைக்குச் சென்றுள்ளது.

செய்தி.

**83 இல் கப்பலில் ஏற்றி அனுப்பியது சிங்கள இனவெறி, இன்று தமிழ் இனவெறி தமிழ் மக்களைப் பிணங்களாக ஏற்றி அனுப்புகிறதா!**

**மக்கள்.**

**உரிமைகளை** மீட்டெடுப்பதற்காகப் போராட்டத்தை ஆரம்பித்த விடுதலை அமைப்பு, மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய நிலையில் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சு மேடைக்கு ஒருபோதும் செல்லமாட்டாது.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேஷன்.

**கீழே வைப்பதற்கு ஆயுதங்கள் இல்லாது போகும் வரை மக்களைப் பலி கொடுப்பதுதான் உங்கள் தீர்மானமா?**

**மக்கள்.**

**கொழும்பிலுள்ள** பிரபல பாடசாலையில் 28 தமிழ் மாணவர்கள் ஒழுக்கம் தவறி நடந்தார்கள் என்று கூறி பெரும்பான்மையின ஆசிரியர் ஒருவர் மோசமாகத் தாக்கியதில் மாணவர்கள் படு காயம்.

பெற்றோர்.

**வடக்கிலும் தெற்கிலும் தனி மனிதனின் வெறித்தனத்திற்குப் பலியாவது தமிழ் இளைஞர்கள்தானா?**

**மக்கள்.**

**14 வயதுச்** சிறுவர்கள் புலிகளுடன் இணைக்கப்படுகிறார்கள் எனப் பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளமையானது முற்று முழுதான பொய்ப்பிரசாரமாகும்.

வன்னித் தமிழர் பேரவை.

**புலிகளுடன் இணைத்துக் கொல்லக் கொடுப்பதற்கு வயது வேறுபாடே இல்லாதபோது, 14 வயதுச் சிறுவர்கள் எனக் குறிப்பிடுவதை யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்களே!**

**மக்கள்.**

**13ஆவது** திருத்தச் சட்டம் எவ்வாறு முறியடிக்கப்படும் என்பதை உய்த்துணர முடியாதளவுக்கு ஜெயவர்த்தனா பேதை அல்ல.

பத்திரிகைக் கருத்து.

**13ஆவது திருத்தச் சட்டம் முறியடிக்கப்பட வரிந்துகட்டி நிற்கும் தமிழ் தரப்பினர் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

**மக்கள்.**

**ஜெனீவாவிலுள்ள** ஐ.நா. அலுவலகம் முன்பாக ஐரோப்பியத் தமிழ் இளையோர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டது கண்டன ஆர்ப்பாட்டம்.

ஜெனீவா.

**பெரியோரின் நோக்கம் புரியாத, உண்மை தெரியாத இளையோரை ஒன்று திரட்டுவது மிகவும் சுலபம்தானே!**

**மக்கள்.**

**சாவின்** விளிம்பிலுள்ள ஈழ உறவுகளுக்காக எங்கள் குரல் ஓயாது, போராட்டம் தொடரும். தமிழனாக இருப்பவன் புலிகளை ஆயுதங்களைக் கீழே போடும்படி சொல்ல முடியாது!

பழ.நெடுமாறன், தமிழக அரசியல்வாதி.

**தமிழனாக இருப்பவனுக்குப் புலிகளின் குரல், குணம் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ?**

**மக்கள்.**

இன்னொருவர் பார்வையில்



# வன்னி அகதிகளின் அவல நிலை!

**உலகம்** என்றுமே நியாயப்படுத்த முடியாத மனிதப் பேரழிவு நிகழ்ந்த இடம் டர்பூர். சூடானிய அரசாங்கம் பாரபட்சமாகவும், அசட்டையாகவும் நடத்துவதாகக் குற்றஞ்சாட்டிக் கிளர்ச்சிக் குழுக்கள், 2003 ஆம் ஆண்டு அரசுக்கெதிராக ஆயுதமேந்தின. அதற்குப் பின்னர் ஏற்பட்ட யுத்தத்தில் மூன்று இலட்சம் மக்கள் வரை இறந்தனர்; 25 இலட்சம் மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். கடந்த வருடம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம், சூடான் அரசாங்க அமைச்சரொருவரைக் கைது செய்யுமாறு பிடிவிறாந்து பிறப்பித்தது. அத்துடன் அரசாங்கத்தின் பின்புலத்துடன் இயங்கும் ஜன்ஜாவீட் குடிப்படையின் தளபதியொருவரையும் கைது செய்வதற்குப் பிடிவிறாந்து பிறப்பித்தது. டர்பூரில் இடம்பெற்ற மிக மோசமான கொடூரங்களுக்கு ஜன்ஜாவீட் குடிப்படையே பொறுப்பெனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆனால் இவ்வாறான ஒரு நிலைமைக்கு ஒத்ததான சூழ்நிலை எமது நாட்டில், வன்னியில் நிலவுகிறதென்று சொல்ல முடியுமா? ஒன்று, ஒன்றரை இலட்சம் மக்கள் சிக்கியுள்ள வன்னிச் சூழலில் நிலைமைகளைக் கையாள்வதற்கு விஷேட பிரதிநிதியொருவரின் தலையீடு தேவையென்ற கோரிக்கை எழுப்பப்படுகிறதா?

இடம்பெயர்ந்தவர்களுக்கெனப் பல பத்து இலட்சக்கணக்கான டொலர்கள் வாரிக் கொட்டப்பட வேண்டும் என்பதனை யாரும் மறுக்க முடியாது. மனித குல வரலாற்றில் அதிலும் முன்னெப்பொழுதையும்விட மோசமான இன்றைய நிலையில் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் போன்ற அப்பாவிகளின் துயரங்கள், தத்தமக்கெனச் சொந்த நிகழ்ச்சி நிரலைக்கொண்ட பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பெருமளவு நிதியை ஈட்டித் தரும் ஒன்றாக விளங்குகிறது. அரசாங்கத்துக்கு எதிராக மிகவும் கபடத்தனமான அரசியல் விளையாட்டு நடத்தப்படுவதையும் ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கு உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களைப் பயன்படுத்துவதால் ஒருபோதுமே இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படப் போவதில்லை. இது முன்னரும் பயன்படுத்தப்பட்டு வந்த தந்திரோபாயமே. அத்துடன் புலிகளின் தோல்வி பல சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனாலேயே இவ்வாறான தந்திரோபாயம் பிரயோகிக்கப்படுகிறது.

புலிகளின் பிடியிலிருந்து தப்பியோடிவரும், இடம்பெயர்ந்தவர்களை அரசாங்கம் பராமரிக்க வேண்டிய கட்டாயக் கடமையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கூறவரவில்லை. ஆனால் பெரும்பாலான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் அரசாங்கம் இருப்பதையே களத்திலிருந்து கிடைக்கும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் அவல நிலையை அசட்டை செய்யக் கூடாதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. மன அதிர்ச்சியுடனும் இரு தரப்பு மோதல்களுக்கிடையில் மிக மோசமாகச் சிக்கியுள்ள நிலையிலும் பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் சிக்கித் தவித்தனர். இவர்கள் யுத்தத்தினால் சலிப்படைந்துள்ளனர். மிகக் கொடூரமான பயங்கரவாதக் குழுவான புலிகளிடம் பல தசாப்தங்களாகச் சிக்கியிருந்தவர்கள் இவர்கள். இந்த நிலை முடிவுறுவதால், இறுதியில் அவர்களால் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக் கூடியதாக இருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை அரசாங்கம் நிச்சயமாகச் சவால் மிக்க பணியொன்றினை எதிர்கொள்கிறது. உலகம் இன்று பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில் அபிவிருத்தியடைந்து

**வன்னியில் இடம்பெயர்ந்து, கஷ்டங்களை எதிர்கொள்ளும் அப்பாவித் தமிழ் மக்களின் நிலை குறித்து சகுந்தலா பெரேரா என்ற சிங்களப் பெண் பத்திரிகையாளர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகிறது. "வன்னியிலுள்ள அப்பாவிகள் கொடுக்கும் விலை என்ன?" என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை கடந்த பத்தொன்பதாம் திகதி கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' ஆங்கிலத் தினசரியில் பிரசுரமாகியிருந்தது.**

வரும் நாடொன்றினைச் சேர்ந்த அரசாங்கமொன்றுக்கு, ஓர் இலட்சம் மக்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் நாளாந்த அடிப்படையில் நிறைவேற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. பாரிய இராணுவ நடவடிக்கையும், பாரிய பல உட்கட்டமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இடம்பெயர்ந்த ஒருவராவது பட்டினியால் இறக்கும் நிலைக்கு அரசாங்கம் அனுமதிக்காதது பாராட்டுக்குரியது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தப்பியோடிவரும் மக்களை முதலில் எதிர்கொண்டு வரவேற்பவர்கள் படையினராவர். இவ்வாறு வருபவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் பற்றி அறிந்துகொள்வதற்காக முதலில் அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உடனடியாக மருத்துவ உதவி தேவைப்படுபவர்கள் திருமலை அல்லது குருநாகல் ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் இவர்களுக்கு ஊட்டச் சத்துக்கள், உடுபுடைவைகள், சமைத்த உணவுகள் ஆகியவை இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன.

இரண்டு நாட்களுக்குள் இவர்கள் வவுனியாவுக்குக் கூட்டிச் செல்லப்படுகின்றனர். இங்கே அவர்கள் வவுனியா அரசாங்க அதிபரின் கண்காணிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டு, பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர். தற்காலிக வதிவிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகச் சுமார் ஐம்பது ஏக்கர் காணி ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் இவர்கள் அங்கே அமைக்கப்படும் நான்கு இடைத்தங்கல் கிராமங்களில் ஒன்றுக்கு இடமாற்றப்படுவர். இந்த இடைத்தங்கல் கிராமங்களில் தற்காலிக வங்கி வசதிகள், பிரதேச சபையின் உப தபாலகங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவை இருக்கும். உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இறுதிக் கட்டமாக இந்த மக்கள் தமது ஆரம்ப வாழ்விடங்களில் குடியேற்றப்படுவர்.

இந்தக் கட்டுப்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. ஆதலால், ஆரம்ப நாட்களிலிருந்தே இந்த விமர்சனங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருப்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆதலால் இன்று சர்வதேச சமூகத்தின் அக்கறைகள் சந்தேகத்துக்கு உட்பட்டுள்ளன. இடம்பெயர்ந்தவர்களைச் சென்று பார்வையிடுவதற்கு மக்கள் அனுமதிக்கப்படமாட்டார்களென்று அரசாங்கம் மீண்டும் கூறியுள்ளது. முக்கிய பிரமுகர்கள் கூடச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்களென்று கூறப்படுகிறது. இவ்வாறான விஜயங்கள் அந்த இடங்களில் பணிபுரிபவர்களுக்குத் தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்துமென்று அரசாங்கம் கூறுகிறது.

இந்த முகாம்கள் இராணுவத்தினாலேயே நடத்தப்படும் என்பதும், முகாம்களைச் சுற்றிக் கம்பி வேலிகள் போடப்பட்டிருப்பதால் அங்குள்ளவர்கள் வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. அரசாங்கத்தின் இந்தக் கூற்று நியாயமற்றது என்பதையே இவை காட்டுகின்றன. தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்களின் பாதுகாப்புக்காக முகாம்களைச் சுற்றிக் கம்பி வேலிகள் போடப்பட்டுள்ளன என்று அரசாங்கம் கூறுகிறது. இதே வேளை ஆட்கள் வலுக்கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்காகவும் கம்பிவேலிகள் போடப்பட்டுள்ளன என்றும் அரசாங்கம் கூறுகிறது. கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு ஆட்கள் பலாத்காரமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்று கூறும் அரசாங்கம், முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதென்றும் கூறுகிறது.

மக்கள் இடையில் சிக்கி அவஸ்தைப்படும் பொழுது, ஒவ்வொரு சக்தியும் மேலும் மேலும் அரசியல் இலாபம் பெற முனையும். இந்தக் கொடூரச் சுற்றுவட்டம் என்றும் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கும். கடைசிப் புலி இயக்க உறுப்பினர் பிடிபடும் வரை தேடுதல் நடவடிக்கைகள் தொடரும் என்பதால், இடம்பெயர்ந்த மக்களை மூன்று வருடங்களுக்கு முகாம்களுக்குள் வலுக்கட்டாயமாக வைத்திருக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதெனக் கடந்த வாரம் செய்திகள் வெளிவந்தன. இவை உண்மையிலேயே கவலையை ஏற்படுத்தியுள்ளன. மிஞ்சி இருக்கக்கூடிய புலி இயக்க உறுப்பினர்களைக் காடுகளிலும், கிராமங்களிலும் தேடிப் பிடிப்பதற்குப் பல வருடங்களை இராணுவம் செலவிடவுள்ளதாகவும், அதுவரை இடம்பெயர்ந்தவர்களைச் சொந்த வீடுகளுக்கு அனுப்பாமல் முகாம்களுக்குள்ளேயே வைத்திருக்கப் போவதாகவும் அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளதென முகவராண்மைச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான நகல் திட்டமொன்றினை அரசாங்கம் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களுக்கும், உதவி வழங்கும் அமைப்புக்களுக்கும் சற்று நிருபமாக அண்மையில் அனுப்பியதென்றே முகவராண்மைச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. இடைத்தங்கல் முகாம்களில் நீண்ட காலத்துக்கு இடம்பெயர்ந்தவர்களைத் தடுத்து வைத்திருப்பது அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தும்.

அத்துடன் இது இனக் கொந்தளிப்பை அதிகரிப்பதற்கு வழிவகுப்பதோடு, இவ்வாறான பயங்கரவாதக் குழுக்கள் வளர்ச்சியடையவும் இடமளித்துவிடும். ஆனால் இந்தச் செய்தியை அரசாங்கம் மறுத்துள்ளது. இவ்வருடம் முடிவடைவதற்குள் எண்பது சத வீதமான மீள்குடியேற்றத்தைப் பூர்த்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண மீள்குடியேற்றத் திட்டத்தை அரசாங்கம் இதற்கு உதாரணமாகக் காட்டுகிறது. உலகிலேயே மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றத் திட்டமென்று அரசாங்கம் கிழக்கைச் சுட்டிக்காட்டுகிறது. மூதூரில் நாற்பது நாட்களுக்குள்ளும், வாகரையில் மூன்று மாதங்களுக்குள்ளும் கிட்டத்தட்ட நாற்பதாயிரம் பேர் மீளக் குடியேற்றப்பட்டனர் என்றே அரசாங்கப் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. செய்யப்படாத பல விடயங்கள் இன்னும் இருக்கின்றன. ஆனால் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த சில சக்திகளின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவுக்கு எதுவுமில்லை. டர்பூரில் தலையீட்டை உலகம் கோரியது போன்று, தலையீடுகளை இலங்கையில் மேற்கொள்ள வேண்டுமென்று கோரும் கோரிக்கைகள் எதுவுமில்லை.

இப்படிக் கூறுவதனால், சர்வதேச சமூகத்தின் உறவுகள் தேவைப்படாது என்று கூறுவதற்கில்லை. ஆனால் அவ்வாறான உதவிகள் உண்மையானவையாக இருக்க வேண்டும். ஓர் தலையீட்டுக்கான தந்திரோபாயமாக அது இருக்கக்கூடாது. இவ்வாறான தலையீடுகள், நாட்டின் இறைமையை மதிக்கக்கூடியதாக இருக்க வேண்டுமென்பது முக்கியமானது. அத்துடன் மனித உரிமைகள் தொடர்பான தமது பழைய உண்மையான நிலைமைகளையும் இந்த நாடுகள் மறந்துவிடக்கூடாது. சில நாடுகளின் மனித உரிமை விவகாரங்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படக் கூடியவையென்று சொல்வது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

எவ்வாறெனினும், வன்னி இடம்பெயர்ந்தவர்களின் நிலை குறித்து இரங்காதவர்கள் மனித நேயமே இல்லாதவர்கள். ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அதிர்ச்சிக்குள்ளாகி இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு உடனடியாகவே அரசாங்கத்தின் பராமரிப்புத் தேவைப்படுகிறது. உள்ளூரில் இடம்பெயர்ந்த ஒவ்வொருவருமே அரசின் முற்றுமுழுதான பொறுப்புக்கு உரியவர்களாவர்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

**வன்னி இடம்பெயர்ந்தவர்களின் நிலை குறித்து இரங்காதவர்கள் மனித நேயமே இல்லாதவர்கள். ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அதிர்ச்சிக்குள்ளாகி இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு உடனடியாகவே அரசாங்கத்தின் பராமரிப்புத் தேவைப்படுகிறது. உள்ளூரில் இடம்பெயர்ந்த ஒவ்வொருவருமே அரசின் முற்றுமுழுதான பொறுப்புக்கு உரியவர்களாவர். இவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களின் அவலநிலை சம்பந்தமாகத் தேவையான அக்கறை காட்டப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் உடல், உள ரீதியான நலனுக்காகத் தன்னிடமுள்ள அனைத்து வளங்களையும் அரசாங்கம் பயன்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும். இடம்பெயர்ந்தவர்களை இயன்றவரை விரைவாக அவரவர்களின் சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கட்டாயக் கடமையாகும்.**



# ஈழப்போராட்டத்தின் இரத்த சாட்சியங்கள் 103

வல்வெட்டித்துறை படை முகாமில் இருந்து படையினர் சரமாரியான ஷெல்வீச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தனர். இதனால் வல்வெட்டித்துறைக்கும் தொண்டமானாறு படை முகாமிற்கும் இடைப்பட்ட பிரதேசங்கள் எங்கும் அதிர்ந்து கொண்டிருந்தன. மக்கள் பங்கருக்குள் பாதுகாப்பாக பதுங்கி விட்டனர்.

வல்வெட்டித்துறை படை முகாமை சுற்றிப் புலிகள் இயக்கம் மட்டுமே காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதற்கு முன்பு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளிகளும் அங்கு காவலில் ஈடுபடுவதுண்டு. ஆனால் அப்போது ரெலோ இயக்கம் புலிகளால் தடை செய்யப்பட்டு விட்டது. அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினரும் அங்கிருந்து விலகிவிட்டனர்.

படையினர் வல்வெட்டித்துறை முகாமில் இருந்து வெளியேறும் போது மட்டும் அதை தடுத்து நிறுத்துவதற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளும் அங்கு செல்வதுண்டு. ஆரம்பங்களில் யாழ் குடாநாட்டில் உள்ள அனைத்து படை முகாம்களை சுற்றியும் எல்லா விடுதலை அமைப்புகளும் படையினரை வெளியே வர முடியாது தடுப்பதற்காக காவல் அரண்களை அமைத்துப் பாதுகாத்து வந்தனர்.

ஆனாலும், காலப்போக்கில் புலிகள் இயக்கத்தினர் தாம் மட்டுமே படை முகாம்களை சுற்றி நிற்க வேண்டும் என பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்தனர். யாராவது ஏனைய இயக்க உறுப்பினர்கள் காவல் கடமையில் ஈடுபட வந்தால் அவர்கள் மீது புலிகள் அமைப்பினர் அச்சுறுத்தல் விடுவது வழமை.

இந்தச் சூழலில்தான் வல்வெட்டித்துறை மக்கள் வல்லையில் தற்காலிகமாக முகாமிட்டிருந்து படையினரை தரையிறங்க விடாது தடுத்துக்கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளிடம் சென்றிருந்தனர்.

சுமார் நாற்பது பேர் வரை வல்வெட்டித்துறையில் இருந்து வந்திருந்தனர்.

தம்பி... ஆமி அடிச்சுக்கொண்டிருக்கிறான். இப்படி ஒரு போதும் அவன் அடிக்கிறதில்லை. எதற்கும் நீங்கள் வந்து இரண்டு ஷெல் அடிச்சியள் எண்டால் எல்லாம் சரி வந்து விடும் என்றனர் வல்வெட்டித்துறை மக்கள்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் புலிகளால் ஏற்படும் இடைஞ்சல்களை கருத்தில் கொண்டு கொஞ்சம் தயக்கம் காட்டினார்கள். அனாலும் பின்னர் உடன்பட்டு விட்டனர். வல்வெட்டித்துறை படை முகாமை நோக்கி ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சென்றனர்.

மோட்டர் ஷெல்களோடு வந்திறங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளை கண்டதும்

மக்கள் ஆரவாரித்தனர். ஆனால் புலிகளுக்கு அது பிடிக்கவில்லை. அப்போது புலிகளின் வடமராட்சி அமைப்பாளராக இருந்தவர் சூசை. இவரே இப்போது புலிகள் அமைப்பின் கடற்புலிகள் அமைப்பிற்கு பொறுப்பாக இருந்து வருபவர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். போராளிகளை நோக்கி புலிகளின் உறுப்பினர்கள் வந்தனர். அண்ணை வேறை இயக்கங்கள் ஒண்டையும் இந்தப்பக்கம்

> **புலிகள் இயக்கத்தினர் தாம் மட்டுமே படை முகாம்களை சுற்றி நிற்க வேண்டும் என பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்தனர். யாராவது ஏனைய இயக்க உறுப்பினர்கள் காவல் கடமையில் ஈடுபட வந்தால் அவர்கள் மீது புலிகள் அமைப்பினர் அச்சுறுத்தல் விடுவது வழமை.**

வர விட வேண்டாம் என்று சொல்லியிருக்கின்றார் என்றனர்.

யாரது அண்ணை என்றனர் ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள். எஸ். ஓ என்றனர் புலி உறுப்பினர்கள். சூசையை புலிகள் அமைப்பிற்குள் எஸ். ஓ என்றுதான் அழைப்பதுண்டு.



ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் தோழர் பத்மநாபாவுடன் தோழர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

அப்ப ஆமி வெளியே வரப்போகின்றான். நீங்களும் அடிக்கிறீர்கள் இல்லை. அடிக்க வந்த எங்களையும் அடிக்க வேண்டாம் என்று தடுக்கிறீர்கள் என்றனர் ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள். அருகில் பொது மக்களும் பார்த்துக்கொடிருந்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அங்கு நின்றிருந்த பொதுமக்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது விசனப்பட்டனர். இதற்கிடையில் அங்கு நின்றிருந்த பொது மக்களையும் அவ்விடத்தில் நிற்க வேண்டாம் என்று கூறி புலி உறுப்பினர்கள் அவர்களை துரத்தி விட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளும் அவ்விடத்தை விட்டு விலகி சென்று விட்டனர். வல்லை நெசவு சாலைக்கு அருகில் இருந்தது ஒரு சிறிய பாடசாலை. அது உடுப்பிட்டியை அண்டிய பகுதி. அங்கு தங்கியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் நிலமைகளை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை வழிநடத்திக் கொண்டிருந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் நாடு சென்று விட்டார். அந்த அமைப்பின் யாழ் மாவட்ட தளபதியாக இருந்த கபூர்தான் அப்போது இராணுவ நடவடிக்கைகளை நிர்வகித்துக்கொண்டிருந்தவர். கபூரின் சொந்தப்பெயர் பாலசுப்பிரமணியம். இவரும் யாழில் இருந்த புலிகளின் சித்திரை வதை முகாமான கந்தன் கருணையில் வைத்து பின்னர் புலிகளால் கொல்லப்பட்டிருந்தவர்.

அன்றிரவே வல்வெட்டித்துறைப் படை முகாமில் இருந்து படையினர் காவலரன்களை உடைத்துக்கொண்டு வெளியே வந்து விட்டனர். புலிகள் பின்வாங்கி விட்டனர். கரையோரப்பாதை வழியாக படையினர் தொண்டைமானாறு படை முகாமை அடைந்தனர். ஆனால் படையினர் இடையில் முகாம்கள் எதையும்

**தேடலனர்**

அமைத்திருக்கவில்லை. போராட்ட அமைப்புகளின் பலத்தை அறிவதற்கு ஒரு ஒத்திகையாகவே படையினர் அந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.


ஈ பி.ஆர்.எல்.எவ் போராளிகளும் இணைந்து நின்றிருந்தால் உண்மையில் படையினர் வல்வெட்டித்துறை முகாமில் இருந்து அப்போது வெளியே வந்திருக்க முடியாது. இந்த ஒத்திகைதான் 87 இல் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் வடமராட்சி பகுதியை கைப்பற்றுவதற்கான தெம்பை படையினருக்கு கொடுத்திருந்தது.

(சாட்சிகள் தொடரும்)

# மனித நேயர் மார்டின் லூதர் கிங்



அங்கம் -02



தோட்ட உரிமையாளர்களைக் கொன்று அடிமைகளை விடுவிக்கத் தொங்கினர். அவர்கள் முறையாக அணி திரட்டாததாலும் உறுதியான திட்டங்கள், நெறிமுறைகளின்படி செயல்படாததாலும் தோல்விகளையே தழுவினர். தலைமை தாங்கிய நாட்டர்னரும் அவரது 21 கூட்டாளிகளும் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர்.

போராளிகளில் தப்பியோடியவர்களைப் பிடிக்கத் தோட்ட முதலாளிகளும், வேலைக்காரர்களும், வேட்டை நாய்களுடன் காடுகளுக்குள் நுழைந்து தேடினர்.

அகப்பட்ட அடிமைகளைக் கொன்றனர். அரசாங்கப் படைகளும் போராட்டத்தில் அடிமைகளைப் பிடித்துக் கொன்று, அவர்களின் தலைகளை வெட்டியெடுத்து, ஈட்டிகளில் குத்தி இதர அடிமைகளைப் பயமுறுத்துவதற்காக வீதி வீதியாக ஊர்வலம் சென்றனர்.

நாட்டர்னரையடுத்து அடிமைத் தளையை உடைத்தெறியக் கிளர்த்தெழுந்தவர் **பிரெடரிக் டக்ளஸ்.** கறுப்பின அடிமைகளைக் கொடுமைப்படுத்தும் தோட்ட உரிமையாளர்களை எதிர்த்துக் குரல் கொடுத்தார். அடிமைகளை வேலைவாங்கக் கொடூரமான முறையில் நடந்துகொள்ளும் சில கொடியவர்கள் இருந்தனர். அவர்கள் 'அடிமைகளைப் பழக்குபவர்கள்' என்றழைக்கப்பட்டனர்.

அடிமை முதலாளி, தங்களை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் பிரெடரிக் டக்ளஸை அந்த அடியாட்களிடம் ஒப்படைத்தார். ஆனால், தன்னை அவர்கள் கொடுமைப்படுத்துவதற்கு முன்பே பிரெடரிக் அங்கிருந்து தப்பித்து அமெரிக்காவின் வட பகுதிக்குச் சென்றுவிட்டார். அங்கே சென்ற பிரெடரிக் அங்கிருந்து கொண்டே அடிமைகளுக்குக் கல்வி புகட்டுவதற்கும், அவர்களை அமைப்பு ரீதியாக ஒன்று சேர்ப்பதற்கும் தன் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டார்.

அடிமை நிலையை ஒழித்துக்கட்டப் பாடுபட்டவர்கள் 'ஒழிப்புவாதிகள்' என்ற பெயரில் அறியப்பட்டனர். அவர்கள் 'தலைமறைவு ரயில்வே' என்ற பெயரில் ஒரு இரகசிய இயக்கத்தை நடத்தினர். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்கள். தப்பி ஓடிவரும் அடிமைகள் ஒரு ரயில் நிலையத்திலிருந்து மற்றொரு நிலையத்துக்குப் போக இவர்கள் உதவிகள் புரிந்தனர். அந்த அடிமைகள் கனடா நாட்டிற்குப் போய்ச் சேரும் வரையில் ஒழிப்புவாதிகளின் உதவிகள் தொடரும்.

கனடா நாட்டில் அடிமை முறை கிடையாது. அடிமை ஒழிப்புக்காகப் போராடியவர்களில் அடுத்துப் புகழ்பெற்று விளங்கியவர் ஹாரிட் மேன் என்ற பெண்மணியாவார்.



மேரிலாண்டில் ஒரு அடிமைக் குடும்பத்தில் பிறந்தவர் இவர். தான் கனடாவிற்குத் தப்பியோடியதோடு நிற்கவில்லை. அங்கிருந்து பத்தொன்பது முறை அமெரிக்காவின் தென்பகுதிக்கு வந்து, அங்கிருந்து அடிமைகள் தப்பியோடுவதற்கு உதவிகள் புரிந்தவர். அத்துடன் தானே முந்நூறு அடிமைகளை அமெரிக்காவின் வடக்குப் பகுதிக்கு அழைத்துச் சென்றவர்.

அடிமைகளை விடுவிக்க ஓயாது உழைத்து வந்த ஹாரிட்ப்மேன் என்ற அந்தப் பெண்மணியை எப்படியாவது பிடித்து சித்திரவதை செய்து கொல்ல வேண்டும் என்று வெறிபிடித்த தோட்ட முதலாளிகள் தேடியலைந்தனர். அவரைப் பிடித்துக்கொண்டு வந்தாலோ, தலையைக் கொண்டு வந்தாலோ நாற்பதாயிரம் டாலர் பணம் வெகுமதியாக வழங்கப்படும் என்று அறிவித்தனர்.

160 ஆண்டுகளுக்கு முன்பு நாற்பதாயிரம் டாலர்கள் என்பது இன்று பல கோடி ரூபாய்களுக்குச் சமமாகும். ஆனால் அந்த வீரப் பெண்ணை இறுதிவரை யாராலும் பிடிக்க முடியவில்லை.

> அடிமைகளை விடுவிக்க ஓயாது உழைத்து வந்த ஹாரிடப்மேன் என்ற அந்தப் பெண்மணியை எப்படியாவது பிடித்து சித்திரவதை செய்து கொல்ல வேண்டும் என்று வெறிபிடித்த தோட்ட முதலாளிகள் தேடியலைந்தனர். அவரைப் பிடித்துக்கொண்டு வந்தாலோ, தலையைக் கொண்டு வந்தாலோ நாற்பதாயிரம் டாலர் பணம் வெகுமதியாக வழங்கப்படும் என்று அறிவித்தனர். 160 ஆண்டுகளுக்கு முன்பு நாற்பதாயிரம் டாலர்கள் என்பது இன்று பல கோடி ரூபாய்களுக்குச் சமமாகும். ஆனால் அந்த வீரப் பெண்ணை இறுதிவரை யாராலும் பிடிக்க முடியவில்லை.

1854-56-ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் கன்சாங் மாநிலத்தின் மேற்கு எல்லைப் பகுதியில் தோட்ட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஆயுதப் போர் நடைபெற்றது. இப்போராட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் வெற்றி பெற்றனர். ஆனால், அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய இராணுவத்தைக்கொண்டு தோட்ட முதலாளிகளின் ஆட்சியை ஏற்படுத்தியது.

1859-ஆம் ஆண்டில் வர்ஜீனியா மாநிலத்தில் ஜான் பிரௌன் என்ற விவசாயி, அடிமைகளிடம் ஒரு எழுச்சியை உருவாக்கினார். இவர் ஒரு ஒழிப்புவாதி. மேரிலாண்ட் மாநிலத்திற்கும் வர்ஜீனியா மாநிலத்திற்கும் இடையில் உள்ள ஹார்பெர்ஸ்பெர்ரி என்ற சிறிய நகரத்தில் உள்ள அரசாங்கக் கிடங்கை ஜான் பிரௌனும், அவனுடைய கூட்டாளிகள் 22 பேரும் கைப்பற்றினர். அந்தக் குழுவில் அவருடைய மூன்று மகன்கள், இரண்டு மருமகன்கள், ஐந்து கறுப்பின மக்களும் அடங்குவர். இந்த ஆயுதக் கிடங்கைப் பிடித்ததும், அடுத்தடுத்துள்ள தோட்டப் பகுதிகளுக்குப் போராளிகள் அனுப்பப்பட்டனர். அவர்கள் அங்குள்ள அடிமைகளை விடுவிக்க வேண்டுமென்றும், தோட்ட முதலாளிகளைப் பணயக் கைதிகளாகப் பிடிக்கும்படியும் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

இந்தச் சம்பவங்களைப் பற்றி அறிந்த அமெரிக்க அரசாங்கம், தலைநகர் வாஷிங்டனிலிருந்து ஆயுதப் படைகளை அனுப்பியது. அப்படைவீரர்கள் பிரௌனின் சிறிய ஆயுதமேந்திய குழுவை எளிதாக வளைத்துப் பிடித்துக் கைது செய்தது. இந்த மோதலில் படுகாயமடைந்த ஜான் பிரௌன் ஒரு பலகையில் வைத்து நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டார். அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

தான் தூக்கிலிடப்படுவதற்குச் சற்று நேரத்திற்கு முன் பிரௌன் சிறிதும் அச்சமின்றித் துணிச்சலாக எழுதினார்.

(தொடரும்)

நன்றி:— ஆச்சா

# ஹிலாரி கிளிண்டனின் ஆசியப் பயணத்தில் சீனாவுக்கான விஜயத்தின் முக்கியத்துவம்!

**அமெரிக்க** அரசுத்துறைச் செயலர் ஹிலாரி கிளிண்டனின் ஆசியாவுக்கான ஒரு வார கால விஜயம் முடிந்துவிட்டது. கடந்த 16 ஆம் திகதி ஜப்பானுக்கு விஜயம் செய்த அவர் இரு தினங்கள் அங்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். 18ஆம் திகதி இந்தோனேஷியாவைச் சென்றடைந்த அவர், அங்கும் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு 19ஆம் திகதி தென்கொரியாவுக்குச் சென்றார். அதன்பின் கடந்த 20ஆம் திகதி சீனாவுக்குச் சென்ற அவர், அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். வெளியுறவுத்துறைச் செயலராக அவர் பதவியேற்றபின், முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஆசியாவில் அவர் மேற்கொண்ட நான்கு நாடுகளின் விஜயத்தில் சர்வதேச ரீதியாக அதிக எதிர்பார்ப்பைத் தோற்றுவித்த விஜயமாக அவரது சீன விஜயம் அமைந்திருந்தது. இவரது விஜயத்தின் பின் செய்தியாளர்களிடம் பேசிய சீன அதிபர் ஹூ ஜிந்தாவோ, அமெரிக்காவுக்கும் - சீனாவுக்குமிடையிலான



நல்லெண்ணமும், புரிந்துணர்வும் எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மிக மோசமான பொருளாதாரச் சரிவில் இருக்கிறது. அமெரிக்காவை தூக்கி நிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு அமெரிக்காவின் புதிய அதிபர் ஒபாமா முன் உள்ளது. கட்டுக்கோப்பான பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ள அதேவேளை, அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையிலும் பாரிய மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. உறவு சீர்கெட்டுள்ள பல நாடுகளுடன் அமெரிக்கா உறவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளது.

அமெரிக்காவின் புதிய ஆட்சி நிர்வாகத்தில் வெளியுறவுத் துறைக்கு ஹிலாரி நியமிக்கப்பட்டதன் முக்கியத்துவம் இத்தகைய பணியை அவர் செவ்வனே செய்வார் என்கிற பராக் ஒபாமாவின் எதிர்பார்ப்புத்தான்.

பராக் ஒபாமா கனடாவுக்கு விஜயம் செய்த அதே காலப்பகுதியில் தான் ஹிலாரி ஆசிய நாடுகளுக்கான தனது விஜயத்தைத் தொடங்கினார். விரைவில் ஒபாமா மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். அரபுலகத்துடன் சீர்கெட்டுள்ள அமெரிக்காவின் உறவைப் புதுப்பிக்கப் போவதாக ஒபாமா வெளிப்படையாகவே தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா - சீனாவுக்கிடையில் உறவுகள் எப்போதும் சுமுகமாக இருந்ததில்லை. சீனாவில் ஏற்பட்ட மாசேதுங் தலைமையிலான புரட்சியை அமெரிக்கா ஏற்றுக்கொண்டதில்லை. வியட்னாம் யுத்தத்தின்போது அமெரிக்காவுக்கு எதிராக வியட்னாம் மக்கள் போராட அன்றைய சீன அதிபர் மாசேதுங் பெருமளவிலான ஆயுதங்களை வெளிப்படையாகவே வழங்கினார். வியட்னாம் மக்களின் போராட்டத்தின் பின்னால் சீனா இருந்தது.

பின்னர் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்களின்போது சீனாவுக்கும் - அமெரிக்காவுக்கு மிடையிலான வர்த்தக முயற்சிகள் பெருமளவில் நிகழ்ந்துவந்தன. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் அமெரிக்க - சீன உறவுகளில் பெரும் உஷ்ணம் காணப்பட்டது. முதலாளித்துவ அமெரிக்கா, கம்யூனிஸ சோவியத் யூனியனைத் தனது பிரதான எதிரியாக முன்வைத்து வந்தது. சோவியத்தின் வீழ்ச்சியின் பின், சீனா அந்த இடத்தை நிரப்பிவிடும் என்கிற அச்சம் அமெரிக்காவுக்கு எப்போதுமே இருந்து வருகிறது. சீனாவின் பொருளாதார இராணுவ வளர்ச்சி குறித்து அமெரிக்காவுக்கு எப்போதுமே அச்சமும், கடுப்பும் உள்ளது.

தாய்வான் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கும் - சீனாவுக்குமிடையில் முரண்பாடுகள் அதிகரித்தேயுள்ளன. தீபெத் விவகாரத்திலும் அமெரிக்கா சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் மூக்கை நுழைப்பதாகப் பல தடவை குற்றச்சாட்டுக்களைச் சீனா முன்வைத்து வந்துள்ளது. ஆனாலும் இம்முரண்பாடுகளுக்கிடையிலும் "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்கிற அமெரிக்காவின் நிலைப்பாட்டின் பின் அமெரிக்காவும், சீனாவும் பல்வேறு விடயங்களில் இணக்கத்துடன் செயற்பட்டுவருகின்றன. பனிப்போருக்குப் பின் செப்டெம்பர் 11

**ஊரோடி**

தாக்குதல் அமெரிக்காவையும் சீனாவையும் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியில் உடன்பாடு காணும் வாய்ப்பை ஏற்படுத்தியது. தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதம் விற்றதையடுத்து அமெரிக்காவுடன் இராணுவப் பரிமாற்றங்களைச் செய்து கொள்வதில்லை எனக் கடந்த ஆண்டு சீனா அறிவித்திருந்தது.

ஹிலாரி கிளிண்டனின் சீனாவுக்கான விஜயத்தின்போது அமெரிக்கா - சீனாவுக்கிடையிலான வர்த்தக உறவுகள், உலகப் பொருளாதார நெருக்கடி, பருவநிலை மாற்றப் பிரச்சினை, பாதுகாப்பு நிலைமைகள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டுள்ளதை சீனாவும் - அமெரிக்காவும் உறுதிப்படுத்தியுள்ளன.

அமெரிக்கா இதுவரை சீனா தொடர்பாகச் சர்வதேச அரங்கில் வலியுறுத்திவரும் சீனாவில் அதிகரித்து வந்த மனித உரிமை மீறல் விவகாரம், தீபெத் மக்களின் எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அமெரிக்க அரசுத்துறைச் செயலர் ஒரு வார்த்தை தானும் சீன அரசுத் தலைவர்களுடன் பேசவில்லை என்பது கவனத்திற்குரியது என அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# மேல் மாகாண சபைத் தேர்தல் மலையகக் கட்சிகளுக்கு மீண்டுமொரு வாய்ப்பு

**சப்ரகமுவ,** மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலைத் தொடர்ந்து மலையகக் கட்சிகள் சந்திக்கும் தேர்தலாக மேல் மாகாண சபைத் தேர்தல் அமையவுள்ளது. இந்தத் தேர்தலில் மலையகத்தின் இருபெரும் கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பவற்றுடன் ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் களமிறங்கியுள்ளன. மேல் மாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற 1,30,000 வாக்காளர்களைக் கருத்திற்கொண்டே இக்கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன. மேல்மாகாண சபையில் வாழுகின்ற தமிழ் வாக்காளர்களின் விகிதாசரத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோது அண்ணளவாகப் பத்துத் தமிழ் உறுப்பினர்கள் மேல் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் மேல் மாகாணத் தமிழ் வாக்காளர்கள் இன, மத வரையறைகளுக்கு அப்பால் சிந்திப்பதன் பயனாக இதுவரையில் மூன்று உறுப்பினர்களுக்கு மேல் மேல்மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

கடந்த மேல் மாகாண சபைத் தேர்தலின்போதும் மூன்று தமிழ் உறுப்பினர்கள் இந்த வாக்காளர்களினால் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் திருமதி வேலம்மாள், திரு ராம் ஆகியோர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலிலும், மேலக மக்கள் முன்னணி சார்பில் ஏணிச் சின்னத்தில் பிரபா கணேசனும் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முறை இரண்டு தேசியக் கட்சிகளுடன் இணைந்திருக்கும் இக்கட்சிகள் தேசியக் கட்சிகளின் பட்டியலில் போட்டியிடுவதற்குத் தயாராகியுள்ள அந்த வகையில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் வசந்தா ரோஹினி தேவி, எஸ்.திருச்சேத்ஸ்வரம் ஆகிய இரு வேட்பாளர்களும், மலையக மக்கள் முன்னணி சார்பில் திரு.குருசாமியும் போட்டியிடுகின்றனர். அதேபோன்று மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் போட்டியிடும் தேசிய ஜனநாயக முன்னணியினரின் சார்பில் பிரபா கணேசன், குமரகுருபரன் உள்ளிட்ட மூவர் போட்டியிடவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் தேசிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டியிடுகின்ற அதேவேளை, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுகின்ற முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர, இரு தேசியக் கட்சிகளின் சார்பாகவும் மேலும் சில தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மேல் மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் இத்தேர்தலானது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணியினருக்கு ஒரு சவாலான தேர்தலாக அமைந்துள்ளது. சப்ரகமுவ, மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலின்போது மோசமான பெறுபேறுகளைச் சந்தித்த இவ்விரு கட்சிகளும் ஓரளவுக்கேனும் கௌரவமான முறையில் இத்தேர்தலில் வெற்றி பெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இல்லாவிடில் ஏற்கனவே இந்தக் கட்சிகளுக்குள் புகைய ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகின்ற உட்கட்சி முரண்பாடுகளைச் சமாளிப்பது அதன் தலைமைகளுக்குக் கஷ்டமான காரியமாக மாறிவிடும்.

நடந்து முடிந்த மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் இணைந்திருந்தமையினாலேயே தோல்வியடைய நேர்ந்தது என்று வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்திருந்த இவ்விரு கட்சிகளும் தொடர்ந்தும் தமக்கு வாக்களிக்கும் மக்கள் ஏற்றுக்கொள்ளாத நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கின்றன. இது, குறித்த கட்சிகளுக்குள்ளும் மக்கள் மத்தியிலும் கடுமையான விமர்சனங்களைக் கிளப்பியிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேல் மாகாண சபையில் குறிப்பாகக் கொழும்பு மாவட்டத்தில் குறிப்பிடத்தக்களவு வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்குச் சார்பானவை என்பதே கடந்த காலத் தேர்தல் முடிவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு கடந்த மேல் மாகாண சபைத் தேர்தலின் போது ஏணிச் சின்னத்தில் போட்டியிட்ட மேலக மக்கள் முன்னணியினர் இந்த முறை கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டிருக்கின்றனர். கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகின்ற போது இம்முறை இவர்களுடைய செல்வாக்குக் கணிசமான அளவு அதிகரித்துக் காணப்படுவதையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**ராஜு**

இவ்வாறானதொரு சூழலே மத்திய மாகாண சபையிலும் காணப்பட்டது. எனினும், தம்மீது மக்களுக்கு இருக்கின்ற விசுவாசத்தின் மீது நம்பிக்கை வைத்த இக்கட்சிகள் ஆளும் தரப்பினருடன் கூட்டு அமைத்துக்கொண்டனர். எனினும் இக்கட்சிகளின் எதிர்பார்ப்புக்களுக்கு எதிர்மாறானதாகவே மக்கள் நிலைப்பாடுகள் அமைந்திருந்தன. அதேவிதமான விஷப் பரீட்சையில் மேல் மாகாண சபையிலும் இவர்கள் இறங்கியிருக்கின்றார்கள்.

சிறுபான்மையினராகிய நாம் ஆளும் கட்சிகளுடன் இணைந்திருந்து ஒத்துழைத்துச் செயற்படுவதன் மூலமே சலுகைகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே தமது இத்தகைய நிலைப்பாடுகளை நியாயப்படுத்துவதற்கான காரணங்களாகக் குறித்த கட்சியினரால் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு செவிசாய்க்காது ஒருசில அழுத்தங்களுக்கு அடிபணிந்து தன்னிச்சையான முடிவுகளைத் தொடர்ந்தும் இக்கட்சியினர் எடுப்பார்களாயின், எதிர்வரும் பொதுத்தேர்தலில் பாரிய பின்னடைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும் என்பதுவே அரசியல் விமர்சகர்களின் ஒருமித்த கருத்தாகக் காணப்படுகின்றது.

# இளசுகளைச் சீரழிக்கும் இணையத்தளங்கள்!

**இன்றைய** நவீன விஞ்ஞான உலகில் விண்வெளி, காலநிலை, இயற்கை அனர்த்தம், இராணுவக் கட்டமைப்பு, ஊடகம் என்று எத்துறையை எடுத்துக்கொண்டாலும் அங்கு தகவல் தொழில்நுட்பத்தின் ஆதிக்கமே மேலோங்கியிருப்பதை அவதானிக்க முடியும். இந்தத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகப் பெரிய தூணாக வளர்ச்சியடைந்திருப்பதில் இணையத்தளம் முன்னையானது என்றால் அது மிகையல்ல. பரந்து விரிந்து கிடக்கும் இந்தப் பூமியின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் நடக்கும் சம்பவங்களையும், செய்திகளையும் மட்டுமன்றி விண்வெளியில் நடக்கும் சம்பவங்கள், ஆராய்ச்சிகள் பற்றிய செய்திகளையும் கூட ஒலி, ஒளி போன்றவற்றின் மூலம் நமது உள்ளங்கைக்குள் கொண்டுவரக் கூடியதாக உலகத்தைச் சுருக்கி வைத்திருப்பது இந்த இணையத்தளம்தான். வெறும் செய்திகள், தகவல்கள்,



படங்கள் என்பவற்றை மட்டுமே இணையத்தினூடாகப் பரிமாறிக்கொண்டிருந்த காலம் மாறி, இன்று வணிகம், பணப் பரிமாற்றல், மருத்துவம், சமயம், இலக்கியம், பிரசாரம், வேலைவாய்ப்பு, கல்வி போன்று பல்வேறு துறைகளிலும் இணையத்தளத்தின் பயன்பாடு விரிவடைந்துள்ளது. இவ்வாறு ஆச்சரியமூட்டும் விதத்தில் அபரிமிதமான வளர்ச்சியடைந்திருக்கும் இணையத்தளத்தை ஆக்கபூர்வமான பல விடயங்களுக்குப் பயன்படுத்தினாலும், மக்களின் கலாசாரம், கல்வி என்பவற்றைச் சீரழிக்கக்கூடிய விதத்திலும், பார்ப்போரை முகம் சுளிக்கக்கூடிய விதத்திலும் பல ஆபாசமான, காட்டுமிராண்டித்தனமான இணையத்தளங்களைச் சமூக விரோதிகள் என்று கருதக்கூடிய சில விஷமிகள் நடாத்தி வருவது எமது எதிர்கால சந்ததியினரைச் சீரழித்து விடுமோ என்ற அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வருமானத்திற்காகவும், தமது வக்கிர உணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கிலும் இத்தகைய ஆபாச இணையத்தளங்களை நடத்திவரும் கயவர்களால் இன்றைய இளைய தலைமுறையினர் மட்டுமன்றி, இல்லறத்தில் இணைந்திருக்கும் பல குடும்பஸ்தர்களையும் சீரழித்து வருவதைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், சில புள்ளி விபரங்களையும், தகவல்களையும் வெளியிட்டும் வருகின்றனர். இது தொடர்பாகப் பல நாடுகளில், அதன் அரசாங்கம் கடந்த காலங்களில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வந்தாலும் இதன் விபரீதத்தை உணர்ந்து அண்மைக்காலமாக இணையத்தளங்களினூடாக நடைபெறும் பல சீரழிவுகளையும், மோசடிகளையும் தடுப்பதற்காகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

உலகை இணைக்கும் ஒரு வலையாகக் கருதப்பட்ட இணையம் இன்று பலருடைய வாழ்க்கையை இறுக்கும் சுருக்குக் கயிறாகவும் மாறிக்கொண்டிருக்கிறது என்பது தான் துயரம்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)



அந்தணர் வீதிக ளாம் -மறை
யாதிக ளாம்கலைச் சோதிக ளாம்
செந்தழல் வேள்விக ளாம் மிகச்
சீர்பெருஞ் சாத்திரக் கேள்விக ளாம்.

- சுப்பிரமணிய பாரதியார்

# மான்குட்டி

**காட்டில்** புலி ஒன்று பசி தாளாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு மரத்தடியில் ஒரு மான்குட்டி படுத்திருப்பதைப் பார்த்தது.

புலி ஒரே தாவாகத் தாவி அதை அடிக்க முற்பட்டது.

மான்குட்டி அதன் அடியிலிருந்து விலகித் தப்பியது.

"பொடிப்பயலே... முளைச்சு மூணு இலை விடலை. அதுக்குள்ளே உன்னோட சாகசத்தைக் காட்டுறியா? மரியாதையா என்னோட பசிக்கு விருந்தா வந்திடு" என்று கத்தியது.

மான்குட்டி, புலி ரூபத்தில் எமனே தன் எதிரே நிற்பதாக நினைத்தது.

"புலி ராஜாவே... நான் உங்கள் பசிக்குச் சோளப்பொரிதான். யாராவது கொசுவைச் சாப்பிட விரும்புவார்களா? அப்படித்தான் இருக்கிறது உங்கள் செயல். நான் நேற்றுப் பிறந்த குட்டி. உங்கள் பல்லுக்குக் கூட பத்த மாட்டேன். இந்தக் காட்டுக்கே தள-பதி மாதிரியான நீங்க என்னோடு மோதுவது பெருமையாகுமா? நீங்கள் யானையோடு மோதுவதுதான் பெருமை, கம்பீரம். என்னைப் போய் அடித்துத் தின்றால் உங்களின் புலி இனமே உங்களைக் கேலி பேசுமே?" என்று சாதுரியமாக மடக்கியது.

மான்குட்டியின் பேச்சில் ஆடிப் போனது புலி. மான்குட்டி கூறுவது போல, நேற்றுப் பிறந்த அதை அடித்துத் தின்பது தனது கௌரவத்துக்கு இழுக்கு என்று எண்ணியது. ஆனாலும் பசியின் கொடுமை அதை வாட்டியது.

"மான்குட்டியே... பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் இல்லையா? கைக்குக் கிடைத்ததைத் தவற விடுவது புத்திசாலித்தனமா?"

"புலியாரே... குட்டிமீன்கள் நீந்திச் செல்வதையெல்லாம் கொக்கு பார்த்துக் கொண்டுதானே இருக்கும்? அது என்ன புத்திகெட்ட செயலா? பெரிய மீனைக் குறிவைத்துக் கொக்கு காத்திருக்கிறது என்பதுதானே உண்மை? ஒரு சிறிய கொக்குக்கு உள்ள புத்திசாலித்தனம் உங்களுக்கு இல்லையா?"

"உன் பேச்சில் உண்மை இருப்பதாகவும் தெரிகிறது. உண்மை இல்லாதது போலவும் தெரிகிறது. என்னைத் தளபதி என்று வேறு புகழ்கிறாய்! என் பசிக்கு என்ன வழி? அதையாவது நீ சொல்."

"புலியாரே... அதோ தொலைவில் ஒரு காட்டெருமை மேய்கிறது பாருங்கள். அதற்குப் பயந்துதான் மற்ற விலங்குகள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அதைக் கொன்று தின்றால் உங்களின் முழுப்பசியும் தீர்ந்துவிடுமே! அது வகையாக மாட்டிக் கொண்டிருக்கிறது. முதலில் அதைச் சாப்பிடுங்கள். நான் எங்கே போய்விடப் போகிறேன்? நான் நன்றாகக் கொழுகொழுவென்று வளர்ந்தபின் என்னை உங்களின் பசிக்கு இரையாக்கிக் கொள்ளுங்கள். நானும் அதற்குள் இந்த உலகத்தை நன்றாகப் பார்த்துவிடுவேன்" என்றது.



புலிக்கு மான்குட்டி கூறியது நியாயமாகவும், அறிவாளித்தனமாகவும் தெரிந்தது.

## பாப்பா முரசு சிறுகதை


உடனே காட்டெருமையை நோக்கி பசி வெறியோடு பாய்ந்தது புலி. தன்னை நோக்கிச் சீறி வரும் புலியைக் கண்ட காட்டெருமை உடனடியாகத் தயாராகி, அதைத் தனது கூரிய கொம்புகளால் குத்தியது.

புலி குடல் சரிய காடு அதிரும்படி கத்திக்கொண்டு தரையில் விழுந்தது.

பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருமைகள் தமது சக நண்பனான எருமையோடு புலி சண்டை போடுவதைக் கண்டு அதற்கு உதவியாக வந்து புலியைக் குத்திக் குதறித் தள்ளின.

மான்குட்டி தன் உயிருக்கு ஆபத்து வந்தபோது தந்திரமாகச் செயல்பட்டதைக் கேட்டு அதன் தாய்மான் அதை உச்சிமோந்து, அறிவை மெச்சியது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.04.2009
**வர்ணம் தீட்டும் போட்டி இல.785**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 783

**பரிசுக்குரியவர்:** வி.விஜனோஜினி, 118/88, மைத்திரி போதிராஜா மாவத்தை, கொழும்பு-12.

**பாராட்டுக்குரியவர்கள்**

1. ஜே.எச்.பாத்திமா 5ஆம் குறுக்கு வீதி, புத்தளம்.
2. கருணாகரன் உமாசங்கரி, 8ஆம் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.
3. சா.சாம்பவி, கோயில் வீதி, குருமன்காடு வவுனியா.
4. செல்வன் பிரசாந்த் கனகசபை, சு/இந்துக் கல்லூரி, கம்பளை.
5. பாத்திமா றிபானா சாலிஹ், அஷ்ரப் வீதி, ஏறாவூர்-02.
6. சின்னராசா சரோஜினி, விஷ்ணு கோயில் வீதி, காரைதீவு.10.
7. ஏ.எல்.எப்.ரஸ்மியா, மதீனா தேசிய பாடசாலை, மடவள பஸார்.
8. பாத்திமா ஹனியா இர்சாட், பாடசாலை ஒழுங்கை, கொழும்பு-09.

## ஆத்திசூடி

**உலகத்து இயற்கை அறிந்து செயல்**

செயல்முறைகளை அறிந்த போதும் உலகத்தின் நடைமுறைகளை அறிந்தே செயல்படுத்தல் வேண்டும்.

-திருவள்ளுவர்

## பாப்பா பாட்டு

### வாத்து!

வாத்து நல்ல வாத்து வட்டமான வாத்து
சிறிய வெள்ளை நிற வாத்து
குள்ளமான வாத்து குறு குறு வாத்து
கள்ளமில்லா வெள்ளை நிற வாத்து
சிங்காரமாய் நீரில் மிதக்கும்
வரிவரியாய் நீந்திச் செல்லும்

பாங்குடனே பால் சிறகு விரிக்கும்
தேங்கிய குட்டையில் கால் மறைக்கும்
தாங்கும் நீரில் ஊறும் வாத்து
பொங்கும் அலையில் சரியும் வாத்து
மிதக்கும் குளத்தில் கலக்கும் வாத்து
படரும் பாசியில் ஜொலிக்கும் வாத்து!

## தெரிந்து கொள்ளுங்கள்

### காணாமல்போன நாய்



"ரோக்கோ" என்ற வளர்ப்பு நாய், நியூயோர்க் நகரில் 5 வருடங்களுக்கு முன்னால் காணாமல் போய்விட்டது. சுமார் ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் அது கண்டுபிடிக்கப்பட்டதைப் பார்த்த அதன் உரிமையாளருக்கு இன்ப அதிர்ச்சியாகிவிட்டது. அடையாளம் காண, அந்த நாயின் தோலுக்கடியில் ஒரு சிறிய அடையாள சிப்பினை வைத்துத் தைத்திருந்ததால், "ரோக்கோ"வினால் அதன் எஜமானருடன் மீண்டும் சேர முடிந்தது.

### நீச்சலடித்த காளை மாடு!



வீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட நீச்சல் குளத்தில் முதல் முறையாகக் குளித்து மகிழ ஆசையாகப்போன ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பம், அந்த நீச்சல் குளத்தில் ஒரு பெரிய காளை மாடு சந்தோசமாகக் குளித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போனது. தீயணைப்புப் படை வந்து நீச்சல் குளத்தில் இருந்த நீரையெல்லாம் இறைத்த பின்புதான் அந்தக் காளை மாட்டை வெளியே கொண்டு வர முடிந்தது.

## பறவைகள் கண்டம் கடப்பது எப்படி?

தமிழ்நாட்டில் இருக்கும் வேடந்தாங்கல் போன்ற பறவைகள் சரணாலயங்களில் விதவிதமான தோற்றங்களில் பல நூறு பறவைகளை ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட மாதங்களில் பார்க்க முடியும். இவை பல்லாயிரக்கணக்கான மைல்களைக் கடந்து கடலுக்கு மேல் பறந்து வருகின்றன. எந்தவொரு திசை காட்டும் கருவியின் உதவியுமில்லாமல் எப்படி ஒவ்வொரு வருடமும் சரியாக இவை வந்து செல்கின்றன என்பது ஆச்சரியமான விஷயமாகும்.



சில பறவைகள் வழியில் குறுக்கிடும் மலைகள், ஆறுகள், ஏரிகள் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றன. இன்னும் சில பறவைகள் சூரியனையும், நட்சத்திரங்களையும் கணித்துப் பறக்கின்றன. சூரியனைக் காண முடியாத அளவில் அடர்ந்த மேக மூட்டம் இருக்கும் நாட்களில் பூமியின் காந்தக் கவர்ச்சி விசையைச் சார்ந்து இவை சரியான திசையில் பறக்கின்றன என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

பறவைகள் தங்கள் உடலில் இருக்கும் "மேக்னடைட்" என்ற தாதுவைத் திசை காட்டும் கருவியாகப் பயன்படுத்திச் சரியான இடத்தை அடைகின்றன என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## தகவல் களஞ்சியம்

- அயர்லாந்து நாட்டில் கணவன்-மனைவி விவாகரத்து செய்ய அனுமதியில்லை.
- செவ்வாய்க் கிரகத்தில் வானம் ஆரஞ்சு நிறமாக இருக்கும்.
- ஜெர்மன் நாட்டில் நைலோன் துணியில் ரூபாய் நோட்டு அச்சடிக்கப்படுகிறது.
- சுவிட்சர்லாந்து நாட்டில் மரண தண்டனை கிடையாது.
- மாவீரர் அலெக்சாண்டர் மிகவும் குள்ளம். அவருக்கு ஒரு கண்ணின் நிறம் கறுப்பு. மற்றொரு கண் நீலம்.
- ஆசியாக் கண்டத்திலேயே மிகப்பெரிய தொலைநோக்கி தமிழகத்தில் காவலூரில் அமைந்துள்ளது.
- வீடுகளுக்கு வழங்கப்படும் சமையல் எரிவாயுவில் உள்ள முக்கியமான வாயுக்கள் பியூட்டேன், புரோமேன்.

## விடுகதை

1. நான் தூங்கும் போதும் அவன் விழித்திருப்பான். அவன் யார்?
2. கறுப்புப் புடோலங்காய்க்குக் கல்லைக் கட்டத் தேவையில்லை. அது என்ன?
3. ஒருசாண் உடம்பு. உடம்பு நிறையப் பற்கள். அது என்ன?
4. நாரில் சிறையிருப்பேன் வாசனையை நான் தருவேன். நான் யார்?
5. வாயைத் திறந்தால் முந்நூறு பற்கள். அது என்ன?
6. காலின்றி வருகிறேன் காலின்றி ஓடுகிறேன். நான் யார்?
7. கணுக்கணுவானவன் கடித்தால் இனிப்பானவன். அது என்ன?
8. மூக்கில் பூ வைத்தவன் காலையில் எழும்புவான். அவன் யார்?
9. பாட்டுப் பாடும் கூட்டத்தாரே பாம்புக்கு விருந்தாவீரே. அவர் யார்?
10. சின்னச் சின்னப் பூக்கள் சிதறிக் கிடக்கும் பூக்கள் இரவில் பூக்கும் பூக்கள். அது என்ன?

ப.சஜானி -8
கௌம் பிட்டி.7ஆம் வட்டாரம்.




# 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாத்தாள் - I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

* கீழே ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. 1-4 வரையிலான வினாக்களில் உள்ள அச்சம்பவம் பற்றிய தகவல்கள் பூரணமாக விளக்கமடையும் விதத்தில், தரப்பட்டுள்ள மூன்று சொற்களில் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

சுந்தரத்திற்கு நித்திரை செய்ய நல்ல விருப்பம், அவன் இன்று,
01. 1. பாடசாலைக்குத் 2.வீட்டுக்குத் 3. கடைக்குத்

தாமதமாகி வந்தான். அவனது நண்பன், இன்று நீ ஏன்
02. 1. விரைவாக 2.தாமதமாக 3. விருப்பத்தோடு

பாடசாலைக்கு வந்தாய் என்று கேட்டான். நான்
03. 1. கொஞ்சம் 2. நேரத்தோடையே 3. நன்றாக

நித்திரையாகிவிட்டபடியால்,
04. 1. மற்றைய நாட்களின் நேரத்திற்கே 2. அதிகாலையிலே
3. நேரம் பிந்திய பிறகே
விழிப்பு ஏற்பட்டது எனச் சுந்தரம் கூறினான்.

* விளையாட்டாக பொம்மை வீடு கட்டுவதைப் பற்றிய விபரமொன்று கீழே தரப்பட்டுள்ளது. இல. 5-8 வரையிலான வினாக்களிலுள்ள அவ்விபரம் முழுமை அடையும்படிக்குக் கீழே தரப்பட்டுள்ள மூன்று சொற்களில் மிகவும் பொருத்தமானதன் கீழ் கோடிடுக.

சதன் தீபனுடன் சேர்ந்து விளையாட்டு வீடு ஒன்றை
05. 1. வாசற்புறத்தில் 2. பாக்குமரத்தில் 3. சேற்று நிலத்தில்

கட்டினான். அந்த விளையாட்டு வீட்டைக் கட்டுவதற்கு அவன்
06. 1. கடலைக்கட்டையைப் 2. பலகைக்கட்டையைப் 3. கட்டுமரத்தைப்

பயன்படுத்தினான். அவன் அதன் கூரையை
07. 1. தென்னோலையால் 2. பனம்பாளையால் 3. மலர்ச்செண்டினால்

வேய்ந்தான். அவன் வீடு கட்டி முடிந்ததும் நண்பர்களைத் தேநீர் விருந்தொன்றுக்கு வருமாறு
08. 1. அழைத்தான். 2. பிரார்த்தித்தான் 3. தொல்லைப்படுத்தினான்.

* 9-11 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

09. ஆற்றில் எப்போதும் இருப்பது
1. கரை 2. மீன் 3. நீர் 4. படகு

10. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பவை
1. படங்கள் 2. கதைகள் 3. பக்கங்கள் 4. கவிதைகள்

11. வகுப்பறையொன்றில் எப்போதுமே இருப்பது
1. பிள்ளைகள் 2. ஆசிரியர்கள் 3. புத்தகங்கள் 4. கூரை


* 12 ஆம் 13 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


12. வானத்தில் மின்னல் வெட்டுவதற்கும், இடி முழங்குவதற்கும் இடையிலே கால அளவில் சிறிய வித்தியாசம் இருப்பது நமக்குத் தெரியவருவது ஒளியும் ஒலியும் பயணஞ் செய்யும் காலங்களுக்கிடையே வித்தியாசமொன்று இருப்பதனாலேயே ஆகும். ஒளி விரைவாகப் பயணஞ் செய்யும். ஒலி அதனைவிட மெல்லப் பயணம் செய்கிறது. இத்தகவலின்படி தீர்மானிக்கக் கூடியது என்னவெனில்,
1. இடிமுழக்கம் முதலில் ஏற்படுகிறது.
2. மின்னல் முதலில் ஏற்படுகிறது.
3. இடிமுழக்கமும், மின்னலும் ஒரே நேரத்தில் ஏற்படுகின்றன.

13. மிகப் பண்டைய காலத்தில் மனிதரில் சிலர் உணவு சமைப்பதற்கு மண்ணிலிருந்து சுரண்டியெடுத்த வெடி உப்பையே சேர்த்துப் பயன்படுத்தியுள்ளனர். ஆதி மனிதர்கள் இவ்வாறு வெடியுப்பைச் சேர்த்துப் பயன்படுத்தி உணவைச் சமைக்கும்போது அதில் சிறிதளவு தவறுதலாக அடுப்பில் விழுந்திருக்கலாம். அதனால் உண்டான வண்ண வண்ண வெளிச்சமே தற்போதைய பூ வெடிக் கைத்தொழிலின் ஆரம்பமாகும். இவ்விபரங்களினால் சொல்லப்படுகிற கருத்து என்னவெனில்,
1. மனிதன் உணவு சமைப்பதற்கு ஆதிகாலம் முதற்கொண்டே உப்பினைப் பயன்படுத்தியுள்ளான் என்பதாகும்.
2. பூ வெடிக் கைத்தொழிலின் ஆரம்பம் தற்செயலாகவே நடைபெற்றது என்பதாகும்.
3. நிலத்தில் சுரண்டியெடுத்த வெடி உப்பில் நஞ்சு இல்லாதிருப்பதேயாகும்.

* இலக்கம் 14 - 16 வரையிலான வினாக்களில் உள்ள படங்களில் காண்பிக்கப்படுகின்றவற்றைச் சரியாகக் குறிப்பிடுகின்ற வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

14. 
1. சிறிய பிள்ளைகள் பெரிய பிள்ளைகளைவிடப் பொறுப்புடன் வேலை செய்கிறார்கள்.
2. பிள்ளைகள் பாடசாலை வளவில் ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.
3. ஆசிரியை ஒருவர் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லித் தருகிறார்.

15. 
1. பிள்ளையொன்று பரீட்சைக்காகப் படிக்கிறது.
2. பிள்ளையொன்று ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளது.
3. பிள்ளையொன்று இரவு நேரத்தில் படித்துக்கொண்டிருக்கிறது.


16. 
1. இது மாலை நேரம்
2. இது காலை நேரம்
3. இது பூக்கள் நிறைந்த ஒரு குளமாகும்.


* பின்வரும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும். அதற்கிணங்க இலக்கம் 17 - 19 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.


| A | B | C |
|---|---|---|
| w L O | O A K | K O L |
| +w L O | -w O L | -O L w |
| 2 4 6 | 2 2 2 | 1 1 1 |

17. O வின் பெறுமதி எவ்வளவு (...............)
18. A யின் பெறுமதி எவ்வளவு (...............)
19. L இன் பெறுமதி எவ்வளவு (...............)

இலக்கம் 20 - 22 வரையிலான வினாக்களிலுள்ள விடயங்களுக்கேற்ற சரியான விடையின் கீழ் கோடிடுக.

20. 
இப்பையனின் நிழலின் நீளத்திற்கேற்ப இப்போது நேரம்
1. காலை 8.00 மணியாக இருக்கக்கூடும்.
2. காலை 10.00 மணியாக இருக்கக்கூடும்.
3. பகல் 1.00 மணியாக இருக்கக்கூடும்.
4. பிற்பகல் 3.00 மணியாக இருக்கக்கூடும்.

21. 
பௌர்ணமி தினமானது மாதத்தில் 20 ஆம் திகதியன்று வந்ததெனில் படத்திலுள்ளபடி சந்திரன் காணப்படும் தினம்
1. 4 ஆம் திகதியாகும்.
2. 8 ஆம் திகதியாகும்.
3. 12 ஆம் திகதியாகும்.
4. 16 ஆம் திகதியாகும்.

22. 
படத்தில் காணப்படுகின்ற நிகழ்ச்சியை பெரும்பாலும் இலங்கையில் எந்த மாதத்தில் காணமுடியும்?
1. ஜனவரி மாதத்தில் ஆகும்.
2. ஏப்ரல் மாதத்தில் ஆகும்.
3. ஆகஸ்ட் மாதத்தில் ஆகும்.
4. டிசெம்பர் மாதத்தில் ஆகும்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

### வினாத்தாள் I இற்கான விடைகள்

01. 1. பாடசாலைக்குத்
02. 2. தாமதமாக
03. 3. நன்றாக
04. 3 நேரம் பிந்திய பிறகே
05. 1 வாசற்புறத்தில்
06. 2 பலகைக்கட்டையைப்
07. 1 தென்னோலையால்
08. 1 அழைத்தான்
09. 1 கரை
10. 3 பக்கங்கள்
11. 4 கூரை
12. 3 இடி முழக்கமும் மின்னலும் ஒரே நேரத்தில் ஏற்படுகின்றது.
13. 2 பூ வெடிக் கைத்தொழிலின் ஆரம்பம் தற்செயலாகவே நடைபெற்றது என்பதாகும்.
14. 2 பிள்ளைகள் பாடசாலை வளவில் ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளனர்.
15. 2 பிள்ளையொன்று ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளது.
16. 3 இது பூக்கள் நிறைந்த ஒரு குளமாகும் அல்லது 2 இது காலை நேரம்
17. 3
18. 5
19. 2
20. 3 பகல் 1.00 மணியாக இருக்கக்கூடும்.
21. 2 8 ஆம் திகதியாகும்.
22. 2 ஏப்ரல் மாதத்தில் ஆகும்.



## ஷங்கருக்குக் கட்டுப்பாடு

**எந்திரனின்** மெகா பட்ஜெட்டுக்குத் தயாரிப்பாளர் கிடைத்ததே அதிசயம். இதனால் தயாரிப்பாளர் சொல்லும் வட்டத்திற்குள் வித்தை காட்டும் நிலை ஏற்பட்டிருக்கிறது ஷங்கருக்கு. ஷங்கர் இயக்கும் படத்தின், கதை முதல் காட்சியை எங்கு ஷூட் செய்வது வரை அவர்தான் முடிவு செய்வார்.

ஆனால், எந்திரன் விஷயம் நேரெதிர். முடிந்த அளவுக்கு நேரத்தையும், பணத்தையும் இறுக்கிப் பிடிக்கிறது தயாரிப்புத் தரப்பு. ஆந்திரா ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் பிரமாண்ட அரங்கு அமைத்து பாடல் காட்சி ஒன்றை எடுக்கத் திட்டமிட்டார் ஷங்கர். செட் போட்டுப் பாட்டு எடுக்க ஏன் அவ்வளவு தூரம் போக வேண்டும்? உள்ளூரிலேயே நமக்கு ஏகப்பட்ட இடம் இருக்கே என தயாரிப்புத் தரப்பிலிருந்து மெசேஜ் வந்திருக்கிறது. மறுபேச்சில்லாமல் ஓகே சொல்லியிருக்கிறார் ஷங்கர். ஆக, சொல்ல வேண்டியவர்கள் சொன்னால் ஷங்கரும் கேட்பார்.

## தமிழ் சினிமாவில் நடிகையின் பரந்த மனசு

சினிமாவில் அறிமுகமாகும் புதிய ஹீரோக்களுடன் நடிக்கத் தயங்கும் நட்சத்திரங்களுக்கு நடுவில் எந்தப் பம்மாத்தும் இல்லாமல் நடிக்க ஒப்புக் கொள்ளும் ஒரே (அழகான) நடிகை கீர்த்தி சாவ்லா!. இப்போது தனது அடுத்த சலுகை ஒரு பாடலுக்கு ஆட அழைத்தாலும் ஒ.கேவாம் இவருக்கு. அப்படியே கவர்ச்சியாக நடிக்கவும் சம்மதிச்சுருங்களேன் என்று ஐடியா கொடுத்திருப்பார்கள் போலிருக்கிறது.

அகராதி படத்தில் நீச்சல் உடையில் தோன்றுகிறாராம்.



சிம்பு - த்ரிஷா
விண்ணைத் தாண்டி வருவாயா

## திரை விமர்சனம் - குடியரசு

**காதலில்** தோற்றுப்போன இருவர், தங்களை ஏமாற்றிய இரண்டு பேரின் திருமணத்தில் சந்தித்து முட்டிக் கொள்கிறார்கள். விதி இருவரையும் கணவன் - மனைவியாக்குகிறது. எப்படி இது ஒரு டிராக்! பைனான்ஸ் கம்பெனியின் மோசடியை எழுதும் புலனாய்வு நிருபர் கடைசியில் தனது எழுத்தை எப்படி நிஜமாக்குகிறார்? இது இரண்டாவது டிராக்! சிக்கன பட்ஜெட்டில் சிக்கன் சூப் போலச் சுவையாக எடுக்க "ட்ரை" பண்ணியிருக்கிறார்கள். அதற்காகவே ஒரு சபாஷ்.

ஆடிட்டர் இராகவனின் பேச்சை நம்பி, "திவால் ஆன பைனான்ஸ் கம்பெனியில் அமைச்சரின் தில்லுமுல்லு" என்று செய்தியை எழுதிச் சிட்டியில் புயலைக் கிளப்புகிறார் நிருபர் விக்னேஷ். இராகவனிடம் ஆதாரத்தை வாங்கிக் கொண்டு திரும்பும்போது அது வில்லன் கோஷ்டிகளால் சேதமாக்கப்படுகிறது. "உன்னை நம்பி மேட்டரைப் போட்டாச்சு. வந்தால் ஆதாரத்தோடு வா. இல்லைன்னா அப்படியே வீட்டுக்குப் போயிடு" என்கிறார் எடிட்டர். அடிக்கடி பேனாவை மூக்குக்கு நேரே வைத்து வசனம் பேசிய விக்னேஷ்(வரன்) செய்வதறியாமல் திகைக்கிறார்.

இதற்கிடையில் பணக்கார அப்பாவின் சூழ்ச்சிக்குப் பலியாகி காதலித்து வந்த விக்னேஷைக் கைவிட்டு வேறொருவரைக் கரம் பிடிக்கிறார் கதாநாயகி சுகுணா. சுகுணாவுக்குச் சிரிக்கத் தெரிந்தளவுக்கு நடிக்க வரவில்லை. போகப் போகப் பிரகாசிக்கலாம். இன்னொரு நாயகி நீபா. ஆடிட்டர் இராகவனின் பேத்தி. முதலில் விக்னேஷோடு மோதி பிறகு "இவ்வளவு நல்லவனா நீயி..." என்று வடிவேலு மாதிரித் திகைக்கிறார். இது ஒன்று போதாதா காதலில் விழ...? வெட்கத்தோடு விக்னேஷைக் கரம் பிடிக்கிறார்.

அமைச்சராகச் சேது விநாயகம். தன்னுடைய பாழடைந்த பங்களாவைத் தேடி வந்த ஜோடி, அங்குள்ள கம்ப்யூட்டரைத் தோண்டி ஆவணங்களை "லபக்க" பார்க்க ஜன்னலோரத்திலிருந்து எட்டிப் பார்க்கும் துப்பாக்கி கம்ப்யூட்டரை சுக்கு நூறாக்குகிறது. அப்படியே திரும்பி இவர்களைச் சுட்டிருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லையே? படமே முடிந்திருக்குமே? என்றெல்லாம் கேள்விகள் எழுகிறது. நல்ல முதல்வரைக் காட்டுகிறார்கள். ஆறுதல். நாலு குத்துப்பாட்டு, சில ஆபாசக் காட்சிகள் என்று படத்தை எடுக்காது நாட்டுக்கு உருப்படியாக ஏதோ சொல்ல வந்திருக்கிறார்கள். அதற்காகக் குடியரசு டீமுக்கு ஒரு ஸ்பெஷல் பாராட்டுக்கள். இசை- இளையராஜாவின் இசை வாரிசு கார்த்திக் ராஜா. ஒரு இடத்திலாவது அப்பாவை நிரூபிக்கவில்லை. புலிக்கு பிறந்த எலி! மற்றப்படி விக்னேஷிற்கு, துரும்பைக் கூட கிள்ளிப் போடாத இன்னொரு படம்.

## அர்ஜுனின் இந்திப் படம்

**ஆக்‌ஷன்** கிங் அர்ஜுன் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளார். பாரதிராஜா இயக்கத்தில் நானா படேகருடன் அர்ஜுன் இணைந்து நடித்த "பொம்மலாட்டம்" படம் ஹிந்தியிலும் "சினிமா" என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படம் வெளிவந்தபிறகு ஹிந்தி ரசிகர்களுக்குத் தனது முகம் பரிச்சயமாகிவிடும். அப்படி பரிட்சயமாகும் பட்சத்தில் தனது இன்னொரு படம் வெளிவந்தால் எளிதாக வியாபாரம் செய்து விடலாம். எனவே ஒரு இந்திப் படத்தைத் தானே சொந்தமாகத் தயாரித்து, இயக்கி நடிப்பதென்ற முடிவுக்கு வந்துள்ளார். தமிழில் அர்ஜுன் இயக்கி நடித்த வேதம் படத்தின் சாயலில் இந்திப் படக் கதையை உருவாக்கியுள்ளாராம் அர்ஜுன். கதாநாயகிகளாக நடிக்க இரண்டு முன்னணி இந்தி நடிகைகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளாராம். இதுவும் ஆக்‌ஷன் படமாகத்தான் இருக்கும் என்கிறார்கள். டி.இமான் இசையமைக்க வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது.



சுந்தர்.சி, நமீதா
பெருமாள்

## பாலாவின் அடுத்த படம்

**பாலாவின்** அடுத்த படத்தை சௌந்தர்யா ரஜினியின் ஆக்கர் ஸ்டுடியோ தயாரிக்கிறது. இந்தப் படத்துக்காகப் பாலாவுக்கு நான்கு கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன.

இதில் நாயகனாக சூர்யாவின் பெயர் உச்சரிக்கப்படுகின்றது. இது குறித்து சௌந்தர்யா நேரடியாகச் சூர்யாவிடம் பேசிவிட்டதாகவும் கூறுகிறார்கள். எது எப்படி இருந்தாலும் அடுத்தமாத இறுதிக்குள் பாலாவின் அடுத்த படம் குறித்த அனைத்துத் தகவல்களும் உறுதி செய்யப்பட்டுவிடும் எனப் பாலாவின் சுறுசுறுப்பைப் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

## அடக்கமாய் இருக்கணும்

"சரோஜா" படத்தின் 100ஆவது நாள் விழா சென்னை காமராஜர் அரங்கில் நடந்தது. விழாவில் கவிஞர் வாலி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோது:

இந்தப் படத்தை டைரக்டு செய்த வெங்கட்பிரபு, தமிழ் திரையுலகில் மிகப்பெரிய டைரக்டராக வருவார் என்றார். தொடர்ந்து பேசிய சிம்பு, "தமிழ் சினிமாவில் அடக்கமாய் இருப்பவர்களே சாதித்துள்ளனர். உதாரணமாக ஏ.ஆர்.ரகுமானைக் குறிப்பிடலாம். அவருடைய தன்னடக்கத்துக்குத்தான் ஆஸ்காருக்கு இணையான "கோல்டன் குளோப்" விருது கிடைத்து இருக்கிறது. ஏ.ஆர்.ரகுமானை அடுத்து தன்னடக்கமான இசையமைப்பாளர் யுவன்சங்கர் ராஜா தான்" என்றார்.

## த்ரிஷாவுடன் டிஸ்கஸ்

**கௌதம்** மேனனுடன் முதல் தடவையாக இணைகிறார் சிம்பு. ஜோடி த்ரிஷா.

படம் ஆரம்பிச்சு பத்து நாளைக்கூடத் தாண்டவில்லை. கௌதமின் திறமையைப் பாராட்டி, சந்தோஷத்தில் குதிக்கிறார் சிம்பு. "நல்ல கதைகளுக்காகக் காத்திருந்த சமயம்தான் கௌதம்மேனன் சார் விண்ணைத்தாண்டி வருவாயா கதையை சொன்னார். மயிலிறகால் வருடுவதுமாதிரியான ஒரு சிலிர்ப்பான காதல் கதை. கதைகேட்டதுமே கௌதம் சார் கையைப் புடிச்சு தாங்க்ஸ் சொன்னேன்" என உற்சாகமாக தொடர்கிறார் சிம்பு.

"இதுவரைக்கும் பெண்களுக்குப் பிடிச்சமாதிரியான கதையில் நான் நடிக்கல. அந்தக் குறையைப் போக்கும் படமா இது இருக்கும். மேனரிஷம், கெட்டப் மாற்றம் போன்ற தேவையில்லா திணிப்புகள் இல்லாம நான் நானாக நடிக்கும் படம்தான் இது." என நிறுத்திய கேப்பில் சிம்புவிடம் ஒரு கேள்வியை வைத்தோம்.

டைரக்டர் புராணமே பாடிக்கிட்டிருந்தா எப்படி த்ரிஷா பற்றி சொல்ல எதுவுமில்லையா? "நிச்சயமா இருக்கு. த்ரிஷா இதுல செம அழகா இருப்பாங்க. த்ரிஷாவுடன் பழகி பல வருடங்களானாலும் இந்த படத்துலதான் ரெண்டுபேரும் வெளிப்படையா பேசிக்கிறோம். சில தயக்கங்களை தள்ளிவைத்துவிட்டு கேரக்டர்களை எப்படியெல்லாம் டெவலப் பண்ணலாம்னு ஒண்ணா டிஸ்கஷன் செய்துவிட்டு நடிக்கிறோம். இதுக்குக் காரணமும் கௌதம்தான்" என்றார்.

அங்கம் -02

## ஒரு நடிகையின் கதை

**சினிமாவில்** அவருக்கு வேறு பெயர் இருந்தாலும், நிஜப் பெயர் மறைந்த இங்கிலாந்து இளவரசியின் பெயர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் நெல்லையப்பரிடம் மனமுருக வேண்டிக் கொண்டார்! "இந்த வாய்ப்பாவது எனக்கு நிச்சியமாக வேண்டும்! அதற்கு நீதான் துணை புரிய வேண்டும்!" வேண்டுதல் பலித்து ஆட்டம் தொடங்கியது! முதல்பட படப்பிடிப்பில் முக்கியமானவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார்! படம் வெளியானது! அவரின் அழகில், இளமையில் ரசிகர்கள் மயங்கிப் போனார்கள்! ஹீரோக்கள் கிறங்கிப் போனார்கள்!

உச்ச நட்சத்திரமே தன் படத்துக்கு ஜோடியாக்கியதில் ஒட்டுமொத்த இண்டஸ்ட்ரியின் கவனமும் இவரின் மீது திரும்பியது! இந்த இரண்டாவது படம் மூலம் "பட்டம் நடிகை"யாக உலகத் தமிழர்களிடையே புகழ்பெற்றார்! ஆந்திர திரையுலகமும் சிவப்புக் கம்பளம் விரித்தது! "அடடா...! இப்படி ஒரு அழகு தேவதை தன் படத்தில் நடிக்க வந்து நிராகரிக்கப்பட்டவரா? மிஸ் பண்ணிட்டோமே...?" எனப் பீல் பண்ணினார்! தனது "வல்லப்" படத்திற்கு பட்டத்திடம் கால்ஷீட் கேட்டார் விரல் நடிகர்!

"இளம் ஹீரோக்களுடன் நடித்து அதன் பின் சீனியர் ஹீரோக்களுடன் நடித்தால்தான் நீடித்து புகழ் பெற முடியும்! இதுதான் சினிமா சென்ட்டிமெண்ட்! ஆனால் நீயோ நாட்டாமை, அப்புறம் உச்ச நடிகர் எனப் பெரிய ஆட்களுடன் நடித்துவிட்டதால் ரசிகர்களும், இளம் ஹீரோக்களும் உன்னை "முதிர் கன்னி மாதிரித்தான் பார்ப்பார்கள்! இளம் ஹீரோக்கள் உன்னை ஜோடியாக ஏற்கமாட்டார்கள்! என்கிற நடைமுறை நிஜத்தைப் பட்டத்தின் நட்பு வட்டாரங்கள் எடுத்துச் சொல்ல...

பட்டம் அதிர்ச்சியில் படபடத்தார்! அதற்கேற்றமாதிரியே... ஒரே ஒரு குத்துப் பாட்டுக்கு ஆட "இளைய" நடிகரிடம் இருந்து அழைப்பு வந்தது! "நலம் விரும்பிகள் சொன்னது உண்மைதானோ" எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் பட்டத்தை "விரல்" சந்தித்தார். முதல் படத்தில் தன்னை நிராகரித்தவர் என்கிற கோபத்தை விட... இளம் நாயகர்களுடன் ஒரு ரவுண்ட் வர... வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறாரே! என்கிற மரியாதை விரல் மீது பட்டத்திற்கு வந்தது!

(தொடரும்)



## ரசிகரின் சந்தேகம்!

**அநேகமா** நமீதா ஃபீல்டை விட்டுப் போகப் போறாங்க போல! என உலவும் செய்தி தொடர்பாக நமீதா வாயிலேயே பதிலைக் கேட்டு விடுவோம். "இனிமேல் பெரிய ஹீரோ, பெரிய டைரக்டர், பெரிய பேனர் படத்திலேதான் நடிக்கப் போறேன்" என்கிறார். இவரது சமீபத்திய கொள்கை முடிவு இது. இதை அவர் நிஜமாகவே அமுல்படுத்தினால் வருடத்திற்கு எத்தனை படம் தேறும், அதனால்தான் ஃபீல்டை விட்டே போகப் போறாரோன்னு சந்தேகம் வருகிறது பலருக்கும். ஆனால் ஜெகன்மோனியும், இந்திரவிழாவும் வந்தால் தன்னுடைய நிலைமையே வேறு என்கிறார் நமீதா. இந்த படங்களில் டைரக்டரும், நமீதாவும், சதையை நம்பாமல் கதையை நம்பியிருக்கிறார்களாம். அதனால்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார் நமீதா. தலையிலிருந்து பாதம் வரைக்கும் நடித்துக் கொண்டிருந்தவர், இனி முகத்திற்கு மட்டும் அதிக வேலை கொடுக்கப் போகிறாராம்.

## ஆளை விடுங்க!

**ஸ்ரீகாந்த்** தேவாவை, ஒரு படத்திலே வில்லன் வேஷம் போடுறாருன்னு பொறியை கிளப்பிவிட்டுட்டு போயிட்டாய்ங்க... மனுஷன் பதறியடிச்சிட்டாரு. எனக்கு மியூசிக்தான் சார் எல்லாமே! நடிக்க கூப்பிட்டது நெசம்தான். ஆனால் நான் மாட்டேன்னு சொல்லிட்டேங்கிறதுதான் உண்மை என்றார்.

இருக்கிறதை விட்டுட்டு பறக்க நினைக்கிற மனசுக்கு ஸ்ரீகாந்த் தேவாவின் பதில் ஒரு எச்சரிக்கையாக இருக்கும். ஆனாலும், எல்லாரும் கேட்கிறாங்க என்பதால் கொஞ்சம் இறங்கி வந்திருக்கிறார் மனுஷன்! படத்திலே இசையமைக்கிற மாதிரியோ, பாடுற மாதிரியோ காட்சிகள் வந்தால், தாராளமாக நடிக்கிறேன். இதுக்கு முன்னாடி சிவகாசி, வேதா படங்களில் அப்படி நடிச்சிருக்கேன். அதனால் இப்படி நடிக்கறதிலே எனக்கொன்றும் சங்கடம் இல்லை! இசைக்காகவே தன்னை அர்பணிச்சிட்டு இருக்கிற மனுஷனை, இம்சை ராகம் பாட வெச்சுட்டீங்களே...



## 5ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**செல்வன் எம்.எஸ்.ஹபீபுர் ரஹ்மான் 24.02.2009**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எச்.எம்.முஹமட் ஸம்சுதீன், ஜனுள் ஷியாமா தம்பதியரின் மூத்த மகன் ஹபீபுர் ரஹ்மான் தனது ஐந்தாவது பிறந்த தினத்தை (24.02.2009) அன்று வல்ல அல்லாஹ்வின் கிருபையினால் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு வாப்பா, உம்மா, வாப்பம்மா, உம்மம்மா, ஆச்சும்மா, மலேசியாவிலிருக்கும் இப்திகார் மாமா, கஸ்பிகார் மாமா, ரம்ஸான் மாமா, சாச்சிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாவான கலீலுர் ரஹ்மான், லீனா சாச்சி, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் என அனைவரும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் கீழ் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

தகவல் :-

வாப்பா எச்.எம். எம்.ஸம்சுதீன்.



## ஆதவன் ஸ்டார்ட்

"**ஆதவனு**"க்கு தயாராகிவிட்டார் சூர்யா. உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிக்கும் படம் "ஆதவன்". படத்தை இயக்குவது கே.எஸ்.ரவிக்குமார். சூர்யாவிற்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். காமெடிக்கு வடிவேலு. படத்தின் கதையை கே.எஸ்.ரவிக்குமாரிடம் பல படங்களுக்கு உதவி இயக்குனராக பணிபுரிந்துள்ள ரமேஷ்கண்ணா எழுதியுள்ளார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க, ரா.கணேஷ் ஒளிப்பதிவு செய்கிறார்.




## "விளையாட்டுப் பிள்ளை" விஷால்!

**விஷால்** அடுத்து நடிக்கப் போகும் படத்திற்கு தீராத விளையாட்டுப் பிள்ளை எனப் பெயர் சூட்டியுள்ளனர். கிட்டத்தட்ட பிளே பாய் கதைதான். முதல் முறையாக இப்படத்தில் மூன்று நாயகிகளுடன் ஜோடி போடப் போகிறார் விஷால். விஷாலின் முந்தைய படமான சத்யம் படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய திரு இப்படத்தை இயக்கவுள்ளார். தற்போது தோரணை படத்தில் படு சுறுசுறுப்பாக இருக்கிறார் விஷால். கோடை விடுமுறைக்கு இப்படம் ரசிகர்களைக் குஷிப்படுத்த திரைக்கு வருகிறதாம்.

இப்படத்தில் ஸ்ரேயா, விஷாலுக்குச் ஜோடியாக நடித்துள்ளார். பிரகாஷ்ராஜ் முக்கிய ரோலில் நடித்துள்ளார். இப்படத்தைத் தெலுங்கிலும் பிஸ்தா என்ற பெயரில் வெளியிடுகிறார்கள். சமீபத்தில்தான் செல்வராகவன் இயக்கத்தில் விஷால் நடிப்பதாக இருந்த படம் கைகழுவப்பட்டது. இதையடுத்து திரு இயக்கத்தில் "தீராத விளையாட்டுப் பிள்ளை"க்கு வருகிறார் விஷால்.

## மினிசினி

✻ **சத்யம்** படத்தில் ஆர்யா த்ரிஷா ஜோடி வித்தியாசமாகத் தெரிவார்கள் என்கிறார் விஷ்ணுவர்த்தன்.

✻ **சம்பளத்துக்கு** மேலதிகமாகக் கைச் செலவிற்குப் பணம் கேட்டுத் தயாரிப்பாளரை அலறடித்துள்ளாராம் சிம்பு.

✻ **அமீரின்** கண்ணபிரான் படத்திற்கு இசையமைக்க உள்ளாராம் இசைஞானி இளையராஜா.

✻ **கண்ணாமூச்சு** ஏனடா படத்தினைத் தொடர்ந்து மீண்டுமொரு படத்தில் ஜோடி சேர்ந்து நடிக்கவுள்ளனர் பிரித்விராஜ் - சந்தியா.

✻ **ரேவதி** இந்தியில் இயக்கவுள்ள படத்தின் நாயகனாகிறார் மாதவன்.

சி னி வி சி ட்

## காட்சிக்குக் காட்சி நாவல் படமாகிறது!

**ராஜேஷ்குமாரின்** நாவல் ஒன்றுதான் இந்த அகராதி. 1680 நாவல்கள் எழுதியிருந்தாலும் ராஜேஷ்குமாரின் நாவல் ஒன்று படமாவது இதுதான் முதன்முறையாம். விறுவிறுப்பு சஸ்பென்ஸ் என்று படத்தை நகர்த்தியிருக்கிறாராம் டைரக்டர் நாகா வெங்கடேஷ்.


## கந்தசாமியில் விவேக்கிற்கு வெட்டு!

**சுசி** கணேசனின் கந்தசாமியிலிருந்து சத்தமில்லாமல் கழட்டிவிடப்பட்டுள்ளார் விவேக். அவருக்கு பதில் இப்போது வடிவேலு நடிக்கிறார். சிவாஜி படத்தில் கிடைத்த பெயரை தக்க வைத்துக் கொள்ளும்படி விவேக் சுவாரஸ்யமான வேடங்கள் எதையும் செய்யவில்லை. படிக்காதவன் படத்தில் வடிவேலு நீக்கப்பட்ட, அவருக்கென்றே எழுதப்பட்ட காமெடி போர்ஷனில் விவேக் நடித்தார். ஆனால் அது அந்த அளவு எடுபடவில்லை.

இருந்தாலும் வடிவேலு கால்ஷீட் கிடைக்காத கோபம், உச்சத்துக்குப் போய்விட்ட அவரது சம்பளம் காரணமாக, விவேக்குக்குப் பல வாய்ப்புகள் கிடைத்து வந்தன. இப்போது நிலைமை அப்படியே தலைகீழ். விவேக்குக்குப் பதில் பல படங்களில் வடிவேலுவையே ஒப்பந்தம் செய்கிறார்கள்.

கலைப்புலி எஸ். தாணு தயாரிப்பில் விக்ரம் நடிக்க, சுசி கணேசன் இயக்கும் கந்தசாமியில் ஆரம்பத்தில் ஒப்பந்தமானவர் விவேக். ஆனால் இப்போது படத்திலிருந்து அவர் கழற்றி விடப்பட்டுள்ளார். அந்த வேடத்தில் நடிக்கப் போகிறவர் வடிவேலு.

விக்ரம்- வடிவேலு காமெடி இந்தப் படத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாக இருக்கும் என்று கூறுகிறார் சுசி கணேசன். வடிவேலு புதிதாக ஒப்பந்தமாகியுள்ள இன்னொரு பெரிய படம் ஆதவன். இப்படத்திலும் நடிக்கவிருந்தவர் விவேக்தான்.








## இலக்கை அடையும் இளமைகள்!



உறவென்ற பாலத்திற்கு
ஊஞ்சலாடிய நாமிருவர்
உல்லாசமாய் செல்கின்றோம்
உணர்வுகளைத் தவிக்கவிட்டு.

இலட்சியத்தை மிதக்கவிட்டு
இலட்சணத்தைப் பதுக்கிவிட்டு
இலக்கை அடைவதற்கு
இறக்கைகளைத் தேடுகின்றோம்.

ஊரார் ஏதோ நினைக்க
உறவுகள் பதை பதைக்க
உறவாடும் நம்முள்ளம்
உண்மைக்காக உழைத்திடுமே.

பாசத்துடன் பழகும் நாங்கள்
பலதும் கற்க நினைக்கின்றோம்
பாருலகம் போற்றும் வரை
பாசம்தான் உயர்ந்திடுமோ.

கண்ணெதிரே தோன்றும் காட்சி
களங்கமென நாம் நினைத்து
கண்ணியமாய் வாழ்ந்து-எம்
கடவுளை வணங்கல் நன்றே.

சோகங்கள் வந்தாலும்
சோர்வுற்று இருக்காது
சோலை மரம் போல
சோராது உழைத்திடுவோம்.

**-ஜெயம் கிறிஸ்துராசா,**
**இளவாலை.**



## அன்னையின் மடியில்!

பத்து மாதங்கள் சுமந்து
பத்து நிமிட வலியில்
பத்திரமாய் தரையிறங்கி
பிள்ளையின் புன்னகையில்
உன் வலியை மறந்த
என் அன்னையே!

தேயிலைக் கொழுந்தெடுக்கையிலே
உன் உதிரத்தை வேகவைத்து
பாலாக்கிக் கொடுக்க - என்
அன்னையே! மறப்பேனா உன்னை?

கருவறையில் இருக்கும்போது
நீ பட்ட சுமைகளையும்
இதயம் கண்ட காயங்களையும்
கலங்காமல் தீர்த்து வைப்பேன்
தயங்காதே அன்னையே.

நான் அறியா தந்தையை
பாதியிலே பாசக் கயிறு விழ
உடன்கட்டையேறும் நீயோ
எனக்காக வாழ்ந்தாயே
உனை எப்படி மறப்பேன்.

படைக்கும் பிரமனோ
மறுபிறப்பொன்று தந்தால்
அது உன் மடி மீதே
தவழ்ந்திட வேண்டும்.

**-க.தீபருபன்,**
**அனலைதீவு - 06.**

## நான் வளர்த்த முற்றத்து ரோஜா!

என் இதயத் தோட்டத்தில் நான்
எட்டு வருடமாய் நட்டு வைத்த
ரோஜா நீ அல்லது
நான் கற்பம் சுமந்த மழலை நீ
கொஞ்சிப் பேசிய நாட்களும்
கெஞ்சி அழுத இரவுகளும்
இப்பொழுது உன்னிடம்
மடிப்பிச்சை கேட்டு அழுகிறது.

பத்து மாதம் சுமந்த உன் தாயை
உன்னால் பிரிய முடியாது.
எட்டு வருடம் தாங்கிய என்னை
எப்படி மறக்க முடியும்?
உனது ஞாபக சிறைக்குள்
நான் ஆயுள் கைதியாக்கப்பட்டேன்
அதற்கு உன் கண்ணீர்த் துளிகளே
சாட்சி.

மனக் கோலங்களில் எம்மைக்
காணத்துடித்த என்னை
பிணக் கோலமாக மாற்றி விட்டாய்
நீ இல்லாத தேசத்தில்
என் இருப்புக்கள் பொய்த்துப் போனது
ரோஜாவுக்கு என்ன தெரியும்
நிலத்துக்குள் வேரின் நிலை பற்றி.

என் விரல் பிடித்து நீ நகம் கடிக்கின்ற
ஒவ்வொரு பொழுதுகளிலும்
என்னை மறந்திருக்க முடியாது
என் வீட்டு முற்றத்து ரோஜா
வாசம் பரப்புமென நினைத்திருந்தேன்
அது வேஷமாகிப் போனது
திருமணம் எனக்குத் தூரமானது.

மனித மாமிசம் உண்ண நினைக்கின்ற
மனிதர்களுள் நான்
சைவம் என்பதைத் தெரிந்துகொள்
உன் வாழ்க்கைப் புத்தகத்தில்
நீ புரட்டுகின்ற ஒவ்வொரு
அத்தியாயங்களிலும்
என் காதல் வாழ்ந்துகொண்டிருக்கும்
மன்னித்துவிடு
- மரணம் என்னை அழைக்கிறது.

**-மூதூர்,**
**இ.நளீம்.**



## மறுப்பு!



**பாலிவுட்** நடிகை கத்ரினா கைப் பிரகாஷ் ஜா இயக்கத்தில் ராஜ்நீதி என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் அரசியலில் ஈடுபடும் பெண்ணாக அவர் நடிக்கிறார். இது காங்கிரஸ் தலைவர் சோனியாவைப்போல நடித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகின. இதற்கு மறுப்புத் தெரிவித்த பிரகாஷ் ஜா இது முற்றிலும் மாறுபட்ட கதை. கத்ரினா இதில் சேலை அணிந்து நடிக்கிறார். தவிர இது சோனியாவைப் போன்ற கதாபாத்திரம் அல்ல என கூறினார்.


## பெருமை!



**பாலிவுட்** நடிகை கரீனாகபூர் சைவப் பிரியர் என்பதால் பெருமை கிடைத்திருக்கிறது. நடிகை கரீனா அசைவ உண- வுகளை வெறுப்பவர். அவருக்கு சைவ உணவுகள் மட்டுமே பிடிக்கும். அவற்றைத்தான் சாப்பிடுகிறார். உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதை எதிர்க்கும் அமைப்பான பெடா அமைப்பு சமீபத்தில் ஒரு சர்வே எடுத்தது. அதில் சைவ உணவு சாப்பிடுபவர்களில் அழகான, செக்ஸியான பெண் என்று கரீனாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

இதுபற்றி கரீனா கபூர் கூறுகையில், சைவ உணவுகளைச் சாப்பிட வேண்டும் என நான் பல இடங்களில் வலியுறுத்தியிருக்கிறேன். இப்போது அந்தச் சைவ உணவே எனக்கு ஒரு பெருமையைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதை நினைக்கும்போது சந்தோஷமாக இருக்கிறது என்றார்.

## சிகிச்சை!



**பாலிவுட்** நடிகர் ஷாருக் கானுக்குத் தோள்பட்டை அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. மும்பை ப்ரீச் கேண்டி மருத்துவமனையில் நடந்த இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, ஷாருக் நலமுடன் இருப்பதாகவும், அவர் இன்னும் இரு தினங்களில் வீடு திரும்பி விடுவார் என்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். நடிகர் ஷாருக், தோள்பட்டை வலியால் தொடர்ந்து அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து பிரபல மருத்துவர் சஞ்சய் தேசாய் ஆலோசனையின் பேரில் மும்பை ப்ரீச் கேண்டி மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருவழியாக நேற்று ஷாருக்கிற்கு வெற்றிகரமாக ஆபரேஷன் நடந்தது.

# பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி !



78

## சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

**அப்படத்தைப்** பெரிய நிறுவனம் எடுத்தால், அத்துடன் கால்ஷீட் பிரச்சினை ஏற்படாமல் இருந்தால், ஆங்கிலப் படங்களில் நடிக்க நான் ஒப்புக்கொள்வேன். அப்போது கூட நான் ஹாலிவுட்டில் செட்டில் ஆகமாட்டேன். காரணம், நான் இந்திய மண்ணை - இந்தியப் பண்பாட்டை அதிகம் நேசிக்கிறேன்.

இவ்வாறு ரஜினி கூறினார்.

### ரஜினியின் 125-ஆவது படம்

ரஜினியின் 125-ஆவது படம் "ராஜாதி ராஜா": 100 நாட்கள் "ஹவுஸ்புள்" காட்சிகள்

ரஜினிகாந்தின் 125-ஆவது படமாக வெளிவந்த "ராஜாதிராஜா" பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

இது, "பாவலர் கிரியேஷன்ஸ்" தயாரிப்பு. இதற்கான கதையை எழுதி, படத்தை இயக்கியவர் ஆர்.சுந்தரராஜன். திரைக்கதை, வசனத்தைப் பஞ்சு அருணாசலம் எழுதினார்.-

### இரட்டை வேடம்

இந்தப் படத்தில், ரஜினி இரட்டை வேடத்தில் நடித்தார்.

ஒரு ரஜினிக்கு ஜோடி நதியா. இன்னொரு ரஜினிக்கு ராதா.

மற்றும் விஜயகுமார், ராதாரவி, வை.விஜயா ஆகியோர் நடித்திருந்தனர்.

படத்தின் கதை சுவையானது.

ராஜா கோடீஸ்வரன். அமெரிக்காவில் படித்துக்கொண்டிருக்கிறான். ஊரில் இருக்கும் ராஜாவின் அப்பா விஜயகுமார், மகனுக்குத் தெரியாமல் "சின்னவீடு" ஒன்றை "செட்டப்" செய்துகொள்கிறார். சின்னவீடு வை.விஜயாவும் அவளது தம்பி ராதாரவியும் பணக்காரரின் சொத்துக்குக் குறி வைத்துக் காத்திருக்கிறார்கள்.


சின்னவீட்டின் போலி அன்பைத் தெரிந்துகொண்ட பணக்காரர், அவளையும், அவளது தம்பியையும் வீட்டை விட்டுத் துரத்தியடிக்கிறார். ஆனால் அவர்களோ இரவில் பணக்காரர் போதையில் இருக்கிற சமயம், அவரை மாடியில் இருந்து கீழே தள்ளிக் கொலை செய்து விடுகிறார்கள்.

அப்பாவைப் பார்க்க அமெரிக்காவில் இருந்து ராஜா வருகிறான். சென்னை விமான நிலையத்தில் இறங்கியதுமே தன் நண்பர்கள் மூலம் அப்பாவின் மரணம் பற்றி அறிந்து கொள்கிறான். அப்பாவின் சின்னவீட்டை அவன் பார்த்ததில்லை. சின்னவீட்டுக்கும் அவனைத் தெரியாது. இதனால் உண்மையை அறிய, சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தனது நண்பன் ஜனகராஜை தனது பெயரில் தங்கள் பங்களாவுக்கு அனுப்பி வைக்கிறான். ஜனகராஜின் கார் டிரைவராக ராஜாவும் அந்தப் பங்களாவுக்குள் அடியெடுத்து வைக்கிறான்.

சில நாட்களிலேயே சொத்துக்காகத் தனது அப்பா கொல்லப்பட்ட உண்மையை கண்டுபிடிக்கிறான். சின்னவீடு வை.விஜயாவையும், அவள் தம்பி ராதாரவியையும் பொலிஸ் வளையத்துக்குள் சிக்க வைக்கத் திட்டம் தீட்டுகிறான்.

இந்த நேரத்தில் "பணக்காரர் வாரிசு ஜனகராஜ் இல்லை டிரைவர்தான் வாரிசு" என்பதை ராதாரவி கண்டுபிடித்து, ஜனகராஜை கொலை செய்கிறார். அந்தப் பழியை ராஜா மீது போட்டுவிடுகிறார்.

ராஜாவுக்கு, கோர்ட்டு தூக்குத் தண்டனை விதிக்கிறது. ஜெயிலில் அடைக்கப்பட்ட ராஜா, உண்மைக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தும் எண்ணத்தில் ஜெயிலில் இருந்து தப்புகிறான்.



"ராஜாதிராஜா" பிளாட்டினம் டிஸ்க் வெளியீட்டு விழாவில், முதல்-அமைச்சர் கருணாநிதியுடன் ரஜினிகாந்த்.

### மற்றொரு ரஜினி

அப்போதுதான், தன்னை அப்படியே அச்சில் வார்த்தது போலிருக்கும் சின்னராசுவைக் காண்கிறான். ராஜாவைப் பார்த்து சின்னராசுவும் அதிர்ந்து போகிறான். ராஜா தனது இக்கட்டான சூழலைச் சின்னராசுவிடம் விவரித்து, "என்னைப் போல உள்ள நீ, எனக்காக 15 நாள் ஜெயிலில் இருந்தால் அதற்குள் நான் உண்மைக் குற்றவாளிகளைத் தகுந்த ஆதாரத்துடன் பொலிஸில் ஒப்படைத்துவிடுவேன். இந்த முயற்சி 15 நாட்களில் முடியாவிட்டால் கூட, ஜெயிலுக்கு வந்து எனக்கான தண்டனையை ஏற்றுக்கொள்வேன்" என்கிறான்.

சின்னராசுவுக்கும் ஒரு நெருக்கடி இருந்தது. கிராமத்து மாமா பெண் மீது உயிரையே வைத்திருந்தான். மாமா மகளுக்கும் அவன் மீது காதல். மாமா பணம் படைத்தவர். சின்னராசுவிடமோ அவர் அளவுக்கு அந்தஸ்து இல்லை. என்றாலும் மாமா மகள் தந்த தைரியத்தில் மாமாவிடம் பெண் கேட்கச் செல்கிறான்.

அவரோ தனக்குச் சரிநிகர் அந்தஸ்து இல்லாதவன் என்று கூறி அவமானப்படுத்தி விடுகிறார். முடிவாக, ஒரு மாதத்திற்குள் 50 ஆயிரம் பணத்தைக் கொண்டு வந்தால் பெண் தருகிறேன் என்று "கெடு" வைக்கிறார்.

இந்த மாதிரியான சூழ்நிலையில் ராஜாவைச் சந்தித்த சின்னராசு, தனது நெருக்கடியை ராஜாவிடம் சொல்கிறான். தனக்கு மட்டும் உதவினால் பணமும் தந்து, திருமணமும் செய்து வைக்கிறேன் என்று ராஜா வாக்குறுதி கொடுக்கிறான். அதை நம்பி சின்னராசு ஜெயிலுக்குப் போகிறான்.

(பயணிக்கும்)



# லேடீஸ் ஸ்பெஷல்

# பழங்கள் உடலுக்குச் சிறந்த மருந்தாகும்



தாகத்தையும் பசியையும் போக்கும் மருந்தாகவும் செயல்படுகிறது. பலரைப் பாதிக்கும் சிறுநீரகக் கோளாறு, கல்லீரல் கோளாறு முதலியவற்றைத் தடுக்க ஆப்பிள், வாழைப்பழம், திராட்சை, பப்பாளி, அன்னாசி ஆகிய பழங்களைத் தினமும் பழ சாலெட்டாக 400 கிராம் சாப்பிட்டாலே போதும். பழங்களில் இரும்புச் சத்துடன், அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களும், விற்றமின்களும் உள்ளன. பழங்களைத் தேனுடன் கலந்து சாப்பிடுவது மிகவும் நல்லது.

**அப்பிள்....!**

இதில் உள்ள விற்றமின் ''சி'' மிகவும் ஆற்றல் வாய்ந்தது. பல நோய்களுக்கான விஷப்பொருட்கள் உடலில் தங்காமல் தடுக்கும் மகத்தான சக்தி வாய்ந்தது. ஆப்பிள் பழத்துடன் தேன், ரோஜா இதழ்கள் கலந்து சாப்பிட்டால் இரத்த சோகை, நரம்புத் தளர்ச்சி நீங்கிவிடும். ஆப்பிள் ஜூஸ் குழந்தைகளுக்கான வயிற்றுப் போக்கைக் குணமாக்கும்.

**வாழைப்பழம்.....!**

உடல் நலக்குறைவால் பலவீனமடைந்தவர்கள் உடல் தேறி நலம் பெறவும், உடல் தசை நன்கு இயங்கவும் வாழைப்பழம் சாப்பிடலாம். நீரிழிவு நோயாளிகள் தவிர எல்லா வயதினரும் தவறாமல் உண்ண வேண்டிய பழம்.

**ஆரஞ்சு.....!**

எந்த வயதினரும் எந்த நோயாளியும் சாப்பிடலாம். உடலுக்குப் புத்துணர்ச்சியும் வலுவும் தருகிறது. கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு மிகவும் நல்லது. 3டம்ளர் பால் 1 டம்ளர் ஆரஞ்சுச் சாறு ஜீரண உறுப்புகளுக்கும், நோய் எதிர்ப்புச் சக்திக்கும் இதில் உள்ள ''பைட்டோ கெமிக்கல்'' உதவுகிறது. இரத்தம் உறைவதைத் தடுப்பதால் மாரடைப்பு தடுக்கப்படும் வாய்ப்பு அதிகம்.

**மாதுளம் பழம்.....!**

இதயத்திற்கும் நெஞ்சு வலிக்கும் மகத்தானது மாதுளம் பழம். இதயம், குடல், சிறுநீரகம் நன்கு இயங்க மாதுளம் பழச்சாறு நல்லது. மாதுளம் பழத்தில் குளுக்கோஸ் சக்தி நிறைய உள்ளது.

**பப்பாளி.....!**

சீசன் இல்லாத காலத்திலும் தேடிப்பிடித்துச் சாப்பிட வேண்டிய பழம். மூன்று வேளை உணவிலும் சேர்த்துக் கொள்ளலாம். கல்லீரல், மாதவிலக்குக் கோளாறுகள் அகலும். மூட நம்பிக்கை காரணமாக இதை ''மிஸ்'' பண்ணாதீர்கள். பப்பாளிப் பழத்தைத் துண்டுகள் ஆக்கிச் சீரகப் பொடி, எலுமிச்சைப் பழச்சாறு கலந்து சாப்பிட்டால் ஜீரணம் குணமாகும். பப்பாளியுடன் தேன் கலந்து சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கிவிடும். தாய்ப்பால் சுரக்கப் பப்பாளி பயன்படும்.

**கொய்யா....!**

இரத்தத்தை எளிதில் சுத்தப்படுத்தும். தோல் நோயாளிகளுக்கு அரிய மருந்து கொய்யாப்பழம். வருடம் முழுவதும் கிடைக்கும். இப்பழத்தைத் தவறாமல் சாப்பிட வேண்டும்

**அன்னாசி......!**

இரத்தச் சோகை, மஞ்சள் காமாலை நோய் வராமல் தடுக்கும். வயிற்றிலுள்ள பூச்சிகளைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. ஆனால் அதிகம் சாப்பிடக்கூடாது. வாயும் குடலும் வெந்துவிடும். அன்னாசிப் பழம் இதயத்திற்கு மிகவும் நல்லது. புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தப் பயன்படுகிறது. உடல் சூடு உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது.

**உலர் திராட்சை......!**

தினமும் 25 கிராம் உலர் திராட்சை சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சியின்றி வாழலாம். மூளை சுறுசுறுப்பாகச் செயல்படும். நாள்பட்ட நோயாளிகளுக்கு நல்ல உணவு.

3திராட்சை - சர்க்கரை சேர்க்காத திராட்சைப் பழச்சாறு நீரிழிவு நோயைக் குணமாக்கும். ஒரு அவுன்ஸ் திராட்சைச் சாறுடன் சிறிது கரட் சாறு சேர்த்துத் தொடர்ந்து சாப்பிட்டு வர, சிறு நீர் தாரைகளில் உண்டாகும் கல் கரைந்துவிடும்.

## ஓர் செய்தி

### பிரிட்டனில் சிறுமிகளைக் கட்டாயப்படுத்தி நடத்தி வைக்கும் திருமணங்கள்



**வாழ்க்கையைப்** பற்றி சரிவரப் புரிந்து கொள்ளும் பக்குவமே இல்லாத சிறுபிள்ளைகளைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் பிரிட்டனிலும் நிலவுகிறது. இதனால் அங்கு அரசாங்கம் சிறு பிள்ளைகளை நிர்ப்பந்தமாகத் திருமணப் பந்தத்தில் இணைப்பதைத் தடுப்பதற்கு விசேட பிரிவொன்றினை ஏற்படுத்தியுள்ளது. 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த விசேட பிரிவு நிறுவப்பட்டது. இந்தப் பிரிவு இன்றுவரை 58 சிறுமிகளைக் கட்டாயத் திருமணத்திலிருந்து காப்பாற்றியுள்ளது. இவர்களில் பதினொரு பேர் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுமிகளாவர். ஒன்பது சிறுமிகள் பதினைந்து வயதினர். ஒரு சிறுமிக்கு 14 வயது. இன்னொன்றுக்குப் பதின்மூன்று வயது. ஒன்பது வயதுச் சிறுமியொருத்தியும் காப்பாற்றப்பட்டிருக்கிறாள்.

வெளிநாடுகளில் திருமணம் செய்து கொடுப்பதற்காகப் பிரிட்டிஷ் பாடசாலைகளிலிருந்து சிறுமிகள் திடீர் திடீரெனக் காணாமல் போய்விடுகின்றார்களாம். வலுக்கட்டாயத் திருமணங்கள் மற்றும் ''கௌரவக் குற்றங்களால்'' பாதிக்கப்படும் சிறுமிகளைப் பாதுகாப்பதற்காக ''கர்ம நிர்வாண'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று பிரிட்டனில் இயங்கி வருகிறது. ஜஸ்விந்தர் சங்ஹேரா என்ற பெண்மணியே இதன் தலைவியாகச் செயற்படுகிறார். இவருக்குப் பதினைந்து வயதானபோது கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் முனைந்ததால் வீட்டை விட்டுத் தப்பியோடி வந்தவர் இவர். கடந்த வருடம் ஏப்ரல் மாதம்தான் இந்தத் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட நான்கு சிறுமிகள் சராசரியாக ஒவ்வொரு மாதமும் உதவி கோரித் தம்மை நாடுகிறார்கள் என்கிறார் சங்ஹேரா.

பிரிட்டனின் கிழக்கு மிட்லாண்ட்ஸ் என்ற பகுதியில் வாழ்ந்த பாகிஸ்தானியக் குடும்பமொன்றைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமி காப்பாற்றப்பட்ட விதம் குறித்து செல்வி சங்ஹேரா விளக்கினார். தன்னைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து கொடுக்கப் போகிறார்களென்று அந்தச் சிறுமி ஒருநாள் பாடசாலை ஆசிரியையிடம் தெரிவித்தாளாம்.

ஆசிரியை உடனடியாகவே மேலே குறிப்பிட்ட இரு நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டதையடுத்துச் சிறுமி காப்பாற்றப்பட்டாள். இப்போது அந்தச் சிறுமியை ''கர்ம நிர்வாண'' தொண்டு நிறுவனம் தமது பொறுப்பில் எடுத்துப் பராமரித்து வருகிறது. தற்போது பதினொன்றுக்கும் 15இற்கும் இடைப்பட்ட ஐந்து சிறுமிகளைத் தமது பொறுப்பில் எடுத்துக் கொள்வதற்காக நீதிமன்றம் சென்றிருக்கிறது மேற்படி தொண்டு அமைப்பு. பதின்மூன்று வயதுச் சிறுவனொருவன் தந்தையானது பற்றிய பரபரப்புச் செய்தியும் கடந்த வாரம் பிரிட்டனிலிருந்துதான் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## உங்கள் பிரச்சினை என்ன?

**சமூகத்தில்** பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 'உங்கள் பிரச்சினை என்ன?' என்ற இந்தப் புதிய பகுதி மூலம் கலந்துரையாடலாம். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள் மட்டுமல்ல, குடும்பத்தில், அலுவலகத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளலாம். இயன்றவரை உங்கள் பிரச்சினை தீர ஆலோசனைகள் தரப்படும்.

திருமதி அ.ஸ்ரெல்லா
கொழும்பு.

**கேள்வி:-**

எங்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர்களின் வயது 10,14,16. இவர்களில் இருவர் எனது கணவரின் முதல் தாரத்துப் பிள்ளைகள். மூத்த இரண்டு பிள்ளைகளின் உண்மையான தாய் நானில்லையென்று மந்த புத்தியுள்ள ஒருத்தி அப்பிள்ளைகளிடம் அண்மையில் கூறிவிட்டார். திடீரென அவர்களுக்குக் கிடைத்த இந்த அதிர்ச்சிச் செய்தி அவர்களை மிகவும் பாதித்துவிட்டது. தமது உண்மையான தாய் யாரென்று கூறுமாறு அவர்கள் இருவருமே என்னோடு சண்டை போடுகிறார்கள். அவர்கள் இருவரையும் குழந்தைப் பருவத்திலிருந்தே நான் அன்பாகவும் ஆதரவாகவும் வளர்த்து வந்ததால், அவர்கள் என்னையே தமது தாயென்று நினைத்து அன்பு செலுத்தி வந்தனர். அவர்கள் இருவரின் உண்மையான தாயோடு எனது கணவருக்கு எவ்விதத் தொடர்பும் இப்போது கிடையாது. அந்த முதல் தாரத்துப் பெண் எங்கிருக்கிறார் என்று எதுவும் தெரியாது. அவர்கள் இருவரும் என்னோடு கதைக்கின்றபோதிலும், என்னை எதிர்கொள்ளும் போதும் கூச்சமடைகின்றார்கள். நானும் கணவரும் இது பற்றி அவர்களுடன் பேச முயன்றோம். ஆனால் ஏனோ அவர்கள் எங்களை வெறுப்போடு பார்க்கிறார்கள்.

**பதில்:-**

மிகவும் சிக்கலான நிலைமை இது. மிகவும் தாமதமாகத் தெரியவந்த இந்த விடயம் அவர்களுக்கு மிகுந்த மன அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். அதுவும் இந்த வயதில் அவர்கள் இதனை அறிந்து கொண்டிருப்பதானது, பல பாதிப்பான விடயங்களையும் ஏற்படுத்தக் கூடும். இருந்தாலும் பிரச்சினைகள் ஏற்படாமல் நீங்கள் இருவருமே கெட்டித்தனமாக நிலைமைகளைக் கையாள வேண்டும். முன்பு போலவே அவர்கள் மீது தொடர்ந்து அன்பாகவும் ஆதரவாகவும் நடந்துகொள்ளுங்கள்.

உங்களுக்கோ கணவருக்கோ குற்ற உணர்வு இருக்க வேண்டிய தேவையில்லை. சொந்தப் பிள்ளைகளைப் போலவே நீங்கள் அவர்கள் மீது அன்பு பாராட்டி வளர்த்திருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினை பற்றிப் பேச நேர்ந்தால் அவர்களைப் புண்படுத்தாதவாறு, அவர்களின் தாயார் மீது குற்றம் சுமத்தாதவாறு நடந்துகொள்ளுங்கள். சிறு வயதிலிருந்தே எவ்வளவு நெருக்கமாகவும், அன்பாகவும் இருந்தீர்கள் என்பதைக் காட்டும் குடும்ப அல்பங்களை அவர்களுக்குக் காண்பியுங்கள். காலம்போகப் போக எல்லாம் சரிவருமென்ற நம்பிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

முரசு வாசகர்களுக்கான போட்டி -

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:-
பிரிட்டனில் சிறுமிகளைக் கட்டாயத் திருமணத்தில் இணைப்பதைத் தடுப்பதற்கு நிறுவப்பட்ட தன்னார்வத் தொண்டுப் பிரிவின் பெயர் என்ன?

163

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே. அ. அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........

❧ சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்.

❧ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

❧ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -163தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 03.03.2009

பரிசுப் போட்டி இல -161 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

A. விஜயரட்ணம்,
செனி. கிளயார் தோட்டம்,
தலவாக்கலை.

## முகத்திற்கு சிவப்பழகைக் கொடுக்கும் குங்குமப் பூ

அந்தக் கண்களுக்கு பளிச் அழகைத் தருவது அடர்த்தியான இமைகள். பட்டாம்பூச்சி போல படபடக்கும் இமைகள் அமையக் குங்குமப்பூ உதவுகிறது.

❖ எந்தப் பூவிலும் இல்லாத புதுமை குங்குமப்பூவில் உண்டு. உடல் நிறத்தைச் சிவப்பாக மாற்றக் கூடிய அற்புதக் குணம் இதில் நிறைந்து காணப்படுகிறது.

❖ குங்குமப்பூவை உரசி ஒரு டேபிள் ஸ்பூன் தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும்.

❖ குங்குமப்பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணெய் கலந்து நன்றாகக் குழைக்கவும்.



❖ இந்தக் கலவையைத் தினமும் பூசிவர உதடுகள் செவ்வாழை நிறம் பெறும். உதடுகளின் வரட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்துவிடும்.

❖ இந்தக் கலவையை நகங்கள் மீது பூசி வர, நகங்களும் இயல்பான நிறம் பெறும். நகச் சுத்தி வந்து அழுகிப்போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றைக் குங்குமப்பூ, வெண்ணெய் கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும்.

❖ முகத்திற்கு வசீகரத்தை தருவது, கவர்ச்சி மிகு கண்கள்தான்.

❖ குங்குமப்பூவை பொடியாக்கி வைத்துக் கொள்ளவும். அதில் தினமும் ஒரு சிட்டிகை அளவு எடுத்துக் கொள்ளவும். அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும்.. இந்தக் கலவையை முகத்தில் பூசிவர முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதைக் காணலாம்.

❖ சில பெண்கள் நல்ல நிறமாக இருப்பார்கள். ஆனால் உதடுகள் மட்டும் கருமை படர்ந்து அசிங்கமாக இருக்கும். இப்படிப்பட்ட பெண்கள் குங்குமப்பூவைப் பயன்படுத்தினால் அழகாக மாறுவார்கள். மேலும் கர்ப்பிணிகள் பாலில் குங்குமப்பூவைக் கலந்து சாப்பிட்டால் குழந்தை மிகவும் சிவப்பாக பிறக்கும்.

# தகர்ந்தது

# புலிகளின் விமானமும் பிரபாகரனின் நம்பிக்கையும்

**கொழும்பு** நகரில் வான் புலிகள் தமது ஒன்பதாவது தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதற்கு முந்திய எட்டுத் தடவைகளும் வான் தாக்குதலை நடாத்தியிருந்த புலிகள் இம்முறை வான் கரும்புலித் தாக்குதலை நடாத்தியிருப்பதாகக் கூறுகின்றனர். வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் புதுக்குடியிருப்பிற்குள் முடக்கப்பட்ட, புலிகளின் ஏழு ஓடுபாதைகள் அமைந்த பிரதேசங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இராணுவப் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் புலிகளின் விமானங்கள் பயன்படுத்துவதற்கு ஏழு ஓடுபாதைகளையே புலிகள்



அமைத்திருந்தனர் என இராணுவம் கூறியிருக்கின்றது. இதைவிட விமான உதிரிப்பாகங்கள் சிலவற்றை எரிந்த நிலையில் கண்டெடுத்த இராணுவத்தினரிடம் புலிகள் தமது விமானங்களையும் கிறிஸ் பூசி மண்ணுக்குள் புதைத்திருப்பார்கள். அவர்களினால் அவற்றை இனிமேல் பயன்படுத்த முடியாது என்ற கருத்தே மேலோங்கியிருந்தது. இந்நிலையில் கடந்த வெள்ளி இரவு புலிகளின் விமானங்கள் தலைநகர் நோக்கி வருகின்றது என்ற செய்தி சாதாரண மக்களுக்கு இருந்ததைப் போலவே படையினருக்கும் ஓர் ஆச்சரியமான செய்தியாகவே இருந்துள்ளது.

புலிகளின் வான் தாக்குதல் நடாத்தப்பட்ட தினத்தன்று புலிகளை 88 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள் சுற்றி வளைத்திருப்பதாகக் கூறிய இராணுவத்தினர் தமது இராணு-வப் புலனாய்வுத் தகவல்களின் மீது வைத்திருந்த அதீத நம்பிக்கையினால் சற்றுக் கவனக் குறைவாக இருந்தமையே, புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்ட விமானங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான மாங்குளம், மடு, சிலாவத்துறையினூடாக எதுவித ஆபத்தும் இன்றி பறந்துவர வாய்ப்பாக அமைந்துள்ளது. எனினும், விமானங்கள் மேலெழுந்தபோது விமான இரைச்சலைக் கேட்டதாகப் புதுக்குடியிருப்பில் இருந்த இராணுவத்தினரால் இராணு-வத் தலைமையகத்திற்குத் தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது. எனினும், புலிகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது என்ற அதீத நம்பிக்கையில் இருக்கின்ற இராணுவத் தலைமையகம் குறித்த தகவலின் மீது பெரிதாக அக்கறை செலுத்தவில்லை போன்றே தெரிகின்றது. ஏனெனில் வவுனியாவில் பொருத்தப்பட்டுள்ள ராடர் கருவிகளில் விமானங்களை அவதானித்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே விமானப் படையினரின் F7 தாக்குதல் விமானம் மேல் எழும்ப உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிலாபத் துறையிலிருந்து கற்பிட்டி, சிலாபம், நீர்கொழும்புப் பிரதேசங்களினூடாகப் பயணித்த புலிகளின் விமானங்கள் தலை நகரின் வான் பரப்புக்குள் நுழைந்துவிட்டன. ஏற்கனவே திட்டமிட்டபடி கட்டுநாயக்கா விமானப் படைத் தலைமையகத்தின் மீது தாக்குதல் நடாத்த வந்த விமானம் கட்டுநாயக்கா நோக்கிச் செல்ல, இறைவரித் திணைக்களத்தின் மீது தாக்குதல் நடாத்திய வி-மானம் தலைநகரின் மிகவும் கேந்திர நிலையங்களைச் சுற்றித் தனது இலக்கினைத் தேட ஆரம்பித்தது. விமானப்படைத் தலைமையகம், இராணுவத் தலைமையகம், அலரிமா-ளிகை, ஜனாதிபதி மாளிகை, துறை முகம் போன்ற பல முக்கியமான அமைவிடங்களை இரண்டுக்கும் மேற்பட்ட தடவை சுற்றிவந்த இவ்விமானம் இறுதியாக இறைவரித் திணைக்களத்தின் அருகே வெடித்துச்





சிதறியுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றுடன் ஒப்பிடுகின்றபோது இறைவரித் திணைக்களம் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை. விமானப் படைத் தலைமையகம் மீது தாக்குதல் நடத்துவதே திட்டமாக இருந்திருக்க வேண்டும் என்றும், இலக்குத் தவறிய விமானி இறைவரித் திணைக்களத்தின் மீது தாக்குதல் நடாத்திவிட்டாரென்று சில தரப்பினரால் கூறப்படுகின்றது.

புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் இந்த இராணுவப் பின்னடைவிற்கு இராணுவத்தினரின் பல்குழல் பீரங்கிகளின் சூட்டாதரவிற்கு அடுத்தபடியாக விமானப் படையின் விமானத் தாக்குதல்களே காரண-மாக அமைந்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அதற்குப் பழி வாங்குவதற்கு விமானப்படைத் தலை-மையகம் பொருத்தமான இடமா என்பது சிந்திக்க வேண்டியது.

விமானப்படைத் தலைமையகம் என்று கூறப்படுகின்றபோதும் அது பெயரளவிலேயே குறித்த இடத்தில் இயங்கி வருகின்றது. தாக்குதல் விமானங்களைத் தரையிறக்குவதற்கான ஓடுபாதைகள்கூட இங்கே அமைந்திருக்கவில்லை. இரவு நேரத்தில் விமானப்படைத் தளபதி போன்ற அதிகாரிகள் தங்குவதும் இல்லை. இவற்றைப் புலிகள் நிச்சயம் அறிந்தே இருப்பார்கள். ஆக விமானப்படையை பழி தீர்ப்பதற்காகப் பல வருட முயற்சியில் கட்டப்பட்ட விமானத்தையும் பயிற்றப்பட்ட விமானியையும் வெறுங் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப் புலிகள் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். எனவே பலராலும் கூறப்படுவது போன்று விமானப்படைத் தலைமையகமே தாக்குதலின் முக்கிய இலக்காக இருந்தது என்ற கருத்து சற்றுப் பின்தள்ளப்படுகின்றது. ஆனால் இதை முற்றாக நிராகரித்து விடவும் முடியாது. அதே நிலையே இராணுவத் தலைமையகத்திற்கும் உள்ளது.

அப்படியானால் புலிகளின் தாக்குதல் திட்டத்தில் முதன்மை இலக்காக அலரி மாளிகை அல்லது ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றில் ஒன்றே அமைந்திருக்க வேண்டும். உண்மையிலேயே புலி-களைப் பொறுத்தவரையில் வன்னியில் இராணுவத்தினர் மேற்கொள்கின்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளுக்கும் உந்து சக்தியாக விளங்குபவர் பிரபாகரனினால் யதார்த்தவாதியாக இனங்காணப்பட்ட ஜனாதிபதியாவார். அந்த யதார்த்தவாதியே இன்று பிரபா-கரனின் வீழ்ச்சிக்கும் காரணமாகிவிட்டார் என்பதனால் அவரின் வாசஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் புலிகள் தமது அனைத்து வளங்களையும் செலவழிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அது ஒன்றும் இலகுவான காரியமல்ல. ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ள அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றை நேரடியாக விமானம் மூலம் தாக்க முயற்சித்தால் சூழவுள்ள உயர்ந்த கட்டடங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள விமான எதிர்ப்பு ஆயுதங்களிடம் நிச்சயம் சிக்கிக்கொள்ள வேண்டியேற்படும். ஆனால் புலிகளின் இந்த இலக்குகளுக்குச் சமாந்தரமாக அமைந்துள்ள சேர்.சிற்றம்பலம் காடினர் வீதியை அண்டியதாக இராணுவத் தலைமையகம் அமைந்துள்ளது.

இவ்வீதியின் இரு மருங்கிலும் உயர்ந்த கட்டடங்களும் காணப்படவில்லை. எனவே துறைமுகத்திற்கு அப்பால் விமானத்தின் உயரத்தைக் குறைத்துக்கொண்ட விமானி லேக்கவுஸ் கட்டடத்திற்கு மேலாக வந்து சேர்.சிற்றம்பலம் காடினர் வீதியை அடைந்து அதன் வழியே விமானப்படைத் தலைமையகம் வந்து மைதானத்தின் மேலாகக் குறுக்காகப் பறந்து அலரி மாளிகையைத் தாக்க முயற்சித்திருக்கலாம். இவ்வாறு செல்லும் போது தரையிலிருந்து மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பிரயோகங்களை மட்டுமே சமாளிக்க வேண்டியேற்படும். உயர்ந்த கட்டடங்களில் இருக்கும் விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்குத் தாழ்வாகப் பறக்கும் விமானத்தை இலக்கு வைப்பதே கடி-னமாக அமையும். எனவே முயன்று பார்ப்பது தவறும் பட்சத்தில் விமானப்படைத் தலைமையகத்தைத் தாக்குவது என்பது புலிகளின் திட்டமாக அமைந்திருக்கும்.



ஆனால் தரையிலிருந்து சரமாரியா-கத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் சந்தித்த புலிகளின் விமானம் இறைவரித் திணைக்களத்திற்கு அருகாமையில் சென்றுகொண்டிருக்கும் போது விமானப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறியிருக்கிறது. அல்லது விமானியி-னால் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீது தாக்குதல் நடாத்தச் சென்ற மற்றைய விமானம், விமானத்தளத்தின் ஓடுபாதை பாதுகாப்பு வேலிக்கு அப்பால் வீழ்ந்து நொறுங்கியுள்ளது. இவ்விமானத்தின் மீது விமானப் படைக்குச் சொந்தமான F7 தாக்குதல் விமானம் தாக்குதல் நடாத்தியதாகக் கூறப்படுகின்றபோதிலும், அதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் விமானத்தின் சிதைவுகள் காணப்படவில்லை. அவ்வாறு தாக்கப்பட்டிருந்தால் விமானத்தின் சிதைவுகளைக் கண்டுபிடிப்பதுவே கடி-னமாக அமைந்திருக்கும். ஆனால் கட்டுநாயக்காவில் விழுந்த விமானத்தின் பெரும் பகுதி மீட்கப்பட்டுள்ளதுடன், விமானியின் உடலும் மீட்கப்பட்டுள்ளது.



இவ்விமானத்தின் இலக்காக விமானப் படைத் தளத்தில் தரித்திருந்த போர் விமானங்களே இருந்த படியால் புலிகளின் இவ்விமானம் மிகவும் தாழ்வாக வந்தே தாக்குதல் நடாத்த வேண்டியிருந்தது. அவ்வாறு வரும்போது தரையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு விமானி இலக்காக வேண்டியேற்பட்டுள்ளது. முதலில் இடது கையில் காயத்துக்குள்ளான விமானி விமானத்தின் கட்டுப்பாட்டை இழந்து அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், அடுத்த குண்டு விமானியின் நெஞ்சுப் பகுதியைத் தாக்கியதுடன், அவர் உயிரிழந்துள்ளார். பறந்துகொண்டிருந்த வேகத்திலேயே கட்டுப்பாட்டை இழந்த விமானம் தன் போக்கிற்குச் சென்று விமான நிலையத்திற்கு அருகிலிருந்த தென்னை மரமொன்றுடன் மோதி நீர் நிலையொன்றுக்குள் விழுந்துள்ளது. இதனால் பொருத்தப்பட்ட குண்டுகள் எவையும் வெடிப்பதற்கான சாத்தியங்கள் ஏற்படவில்லை.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் வான் பரப்புவரை விமானத்தைச் செலுத்தி வந்த புலிகளின் தற்கொலையாளி மீது விமானப் படையினரின் தாக்குதல் இலக்குத் தவறியிருக்குமாயின், விமானப் படைத் தளத்தினுள் சுமார் 200 கிலோகிராம் நிறையுடைய சி4 ரக குண்டுகளையும், விமானத்தையும் வெடிக்க வைத்துப் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்குமென்றே கூறப்படுகின்றது. எப்படியோ, இரு விமானங்களும் புலிகளின் திட்டத்தை நிறைவேற்றாமலே நாசமாகியுள்ளன.

புதுக்குடியிருப்பிலிருந்து விமானங்களை அனுப்பத் தீர்மானித்த போதே அவை திரும்பவும் தரையிறங்க முடியாதென்பதை அனுமானித்த பிரபா-கரன் அவற்றைப் பாதுகாப்பதன் மூலமும் எதுவித பயனும் இனி-மேல் கிடைக்கப்போவதில்லை என்ற நிலையில், தனது உயர் தளபதிகள் இருவரையும் தற்கொலைதாரிகளாக மாற்றி அனுப்பிவைத்திருந்தார். அவர்களுடன் இறுதியாகப் பிரபாகரன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தில் அவர்கள் இருவரையும் இறுகக் கட்டியணைத்திருக்கும் பிரபாகரனின் கண்களில் நிறைந்திருக்கும் நம்பிக்கையானது இவர்களைத் தனது இறுதி அஸ்திரமாகப் பிரபாகரன் பயன்படுத்துகிறார் என்பதும், இவர்கள் எந்தளவிற்கு தான் கூறியபடி இலக்கினை அடைகிறார்களோ, அந்தளவிற்குப் புதுக்குடியிருப்பில் போடப்பட்டிருக்கும் சுருக்குக் கயிறில் மாற்றம் ஏற்படும் என்பதும், பிரபாகரனின் நம்பிக்கையாகவும் இருந்துள்ளது. ஆனால் அந்த எதிர்பார்ப்பும் பிரபாகரனுக்குச் சாதகமாக அமையவில்லை.

இது ஒருபுறமிருக்க, புலிகளின் விமானங்களைத் தாக்கியழித்துவிட்டதாகவும், இனிமேல் வான் அச்சுறுத்தல் இல்லை எனவும் இராணுவத் தரப்பு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனினும் புலிகளிடம் இன்னுமொரு விமானம் இருக்கும் என்ற ஊகத்தையும் உதாசீனப்படுத்த முடியாது.

தவிர்க்க முடியாத காரணத்தால் பட்டாம்பூச்சி அடுத்தவாரம் வெளிவரும்

**நமது** நாட்டில் பெரிய மனிதர்களில் பெரும்பாலோர் மனிதாபிமானம் இல்லாதவர்கள்.

அவர்களிடம் போய்ச் சிபாரிசுகளுக்குக் கைகட்டி நிற்பது அடிமைத்தனமானது; அவமானகரமானது.

தொழிற்சாலையில் டெஸ்பாட்சிங் குமாஸ்தாவாகச் சேர்த்துவிட்டார்.

வாரம் ஐந்து ரூபாய் சம்பளம் எனக்குக் கட்டுப்படியாகத்தான் இருந்தது. ஆனாலும் அது வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை என்று நான் கருதினேன்.

கண்களுக்குத் தெரியும்.

சென்னை ஸ்டுடியோக்களிலே ஒரு நடுத்தர வயதுக்காரர் அடிக்கடி காணப்படுவார். கையில் ஒரு பெரிய பையிருக்கும். அதில் அப்பளம், வடாகம், ஊறுகாய், கறிவேப்பிலைப் பொடி



# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

## பகுதி -71

## நான்காம் பாகம்

ஆனாலும் பரவாயில்லை என்றாலோ பயனும் அற்றது.

அதைவிடச் சற்றுத் தனியாக உட்கார்ந்து, சுயபுத்தியோடு சிந்தியுங்கள்: வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்து விடுபட ஒரு நல்லவழி உங்களுக்குத் தெரியும்.

இங்கே என் கதையைக் கொஞ்சம் சொல்வது பொருந்தும்.

நான் பன்னிரண்டு வயதிலேயே எட்டாம் வகுப்புப் படித்து முடித்தேன். அதற்கு மேல்படிப்பை எட்டிப்பார்க்க வசதியில்லை.

'பிள்ளை ஊர் சுற்றுகிறானே, உருப்படாமல் போய்விடுவானே'என்று பெற்றோர் கவலைப்பட்டார்கள். என் தந்தை, ஏ.எம்.எம். கடையில் பர்மாவில் தலைமை நிர்வாகியாக இருந்தார். அதனால் என்னைச் சென்னைக்கு அழைத்து வந்து அவர்களுக்குரிய திருவொற்றியூர்'அஜாக்ஸ்'

கடிதங்களைப் பதிவு செய்யும் ரிஜிஸ்தருக்குள்ளேயே ஒரு நாற்பது பக்க நோட்டை வைத்துத் தினமும் கவிதை எழுதிக்கொண்டிருந்தேன்.

அப்போது அங்கே அக்கௌண்டன்டாக இருந்த பத்மநாபன் என்பவர், 'கவிதை ஆத்மாவுக்குத்தான் திருப்தி; சோறு போடாது' என்பார்.

பிறகு கதை எழுதிப் பார்த்தேன்.

பிறகு அந்த வேலையைவிட்டு, அலைந்து திரிந்து ஒரு பத்திரிகையில் இடம் பிடித்துக்கொண்டே முன்னேறினேன்.

படிப்புக் குறைவாக உள்ள ஒருவன், ஏதாவது ஒரு வழியில் சுயமுயற்சியில் முன்னுக்கு வந்துவிட முடியும் என்றால் படித்தவர்களால் ஏன் முடியாது.?

தலையில் இருக்கும் கையை எடுங்கள்.

உங்கள் அறிவு ஆராய்ச்சியில் இறங்கட்டும்.

ஏதோ ஒரு தொழில் உங்கள்

அனைத்தும் இருக்கும். அவை கடையில் வாங்கியவையல்ல: அவரும் அவர் மனைவியும் மக்களும் தயார் செய்தவை. எந்தப் புகழ் பெற்ற கம்பெனியில் வாங்கினாலும் அவ்வளவு சுவையாக இராது. ஸ்டுடியோவில் இசைக் குழுவினர், டைரக்டர்கள் ஆகியோரோடு, நானும் அதைத்தான் வாங்குவேன். எப்படியும் அறுபதில் இருந்து எழுவது ரூபாய்க்கு விற்று விடுவார். குறைந்தது இருபது ரூபாய் இலாபம் கிடைக்கும்.

இவர் குடியிருக்கும் பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள், தங்கள் தேவைக்கெல்லாம் அவரிடம்தான் வாங்குவார்கள்.

மாதம் குறைந்தது எழுநூற்றைம்பது ரூபாய் கிடைக்கும்.

மனைவி, மக்களோடு வீட்டிலேயே உட்கார்ந்து அப்பளம் போடுவது, ஊறுகாய் போடுவது: காலையில் குழந்தைகள் பள்ளிக்குப் போகும்; மனைவி சமையல் செய்யத் தொடங்குவாள்; அவர் விற்பனைக்குப் புறப்படுவார்.

கைகட்டி நிற்காத அற்புதமான வாழ்க்கை.

இப்போது மிகப் புகழ் பெற்றிருக்கும்777-ஆம் நம்பர் திடீர்ச் சாம்பார், திடீர்த் தக்காளி சூப் உங்கள் நினைவுக்கு வரும்.

முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஸ்ரீராமபவன், தம்பு செட்டித் தெருவில் ஒரு சிறு கட்டடத்தில் இருந்தது. குறிப்பிட்ட சிலரே உட்கார்ந்து சாப்பிடக்கூடிய அந்த இடத்தில், வெறும் இட்லி சட்னியில் தொடங்கிய அந்த வியாபாரம், இப்போது ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடிவிட்டது.

தொழிலில் எந்தத் தொழில் கேவலம்?

'உட்லாண்ட்ஸ் ஹோட்டல்' கிருஷ்ணா ராவ் அவர்கள் தன்னுடைய வரலாற்றை என்னிடம் சொன்னார்கள்.

முதலில் வீட்டில் பலகாரம் செய்து, அதைத் தட்டிலே தூக்கி விற்பனை செய்தாராம்.

அதிலே சிறுகச் சிறுக மிச்சமான பணத்தைச் சேர்த்துப் பழைய உட்லாண்டஸைக் குத்தகைக்கு எடுத்தாராம். அந்தக் குத்தகைக் காலத்தில் மிச்சமான பணத்தைக் கொண்டு புது உட்லாண்ட்ஸை விலைக்கு வாங்கினாராம்.

(எலியட்ஸ் ரோட்டில் அந்தப் புது உட்லாண்ட்ஸ் இருக்கும் கட்டம்தான் என்னை வேலைக்குச் சேர்த்துக்கொண்ட ஏ.எம்.எம்.முருகப்பச் செட்டியாரின் கட்டம்)

இப்படி ஹோட்டல் தொழிலில் முன்னேறியவர்கள் பலர்.

சமையல் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர்,ஒரு அசைவ ஹோட்டல் நடத்தத் தொடங்கி, ஐந்து டாக்ஸிகளும் ஒரு பங்களாவும் வாங்கியிருக்கிறார்.

சென்னை நகரில் சில கூர்க்காக்கள் உண்டு. இவர்களை யாரும் வேலைக்கு நியமித்ததில்லை. தாங்களாகவே இரவில் சில குறிப்பிட்ட தெருக்களில் தரையைத் தட்டிக்கொண்டு 'ரோந்து' வருவார்கள். தெருவாசிகளுக்குத் தைரியம் கொடுப்பதுபோல் அடிக்கடி விசில் அடிப்பார்கள்: ஆபத்தில் ஓடி வருவார்கள். மாதம் பிறந்தால் ஒவ்வொரு வீட்டுக்காரரும் இரண்டு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை கொடுப்பார்கள். எப்படியும் ஒரு கூர்க்காவுக்கு முந்நூறு ரூபாய்க்கு மேல் சேர்ந்துவிடும்.

பதினைந்து வருஷங்களுக்கு முன், ஒரு கையிழந்த முடவர் ஒருவர் என்னிடம் வேலை கேட்டார்.

நான் அவருக்கு ஒரு டிரங்க் பெட்டி வாங்கிக் கொடுத்துச் சுமார் இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள குடும்ப வாழ்க்கை பற்றிய புத்தகங்களை ஒரு பதிப்பகத்திலிருந்து வாங்கிக் கொடுத்தேன். குழந்தை வளர்ப்பு, சமையல் கலை போன்ற புத்தகங்கள் அவை.

வீட்டுக்கு வீடு போய்,அந்தப் புத்தகங்களை விற்றார். முதல் நாளே நூறு ரூபாய்க்கு விற்பனை. அதற்குக் கமிஷன் இருபத்தைந்து ரூபாய், பிறகு அதையே அவர் தொடர்ந்தார்.

மாதம் அந்தத் தனிநபருக்கு ஐநூறு ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வந்தது.

பிறகு வசதியான சாப்பாடு, தங்குவதற்கு ஒரு அறை; ஓரளவுக்குப் பணம் சேர்ந்ததும் கிராமத்தைப் பார்க்கப் போய்விட்டார்.

பெரும் பணத்தைச் செலவழித்து, பி.ஏ,எம்.ஏ என்று பட்டம் வாங்கி, குமாஸ்தா வேலைக்குக் குட்டிக்கரணம் போடுகின்ற மடைத்தனத்தைவிட, இத்தகைய சுய தொழில்கள் எவ்வளவு கௌரவமானவை.


சாப்பாட்டுக்கு விடுதி வைப்பது கௌரவக் குறைவா?

புத்தகத்தைத் தூக்கி விற்பது மரியாதைக் குறைவா?

(தொடர்ந்துவரும்)

# இந்திய அணிக்குச் சவாலான சுற்றுப்பயணம்!

**2005ஆம்** ஆண்டு முதல் துவங்கிய கிரேக் சாப்பல் பயிற்சிக் காலம் தனக்கு மிகவும் கடினமான காலம் என்றும், 2005 பாகிஸ்தான் தொடருக்குப் பின் தன்னை அணியிலிருந்து நீக்கியதன் மர்மம் என்னவென்று புரியவில்லை என்றும் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர் கான் சாடியுள்ளார்.



இதற்கு முன்பு கங்குலி, சேவாக், ஹர்பஜன்சிங், யுவ்ராஜ் சிங் என்று பல வீரர்களும் சாப்பல் பயிற்சிக் கால குளறுபடிகளை விமர்சனம் செய்துள்ளனர். சச்சின் டெண்டுல்கர் கூடத் சூசகமாகத் தன் விமர்சனங்களை வைத்துள்ளார். இந்நிலையில் ''என்னை அணியிலிருந்து நீக்கியதற்கான காரணம் மர்மமாகவே இருந்தது, என்ன தவறு செய்தேன் என்று புரியவில்லை, எனினும், அக்காலப் பகுதியில் வொர்ஸ்டர்ஷயருக்கு ஆடுமாறு அழைப்பு வந்தது, கிரிக்கெட்தான் எனது விருப்பம் எனவே இங்கிலாந்து சென்று உள் நாட்டுக் கிரிக்கெட்டில் பங்கேற்றேன் என்று தனியார் தொலைக்காட்சி பேட்டியில் கூறிய சகீர்கான், மேலும் கூறும்போது, கங்குலி தான் இன்றைய வெற்றிகளைத் துவக்கி வைத்தவர், அவர் தலைமையின் கீழ்தான் நான் முதல் போட்டியை விளையாடினேன், அவர் வீரர்களைக் காப்பாற்றிப் பாதுகாத்தார். தோனி இப்போது என்ன செய்கிறாரோ அதை அப்போதே செய்தார் கங்குலி. அதையே இப்போது தோனி அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார். அப்போது கங்குலியும், ஜான் ரைட்டும், தற்போது தோனியும் கேரி கர்ஸ்டனும் அடுத்த கட்டத்திற்கு அணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு கூறிய ஜாகீர்கான் இளம் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மாவைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

அதேவேளை, நியூஸிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்திய அணியினர், நியூஸிலாந்தை அதன் சொந்த நாட்டில் வெல்வது சற்றுக் கடினம்தான் என்று சௌரவ் கங்குலி கருத்துத் தெரிவித்துள்ளார். எனினும் பேட்டிங்கைச் சிறப்பாக ஆடினால் வெற்றி வாய்ப்பு உள்ளது என்று கூறியுள்ளார். ''பயிற்சி ஆட்டம் இல்லாதது ஒரு பிரச்சினைதான், குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்தில் ஆடும்போது பயிற்சி ஆட்டம் இல்லாதது சற்றுக் கடினம்தான் என்று கூறியுள்ள கங்குலி மேலும் கூறும்போது, ''நியூஸிலாந்து அணி சொந்த நாட்டில் தோல்வியடைவது கடினம்தான் என்றாலும், மகேந்திர சிங் தோனி தலைமை அணி வெற்றி பெறுவதற்கான அனைத்துத் திறமைகளையும் கொண்டது என்றும் கூறியுள்ளார். இக்கருத்தினையே அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜோன் புக்னனும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹ்ரூபுக்கு உபாதை!



**பாகிஸ்தான்** சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை அணியின் இளம் சகலதுறை ஆட்டக்காரரான பர்வீஷ் மஹ்ரூப் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பியுள்ளார். கடந்த சனிக் கிழமை கராச்சியில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் தொடைப் பகுதியில் உபாதைக்குள்ளான மஹ்ரூபிற்கு ஓய்வு தேவையென வைத்தியர்கள் வழங்கிய ஆலோசனையையடுத்தே அவர் நாடு திரும்பியுள்ளார்.



2004 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அணியில் விளையாடிவரும் மஹ்ரூப், இதுவரையில் 20 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 24 விக்கெட்டுக்களையும், 91 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 116 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளதோடு, இக்கட்டான பல சந்தர்ப்பங்களில் திறமையான துடுப்பாட்டத்தையும் வெளிப்படுத்தி வருகின்றார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் டெல்லி ரெடெவில்ஸ் அணி சார்பாக விளையாட ஒப்பந்தமாகியிருக்கும் மஹரூப் கடந்த வருட ஐ.பி.எல். போட்டிகளின் போதும் இதே அணிக்காகச் சிறப்பாகச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெறுகிறார் பக்னர்

**பிரபல** கிரிக்கெட் நடுவர் ஸ்ரீவ் பக்னர் தான் கிரிக்கெட் நடுவர் பதவியிலிருந்து ஓய்வு பெறப்போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ஸ்ரீவ் பக்னர், 1989 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நடுவராகக் கடமையாற்றி வருகின்றார். இதுவரையில் 126 டெஸ்ட் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றியிருக்கும் இவரின் இறுதிப் போட்டியாக எதிர்வரும் மார்ச் மாதம் 19ஆம் திகதி செப்ரவுணில் ஆரம்பமாகவுள்ள தென் ஆபிரிக்க - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி அமையவுள்ளது. அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி பார்படோஸில் நடைபெறவுள்ள இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியே ஸ்ரீவ் பக்னர் கடமையாற்றும் இறுதிப் போட்டியாகவும் அமையவுள்ளது. 1992 ஆம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப்போட்டித் தொடக்கம் தொடர்ச்சியாக ஐந்து உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றி சாதனை படைத்திருக்கும் பக்னர் இதுவரை 179 ஒரு நாள் போட்டிகளில் கடமையாற்றி சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேலும் ஒருசில வருடங்களுக்கு நடுவராகக் கடமையாற்றக்கூடிய வகையில் உடல் நிலை காணப்படுகின்ற போதிலும், தற்போது ஓய்வு பெறுவது சிறந்தது எனத் தான் கருதுவதால் இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறுகின்ற பக்னர் மேலும் கூறுகையில், தொடர்ந்து இறுதிவரையில் பங்களிப்பை வழங்க விரும்புவதால் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த இளம் மத்தியஸ்தர்களின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான முயற்சிகளில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# மூன்றாவது

**கண்டியில்** கடந்த எட்டு, ஒன்பது, பத்தாம் திகதிகளில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்டி, கெட்டம்பேயில் நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கண்டியில் ஜனாதிபதி உரையாற்றவிருந்த ஐந்தாவதும், இறுதியுமான பிரசாரக் கூட்டம் அது. வன்னியின் யுத்தச் சூழல், ஜனாதிபதியின் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான கட்டாயத்தை ஏற்படுத்தியிருந்தது. அதில் எவ்வித தவறும் இல்லை. இரகசியப் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். சோதனைச் சாவடிகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. எவ்வித திடீர் நடவடிக்கைகளையும் கையாளக்கூடியதாகப் படையினரும், பொலிஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். சோதனைச் சாவடிகளில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி அனைவரினதும் அடையாளங்களும் பாகுபாடின்றிப் பரிசோதிக்கப்பட்டன. தமிழர்கள் அதுவும் வடக்கு, கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம்

# 8 வயதுச் சிறுவனும் - 70 வயது மூதாட்டியும் பயங்கரவாதிகளா?

கூடுதல் கவனத்தோடு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவின் வாசஸ்தலம் அமைந்திருந்த இடம் கண்டி, பிலிமத்தலாவ அந்தச் சோதனைச் சாவடியில் லிந்துல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் விஷேட கடமையிலிருந்தனர். கூடவே இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். கொழும்பிலிருந்து பத்துப் பேருடன் நுவரெலியா நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த வெள்ளை வானொன்று சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டது. கையால் சமிக்ஞை செய்து வாகனத்தை நிறுத்துமாறு பணித்த பொலிஸ் கான்ஸ்டபிள், அனைவரையும் வாகனத்தை விட்டு இறங்குமாறு பணித்தார். இறங்கிய பத்துப் பேரில் ஓர் எட்டு வயதுச் சிறுவனையும், பதினாறு வயது யுவதியையும் தவிர ஏனைய அனைவருமே நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்.



கொழும்பில் கடந்த ஒன்பதாம் திகதி நடைபெற்ற திருமண வைபவமொன்றில் கலந்து கொள்வதற்காகக் கடந்த ஏழாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஆறு பேர் அந்த வாகனத்தில் பயணித்தனர். இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியையாகப் பணியாற்றும் 41 வயதுப் பெண்மணி. அவரும் யாழ்ப்பாணத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர். அடையாள அட்டைகளைப் பரிசோதித்து முடித்த கான்ஸ்டபிள், கொழும்பில் தங்கியிருப்பதற்கான பொலிஸ் பதிவு இருக்கிறதா? என்று கேட்டார்.

''நாங்கள் ஏழாம் திகதிதான் கொழும்பு வந்தோம். யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததற்கான விமானப் பயண டிக்கட்டுக்கள், பாதுகாப்புத் தரப்பினர் வழங்கிய அனுமதிப் பத்திரம் ஆகியவை உட்பட அனைத்துத் தஸ்தாவேஜுகளும் இருக்கின்றன. இவ்வளவு ஆவணங்களும் உள்ளபடியால், கொழும்பில் இரண்டு நாட்கள் தங்கியிருப்பதற்குப் பொலிஸ் பதிவு அவசியம் தேவையென நாம் நினைக்கவில்லை. நுவரெலியாவில் உறவினர் வீட்டுக்குச் செல்வதாலும், அங்கு சில நாட்கள் தங்க உத்தேசித்திருப்பதாலும் அங்கு பொலிஸில் பதிவு செய்ய உத்தேசித்துள்ளோம்'' என்றனர்.

சரளமாகச் சிங்களம் பேசக் கூடிய ஒருவர், ''ஹும், கிடையாது. பொலிஸ் பதிவு இல்லாமல் நீங்கள் கொழும்பில் தங்கியிருந்தது சட்டவிரோதம்'' என்று சாதித்தார் பொலிஸ்காரர்.

''பயணம் செய்த பத்துப் பேரில் ஒருவருக்கு அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரோடு அரசியல் ரீதியான நெருக்கமான தொடர்புகளும் உண்டு. அதனையும் அவர் அந்தப் பொலிஸ்காரருக்குக் கூறிப் பார்த்தார். ஒன்றுமே சரிவரவில்லை. எல்லோரையும் அங்கே நிற்குமாறு பணித்தார் சாட்சாத் பொலிஸ்காரர். இதற்கிடையில் அருகே நின்றிருந்த இராணுவ வீரரிடம் நிலைமைகளைச் சிங்களம் சரளமாகப் பேசக் கூடியவர் விளக்கினார். இராணுவ வீரரும் அவர்களை விட்டு விடுமாறு கான்ஸ்டபிளிடம் பரிந்துரை செய்தார். மசிந்து கொடுப்பதற்குக் கான்ஸ்டபிள் தயாராக இல்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் அதிகாரம் இராணுவ வீரருக்குக் கிடையாது. அது பொலிஸாரின் அதிகார வரம்புக்கு உட்பட்டது.

விஷேட பணிக்கென அனுப்பப்பட்ட லிந்துல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பத்துப் பேரும் மேலதிக விசாரணைகளுக்கென பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டனர். இதற்கிடையில் கொழும்பிலுள்ள பத்திரிகை நிறுவனமொன்றில் பணியாற்றும் ஓர் ஊடகவியலாளருக்குப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எஸ்.எம்.எஸ். செய்தி அனுப்பினர். அவரும் உடன் அவர்களை விடுவிப்பதற்குக் கொழும்பிலிருந்து முயற்சி செய்து பார்த்துக் களைத்துப் போய் மறுநாள் நேரடியாகவே பேராதனைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நிலைமைகளை விளக்கிச் சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்ததும் விடுவிப்பதாகக் கடமையிலிருந்த பொலிஸ்காரர் முன்னர் கூறியிருந்தார். மாலை ஐந்து மணியளவில் பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையத்துக்கு வருவாரென்றும் சொன்னார்கள். அன்று முழுவதுமே பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையத்துக்கு வரவேயில்லை. எட்டு வயதுச் சிறுவன், எழுபது வயது மூதாட்டி உட்படப் பத்துப் பேருமே அன்றிரவைப் பொலிஸ் நிலையத்தில் கழிக்க வேண்டியதாயிற்று.

''சந்தேகத்துக்கு இடமானவர்களை வேண்டுமானால் பொறுப்பதிகாரி வரும்வரை வைத்திருங்கள். வயதானவர்களும், நோயாளிகளும் இருப்பதால் ஏனையவரை விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சிக் கூத்தாடியும் பார்த்தார்கள். ஒன்றுமே சரிவரவில்லை. பத்துப் பேரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருப்பதாக லிந்துல பொலிஸ்காரர் பேராதனைப் பொலிஸில் கையளித்த எழுத்துமூல ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவர்கள் அனைவரையும் ஓ.ஐ.சி. வந்து அனுமதித்த பின்னர்தான் விடுவிக்க முடியுமென்று சொல்லிவிட்டார்கள்.

மறுநாள் காலை 9.30 மணியளவில்தான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்தார். ஜனாதிபதியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களிலும், அதனுடன் தொடர்பான வேறு பணிகளிலும் ஈடுபட வேண்டியிருந்ததால் முதல்நாள் நிலையத்துக்கு வரமுடியவில்லை என்று சமாதானம் சொன்னார் பொறுப்பதிகாரி.

தடுத்து வைக்கப்பட்டவர்களிடம் எதுவிதத் தவறும் இல்லையென்றும், லிந்துல பொலிஸ்காரர் கையளித்த எழுத்து மூல ஆவணத்திலேயே தவறு இருப்பதாகவும் சொன்னார் பேராதனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி. ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மன்னிப்புக் கேட்பதாகவும் கூறினார்.

ஏழாம் திகதி கொழும்பு வந்தவர்கள் இரண்டு நாட்களுக்குள் தம்மைப் பொலிஸில் பதிவு செய்ய வேண்டுமென்று இந்த நாட்டில் எந்தச் சட்டமும் கிடையாது. அதுவும் தமது வருகைக்கும், தங்கியிருப்பதற்கும் தேவையான சகல ஆவணங்களையும் காட்டிய பின்னரும் கறாராகத் தமது பணிகளைச் செய்வதாகக் காட்டிக்கொள்ளும் பொலிஸ்காரர்கள் ஒன்றில் குரோத மனோபாவத்தோடு தமிழர்களைப் பார்க்கிறார்கள், அல்லது 'சம்திங்' கை எதிர்பார்க்கிறார்கள். எட்டு வயதுச் சிறுவனையும், எழுபது வயது மூதாட்டியையுமா பயங்கரவாதிகளாகப் பார்க்கிறீர்கள்.

# மேய்ச்சல் வெளி

**சே குவேராவை** எல்லா இளைஞர்களுக்கும் பிடிக்கிறது. காரணம் அவரது தன்னலமற்ற வாழ்க்கையும், புரட்சியின் வெற்றியால் கிடைத்த அந்தஸ்தான வாழ்வை உதறிவிட்டு மீண்டும் உலகெங்குமுள்ள ஒடுக்கப்படும் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிக்கத் தயாராக இருந்த தியாகமும். வெவ்வேறு தேச மக்களுக்காக கொங்கோ காடுகளிலும் பொலிவியக் காடுகளிலும் அலைந்து, இளவயதில் அவர் தன்னை அழித்துக்கொண்ட தீரம் எவர் நெஞ்சையும் உருக்கும்.

அவர் வன்முறை வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்தான். ஆனால் அவரது கொங்கோ, பொலிவிய நாட்குறிப்புகளைப் படிக்கிற எவருக்கும், கெரில்லாப் போராளிகளின் நடவடிக்கைகளுக்குப் பிரதிவிளைவாக மக்கள் அழியநேரிடுவதைத் தவிர்ப்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களும், அழிவு நேரும் என்று தெரிந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் தன் நடவடிக்கைகளிலிருந்து அவர் பின்வாங்கியதையும் அறிந்துகொள்ள முடியும்.

மக்களைக் காப்பதற்காக என்று கூறி வன்முறை வழியைத் தேர்ந்துகொள்பவர்கள், மக்கள் பாதிப்புத் தொடர்பாக மற்ற எவரையும் விடக் கூடுதல் பொறுப்புணர்வைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆயுதவழியைத் தேர்ந்து வைத்துக்கொண்டு, மக்கள் அழிவுகளுக்கு மற்றைய தரப்புகளைக் குற்றம் சாட்டிவிட்டுத் தங்களை மறுபரிசீலனை செய்ய மறுக்கும் போக்கு, மிகவும் வஞ்சகத்தன்மையானது என்றே குறிப்பிட வேண்டும்.

பொதுமக்களின் பேரழிவையும் அவலங்களையும் தங்களுக்கான பிரசாரமாகப் பயன்படுத்திக்கொள்ளும் போக்கு மிகவும் குரூரம் நிரம்பியது. அழிவை நிறுத்துவதற்கு விட்டுக்கொடுக்காது, மக்கள் அழிவுக்குக் காரணம் நீயா நானா என்று போட்டியிடுவது கூட, மக்களை மேலும் மேலும் அழியச் செய்வதற்கான முகாந்திரமாகவே அமைந்துவிடுகிறது.

சிலி தேசத்தில் பிறந்து, உலகெங்குமுள்ள மக்களால் கொண்டாடப்படுகிற மாபெருங் கவிஞர் பப்லோ நெருடா. கவிஞராக மட்டுமில்லாமல், சிலி தேசத்துக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அந்த மக்களின் சுதந்திர வாழ்வுக்காகப் பாடுபட்டவர். அவர் தனது நண்பரொருவருக்கு எழுதிய கடிதமொன்றில், ''சே குவேராவின் மரணத்திற்காகக் கண்ணீர் வடிக்க வேண்டாம். மாறாக சே குவேராவின் வன்முறை வழிமுறைக்கு மாறாக, சமாதான வழிமுறையின் மூலம் சிலியில் சோஷலிஸப் புரட்சியை நடத்த விரும்பிய சிலி நாட்டுக் கம்யூனிஸ்ட் லூயி எமிலியே ரெகாப்பாரென் என்பவரின் மரணத்திற்குக் கண்ணீரஞ்சலி செலுத்துங்கள்'' என்று எழுதியிருந்தார்.

இன்று உலகெங்குமுள்ள தமிழ்மக்களை மிகவும் கவலைக்குள்ளாக்குவதாகவும் ஆவேசப்படுத்துவதாகவும் இருப்பது, மிகக்குறுகிய வன்னிப்பிரதேசத்தில் மாட்டிக்கொண்ட மக்கள் படுகின்ற அவலங்களே. அந்த மக்களுக்காக அனுதாபக் குரலெழுப்பும் உலகத் தமிழர்களில் பெரும்பாலோர், அந்த மக்களைப் போர் நெருக்கடிக்குள் மிரட்டி வைத்திருப்பவர்கள் யார் என்பதைத் தெரிந்துகொண்டும், அதுகுறித்து மூச்சுவிடாமல் வெறுமனே அனுதாபாவேசக் கண்ணீர் வடிப்பவர்களாயிருக்கிறார்கள்.

மக்களைக் காப்பாற்ற உலக நாடுகளுக்கெல்லாம் கோரிக்கை விடுக்கும் அவர்கள், புதுக்குடியிருப்பிலுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பும்படி புலிகளிடம் எந்தக் கோரிக்கையையும் எழுப்பாமல் கபட அழுகையே அழுகிறார்கள். உலகம் எப்படி இதைப் பொருட்படுத்தும்?

மறுவளத்தில், புலிகளை விட்டுப் பிரிய மறுத்தே அந்த மக்கள் அங்கே போர்க் குண்டுகளைத் தாங்குகிறார்கள் என்று வெளியே இருந்து ரோசத்தில் பொங்கும் தங்களது சுயநலக் குரூரம் நிரம்பிய வீரக்கதையளப்பும் அளந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் சொல்கிறபடி பார்த்தால், வீரவரலாற்றை எழுதிக் கொண்டிருப்பவர்களின் மரணத்தை, எப்படி அப்பாவி மக்களின் அழிவாகச் சொல்லி உலகத்தைத் தலையிட வைக்க முடியும்? தாங்களுடைய சுயதிருப்திக் கனவுக்காக அந்த மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை என்கிற குரூர ஆசையில்லல்லவா, போலி அனுதாபப் பொங்கலினால் அங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மக்களை அழியவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்?

உண்மையிலேயே அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அங்கு என்ன நடைபெறவேண்டுமென்று சர்வதேச சமூகம் சொல்கிறதோ... அதையல்லவா இவர்கள் புலிகளிடம் வற்புறுத்த வேண்டும்.

இந்தியாவும் சர்வதேச சமூகமும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அளிக்கும் பதில், ''அந்த மக்களுக்காகப் போராடுவதாகச் சொல்லும்



புலிகள், உண்மையில் அவர்களது அழிவை நிறுத்த விரும்பினால் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுப் பேசுவதற்கு முன்வரவேண்டும்'' என்பதுதானே? புலிகளை விடுவோம், கண்ணீரோடு கொந்தளிக்கும் உலகத்தமிழர்களுக்குமா, அந்த மக்களின் உயிர்களை விட ரோசத்தையும் ஆயுதங்களையும் பெரிதாய் நினைக்கும் குரூரம்?

நேபாளத்தில் மாவோ போராளிகள் ஆயுதங்களை ஐ.நா.விடம் ஒப்படைத்துவிட்டுத்தானே பேசினார்கள்? அதுபோல அவலமுறும் தமிழ்மக்களில் அக்கறையிருந்தால் இப்போதாவது புலிகள் ஆயுதங்களைக் கைவிட முன்வர வேண்டுமல்லவா? ஆயுதங்களைக் கைவிட்டால் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்ற வாதத்தை வைத்திருப்பவர்கள் பிறகு யாரிடம் கண்ணீர் விட்டு அந்த மக்களைக் காப்பாற்ற முடியும்?

ஆயுதங்கள் தமிழ்மக்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுக்குமா அழிவுகளைப் பெற்றுக் கொடுக்குமா என்பதை இன்றைய நிலையில் நிதானமாகக் கணக்கிடாமல், வெற்றாவேசப் பிரலாபங்களால் மக்கள் மேலும் மேலும் அழிவதைத்தானே வரவேற்றுப் பொங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

புத்திசாலிகள் என்று சமூகத்தால் நம்பப்படும் அறிஞர்கள் கலைஞர்களும் கூட மௌனமாயிருக்கிறார்கள் அல்லது மக்கள் அழிவைப் பற்றி ஒரு சொட்டுக் கண்ணீரை விடுகிறார்களே தவிர, உண்மையில் அழிவை நிறுத்தும் வழி புரியாமல்தான் உள்ளார்களா?

**— சுல்தான் —**

''மனிதர்கள் சரியானதைத் தேர்வு செய்வதில்லை, விருப்பப்படுவதைத்தான் தேர்வு செய்வார்கள்'' என்றார் எழுத்தாளர் டொஸ்ரோயெவ்ஸ்கி. தமிழீழம் என்ற விருப்பத்தைத் தேர்வு செய்து வைத்துக்கொண்டு சரியானது பற்றிய எந்தக் கருத்தாடலுமின்றி, எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாத வெற்று அனுதாபங்களையே வாரியிறைத்துக் கொண்டிருக்கிறார்கள் உலகத்தமிழர்கள்.

புலிகளின் தவறுகள் பற்றிப் பேசப் பயப்பட்டுக்கொண்டோ அல்லது அனுதாப நீரோட்டத்திற்கு எதிராகச் சரியானதைப் பேசினால் வரும் வம்பை எண்ணித் தயங்கியோ மக்களை அழிவுக்கும் அவலங்களுக்கும் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள் 'படித்த' உலகத் தமிழர்கள்!

இப்போது புலிகள் தப்பிவிட்டால் மீண்டும் மீண்டும் தமிழ்மக்கள் அழிவைச் சொல்லிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கலாம்; சாவுகளை நிறுத்தச் சொல்லிக் கூக்குரலிடும் அனுதாப வீராவேச முற்போக்குத் திளைப்புகளில் குளிர்காயலாம் என்பதைத் தவிர இவர்கள் வேறென்ன நினைக்கிறார்கள்?

மனதுக்கு நிம்மதி

# “முடிச்சுப் போட்ட கயிறு”

உங்களுடைய சுலோக ஜெபத்தை உள் மனத்தில் அழுத்தமாகப் பதிவு செய்யும் பொருட்டு நீங்கள் உபயோகிக்க வேண்டிய மனோதத்துவ உத்தி இடைவிடாத மனம் குவிந்த கவனமாகும்.

தீவிரமாக இடைவிடாமல் மனம் குவிந்து ஜெபிக்க வேண்டும்.

சுலோகத்தின் சொற்களில் இடைவிடாமல் மனத்தைச் செலுத்துவதானால் ஒரு தடவைக்குக் குறைந்த பட்சம் ஐந்து நிமிட நேரத்துக்குச் சுலோகத்தை ஜெபிப்பது நல்லது.

முதலில் இது உங்களுக்குக் கடினமாகத் தெரியலாம்.

உங்கள் சுலோகம் உள்மனத்தில் ஆழமாகப் பதிவதுடன், உங்கள் உள்ளத்தின் எண்ண ஓட்டத்தையும் தூண்டிவிட்டு, சுலோகத்தின் பொருள் சம்பந்தப்பட்ட வேறு கருத்துக்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்யும்.

மற்ற நேரங்களில் இது விரும்பத்தக்கதானாலும், சுலோக ஜெபத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தும்போது இத்தகைய எண்ண ஓட்டம் விரும்பத்தக்கது அல்ல.

அந்த ஐந்து நிமிட நேரத்தில் சுலோக ஜெபத்திலுள்ள சொற்களைத் தவிர வேறு எதைப் பற்றியுமே நினைக்கக்கூடாது.

கவனத்தைத் திசை திருப்பக்கூடிய எந்த ஓர் எண்ணத்தையும் எண்ணாமல் சுலோகத்தைத் திரும்பத் திரும்ப ஜெபிக்க வேண்டும்.

உங்களுடைய சுலோக ஜெபத்தில் நீங்கள் முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் கவனம் செலுத்துவதற்கு உதவியாகப் பல வகையான உத்திகளை இந்தக் கட்டுரையாசிரியர் கற்றுத் தருகிறார்.

இந்த அத்தியாயத்தில் ‘முடிச்சுக் கயிறு’ பற்றி விளக்கப்படும்.

(01) நாலடி நீளமுள்ள லேசான கயிறு ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

உதாரணமாக : துணி உலர்த்தும் கொடி அல்லது ஜன்னல் திரையைக் கட்டி வைக்கும் கயிறு.

(02) இரண்டு அங்குல இடைவெளி விட்டுக் கயிற்றில் முடிச்சுக்கள் போடுங்கள்.

(03) கயிற்றின் நுனியை வலது கையில் பிடித்துக் கொள்ளுங்கள்.


(04) வலது கைக்கு அடுத்தாற் போலுள்ள முதல் முடிச்சை இடது கைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் பற்றிக் கொள்ளுங்கள்.

(05) முதல் முடிச்சைப் பற்றிக் கொண்டிருக்கும் போது உங்களுடைய சுலோகத்தை மனத்துக்குள் தீவிரமாக நான்கு முறை திரும்பத் திரும்பச் சொல்லுங்கள்.

ஒவ்வொரு சொல்லும் உங்கள் உள்மனத்தில் பதியும் வண்ணம் மனம் குவித்துச் சொல்லுங்கள்.

(06) வலது கைக்கு அடுத்தாற் போலுள்ள முதல் முடிச்சை இடது கைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் பற்றியபடி சுலோகத்தை மௌனமாய் நான்கு முறை ஜெபியுங்கள்.

பிறகு பிடியைச் சற்றே தளர்த்திக் கயிற்றை வலது கையால் இழுத்தபடி இடது பெருவிரலும், ஆள்காட்டி விரலும் இரண்டாவது முடிச்சைப் பற்றும் வரை கயிற்றை இழுங்கள்.



(07) இடது கைப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் இரண்டாவது முடிச்சைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு சொல்லிலும் கவனம் செலுத்தியபடி உங்கள் உள்மனத்தில் ஆழமாகப் பதியும் வண்ணம் சுலோகத்தை நான்கு முறை ஜெபியுங்கள்.

முடிச்சுப் போட்ட கயிற்றை வலது கையால் இழுத்து இடது கையின் பிடிக்குள் ஒவ்வொரு முடிச்சும் வரவரப் பெருவிரலாலும், ஆள்காட்டி விரலாலும் நன்றாகப் பற்றி, சுலோக ஜெபத்தை நான்கு முறை அழுத்தம் திருத்தமாக உச்சரியுங்கள்.

இடது கை வழியாகக் கயிற்றை உருவுகையில் ஒவ்வொரு முடிச்சுவரும் போதும் சுலோக ஜெபத்தை ஆழ்ந்த மனத்துடன் நான்கு முறை ஜெபித்த பிறகு கயிற்றின் முடிச்சுப் போடாத நுனியை இடது கையால் பிடித்தபடி கடைசி முடிச்சை வலது கையால் பற்றுங்கள்.

இம்முறை இடது கையைப் பயன்படுத்தி வலது கையால் கயிற்றை இழுத்துக் கொண்டு ஒவ்வொரு முடிச்சு வந்ததும் வலது கைப் பெருவிரல், ஆள்காட்டி விரல் இவற்றைக் கொண்டு அதைப் பற்றியபடி நான்கு முறை ஜெபியுங்கள்.

இவ்வாறாக, முடிச்சுக்கள் உள்ள கயிற்றைத் தொடர்ந்து மாற்றி மாற்றி இழுங்கள். ஒவ்வொரு முடிச்சைப் பற்றும் போதும் மனத்துக்குள் தீவிரமாக நான்கு முறை ஜெபியுங்கள். ஒரு தடவைக்கு ஐந்து நிமிடத்துக்குக் குறையாமல் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இப்போது விளக்கப்பட்ட இந்தக் கயிறு முடிச்சு முறை மனம் குவிந்து சிந்திப்பதைத் தீவிரப்படுத்தக்கூடிய மனோதத்துவ உத்தியாகும். இது இந்தக் கட்டுரையாசிரியரால் உருவாக்கப்பட்டது. நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ அதைப் பெறும் நோக்கத்துடன் நீங்கள் தேர்ந்தெடுத்த சுலோகத்தை உங்கள் உள்மனத்தில் ஆழமாகப் பதிவு செய்வதற்கு உங்கள் முழுக் கவனத்தையும் அதில் செலுத்த இந்தமுறை துணை செய்யும்.

இது முக்கியம் : காலையில் எழுந்ததும் குறைந்தது ஐந்து நிமிட நேரத்துக்கு மனத்தைத் தீவிரமாக ஒருமைப்படுத்தி உங்கள் சுலோகத்தை ஜெபிக்க வேண்டும்... பின்னர் எப்பொழுதெல்லாம் அவகாசம் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் அடிக்கடி ஜெபியுங்கள்... இரவு தூங்கச் செல்லுமுன் குறைந்தது ஐந்து நிமிட நேரத்துக்கு ஜெபிக்க வேண்டும்.

நீங்கள் விரும்பியது கிடைக்கும் வரை இதைத் தொடர்ந்து செய்து கொண்டிருங்கள்.

நாள் முழுக்க முடிச்சுக் கயிறும் கையுமாக இருப்பது உங்களுக்கு வசதிப்படாமல் இருக்கலாம்.

ஆயினும் பல வெற்றிடங்கள் - உபயோகப்படுத்தப்படாத நிமிடங்கள் - ஒவ்வொரு நாளும் பல இருக்கக்கூடும்.

உங்கள் உள் மனத்தில் உங்கள் சுலோகத்தை ஆழமாகப் பதிவு செய்து கொள்ள அற்றைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்.

முடிச்சுக் கயிற்றுக்குப் பதிலாக இரண்டடி நீளமுள்ள ஒரு ட்வைன் நூலை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஓரங்குல இடைவெளி விட்டு முடிச்சுக்கள் போடுங்கள். பையிலோ பர்ஸிலோ வைத்துக் கொள்ளுங்கள்.

இரவிலும் பகலிலும் மற்றபடி வீணாகக்கூடிய நிமிடங்களைப் பயன்படுத்துவதற்கு, உங்கள் உள்மனத்தில் மௌன சுலோகத்தை அழுத்தமாகப் பதிவு செய்வதைக் காட்டிலும் சிறந்த வழி இருக்க முடியாது.

முடிச்சுக் கயிறு அல்லது ட்வைன் நூலுக்குப் பதிலாகப் பர்ஸிலுள்ள சில்லரைக் காசுகளை உபயோகப்படுத்தலாம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 310

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | |
| | 20 | | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 03.01.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-310
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.308 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி V.தனுசியா, 8/3 2/1 A, ராமநாதன் அவெனியு, தெகிவளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பரிமளகாந்தன், இல.442, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
02. சு.கருணாநிதி, இல.73, இரட்ணகார வீதி, தெகிவளை.
03. திரு.ஜே.அருளப்பு, “இனிக்கோ” புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
04. த.நாகையா, 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு -01, கல்முனை.
05. ர.உதயணன், 117, பிரதான வீதி, திருகோணமலை.
06. A.விஜிதா, இல.28, 42 ஆவது லேன், கொழும்பு -06.
07. நீலமேகம் ஸ்ரீதேவி, 103, அம்மன் கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.
08. சி.புஸ்பராணி, இல.43/5, பிள்ளையார் கோவில் வீதி -02, வேலூர், மட்டக்களப்பு.
09. ஏ.ஏ.சலாம், 10 ஆம் கட்டை, மெதகம-91550.
10. கே.எம்.மர்ழியா, கிறவுண் ஹவுஸ், பரீனாஸ் வீதி, காத்தான்குடி -06.

**இடமிருந்து வலம்**

01. ஊடகங்களில் முக்கிய அங்கமொன்று. (குழம்பியுள்ளது)
07. தலை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
11. லோரன்ஸ் நடித்த திரைப்படம். பேய் என்றும் பொருள்படும்.
15. காளை மாட்டைக் குறிக்கும். (குழம்பியுள்ளது)
25. ஆபத்து விளைவிக்கக்கூடிய மீனினம்.
28. எமது நாட்டின் பிரதான உணவுப் பொருள். (குழம்பியுள்ளது)
31. ஒருமை என்பதன் எதிர்ப்பதம். (குழம்பியுள்ளது)
35. பக்கபலம் என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி 308- விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தே 1 | தி 2 | ய 3 | க் 4 | தொ 5 | டி 6 |
| க் 7 | மா 8 | இ 9 | | | ரொ 12 |
| கு 13 | | வ 15 | ஞ் 16 | சி 17 | |
| | மா 20 | ன் 21 | | த 23 | ணீ 24 |
| ஆ 25 | தி 26 | | கா 28 | வ 29 | டி 30 |
| ணை 31 | | சு 33 | லி 34 | | ரொ 36 |

**மேலிருந்து கீழ்**

01. நட்சத்திரங்களில் ஒன்று.
02. கூந்தல் என்றும் பொருள்படும். (தலைகீழ்)
03. சங்கீதத்திற்கு இது தாய் போன்றது என்பர். (குழம்பியுள்ளது)
05. நவமணிகளுள் ஒன்று. (குழம்பியுள்ளது)
16. பகைவன் என்றும் கூறலாம்.
20. தீய குணங்களில் ஒன்று.
24. மருத்துவ குணமுள்ள செடியொன்று. (குழம்பியுள்ளது)
25. மனிதனுக்கு நன்மையளிக்கும் விலங்கொன்று. (தலைகீழ்)
29. தடுப்புச் சுவர் என்றும் கூறலாம்.

# நுரையீரல் நோயால் மனக்கவலை அதிகரிக்கும்



நுரையீரல் பாதிப்புடைய நோயாளிகளுக்கு மனக்கவலை ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரிய வந்துள்ளது. Chronic obstructive pulmonary disease (COPD) எனப்படும் நுரையீரல் தொடர்பான நோய் உடையவர்களுக்கு ஆரோக்கியமான உடல் நலம் அல்லது சர்க்கரை நோய் உள்ளவர்களைக் காட்டிலும் மனக்கவலை - மனச்சோர்வு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரையீரல் தொடர்பான நோய் ஏற்படுபவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படக்கூடும். அதிக சளியுடன் கூடிய இருமல், தும்மல், மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சுப் பகுதியில் இறுக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படலாம். நுரையீரல் நோய்களுக்கு முக்கிய காரணமாக அமைவது புகைபிடித்தல் ஆகும். நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நுரையீரல் நோய் உடைய 999 பேரிடமும், சர்க்கரை நோயுடன் வாழும் 978 பேரிடமும், ஆரோக்கியமான உடல்நிலை கொண்ட 2,494 பேரிடமும் நடத்திய ஆய்வில் நுரையீரல் பாதிப்புடையவர்களுக்கே மனச்சோர்வு வாய்ப்புகள் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது.

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும், ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கும் மனச்சோர்வு ஏற்படுவதற்கான அறிகுறிகள் குறைவாகவே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டவர்களின் வயது, சமூகப் பொருளாதார நிலை, அவருக்கு உள்ள இதர நோய், ஆணா அல்லது பெண்ணா? என்பன போன்றவை குறித்தும் ஆய்வு நடத்தப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டது.


# மரங்கள் வளர்ச்சியைப் பாதிக்கும் ஓசோன்

ஓசோன் படலம் வாயு மண்டலத்தின் உயரமான அடுக்குகளில் காணப்படுகிறது. இது சூரியனின் கதிர் வீச்சிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. அதேபோல தரைப்பகுதியிலும் ஓசோன் உள்ளது. இது தாவரங்கள், விலங்குகளைப் பாதிக்கிறது. இதுபற்றி விக்டோரியா விட்டிக் என்ற விஞ்ஞானி ஆராய்ச்சி செய்தார். அவர் கூறியதாவது:-



பெட்ரோலியம் மற்றும் நிலக்கரி, எரிபொருட்களைப் பயன்படுத்துவதனால் ஓசோனின் அளவு அதிகரிக்கிறது. வாயு மண்டலத்தில் ஒக்சிசன் உள்ளதைப் போல ஓசோன் வாயுவும் உண்டு. தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்த அளவைவிடத் தற்பொழுது ஓசோன் 4-மடங்கு அதிகரித்துவிட்டது.

அதனால் மரங்களின் வளர்ச்சி கி.பி.1800களில் இருந்ததைவிடத் தற்போது 7-சதவீதம் குறைந்துள்ளது. இது 2100-வாக்கில் இன்னும் 10-சதவீதம் அதிகரித்து 17-சதவீதம் ஆகிவிடும். இது மரங்களில் கார்பன் தன்மயமாவதைத் தடுத்து மரங்களின் வளர்ச்சி மற்றும் அதன் பொருண்மையைக் குறைக்கும். இது ஊசி இலை மரங்களைவிடப் படர்ந்த இலையுடைய மரங்களை எளிதில் தாக்குகிறது. மரங்களின் வேர்ப் பகுதியைப் பாதிப்பதன் மூலம் புயலால் எளிதில் சேதப்படுத்தப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.




**மறுபடியும்** சமிதுகள் எனப்படும் சின்னஞ்சிறு விறகுத் துண்டுகள் ஹோம குண்டத்தில் விழத் தொடங்கின.

ஹோம குண்டம் கொழுந்துவிட்டு எரிந்தது.

அந்த அக்னி ஜுவாலைகளுக்குள் முகம் ஒன்று வெளிப்பட்டது. அது -

சாட்சாத் இரத்த சாமுண்டீஸ்வரியின் முகம்.

அந்த அக்னி ஜுவாலைகள் அந்த முகத்தின் மீது சிவப்பு நிற ஒளியைச் சொரிந்தன. மட்டுமன்றி, அதன் முகத்தில் நெருப்பு ஜுவாலைகள் ஊர்ந்து அசைந்தன. அதே சமயம் அதன் உதடுகள் அசையத் தொடங்கின. ஆனால் வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை.

"என்ன வேண்டும்? சொல்!" மானவிக்கிரமன் மிடுக்குடன் கேட்டார்.

"என்னுடைய தேவை இரத்தம் குளிர்ச்சியடையாத இளஞ்சூடான இரத்தம்!" நெருப்பில் தென்பட்ட உதடுகள் பேசின.

"என் இரத்தம்தானே... இதோ வாங்கிக் கொள்.!" என்ற மானவிக்கிரமன், இரு புறமும் கூர்மையான வாளையெடுத்து, தன் இடக்கையை வெட்டி முறிக்க முற்பட்டார்.

"எனக்குத் தேவை உன் இரத்தமல்ல!"

ஹோம குண்டத்திலிருந்து குரல் உயர்ந்தது.

"அப்படியானால் கட்டளையிடு!" மானவிக்கிரமன் கேட்டுக்கொண்டார்.

"எனக்குத் தேவை, ஒரு தேவமோகினியின் இரத்தம். அதை மட்டும் வழங்கிவிட்டால், நீ கூடு விட்டுக் கூடு பாய்வதற்குரிய மந்திரங்களைச் செப்புத் தகடுகளில் பத்திரமாகத் தருவேன்.

"என்னது! தேவமோகினியின் இரத்தமா? நான் எங்கே போய் தேவமோகினியைத் தேட முடியும்?"

"இந்த இல்லத்தின் கிழக்குத்

## தமிழில் சிவன்

திசையில் பூஜை முடங்கிக் கிடக்கும் துர்க்காதேவி கோயில் ஒன்று உள்ளது. அதன் கருவறை வாசலில் இரண்டு மோகினிச் சிலைகள் துவார பாலிகைகளாக நின்று கொண்டிருக்கின்றன. அவை சாதாரணமான மோகினிகள் அல்ல... தேவலோகத்தில் நடனமாடும் தேவமோகினிகள். அவற்றில் ஏதாவது ஒன்றின் இரத்தம் எனக்குத் தேவை!"

"அதை நான் எப்படி எடுத்து வருவது?"

"துர்க்காஷ்டமி நாளன்று, சரஸ்வதி யாமத்தில் அந்தச் சிலைகள் இரண்டும் அங்கு இருக்காது. அவர்கள் தேவிக்கு முன்பாக நடனம் ஆடுவார்கள். உன்னுடைய மாந்திரீக சக்தியைப் பயன்படுத்தி, அவர்களில் ஒருத்தியை இங்கு வரவழைக்க முடியும். முதலில் நான் சொல்கிறபடி செய். நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்!" இதைச் சொல்லிவிட்டு அந்த உருவம் மறையவும் செய்தது.

மானவிக்கிரமன், துர்க்காஷ்டமி நாளுக்காகக் காத்திருந்தார்.

அன்று தேவி நீராடி முடித்துக் கோயிலில் வந்து ஓய்வு எடுக்கும்போது, இரத்த சாமுண்டீஸ்வரி உருவம் குறிப்பிட்ட இரண்டு தேவமோகினிகள் அவருக்கு முன்பாக நடனமாடுவர்.

எல்லாம் சரிதான். ஆனால், இத்தகைய சந்தர்ப்பத்தில் தேவியின் முன்னாலுள்ள இருவரில் ஒருவரை எப்படிக் கடத்திக் கொண்டு வருவது?

அது ஒரு கேள்விக் குறியாக நின்றது.

கடைசியில் அவர் அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தார். அதுவும் பிரஸ்னம் என்ற ஜோதிடம் முலமாகத் தெரிந்தது.

தேவி, குளியலை முடித்துக் கொண்டு வந்த பிறகுதான் நடனம் ஆரம்பமாகும். சரியாக அந்தச் சந்தர்ப்பத்தில் தேவிக்கு ஒரு பலி கொடுக்க வேண்டும். தேவி அதில் திருப்தி அடைவார். அந்தச் சந்தர்ப்பத்தில், இருவரில் ஒருத்தியைக் கடத்திக்கொண்டு வந்துவிட வேண்டியதுதான்!

நல்ல ஓர் ஆட்டுக் கடாவை இதற்காக ஏற்பாடு செய்தால் போதும். மானவிக்கிரமன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

துர்க்காஷ்டமி நாளும் வந்தது.

அதுவரை சினைக்குப் போகாத ஓர் ஆட்டுக்கடாவை, ஆலமரத்தின் அடிப்பகுதியில் வளைந்து வளர்ந்திருந்த வேரில் கட்டி வைத்தார்.

நள்ளிரவு தாண்டியது.

துர்க்காதேவி கோயிலின் கருவறை வாசலில் வெளிச்சம் ஒன்று தட்டுப்பட்டது. ஆயிரம் சூரியன்கள் ஒன்றாக உதித்து எழுந்தது போன்ற ஒளி,தேவியின் உடலிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது.

மானவிக்கிரமன் தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டார்.



அந்த ஒளிப்பெருக்கு படித்துறையை நோக்கி நகர்ந்தது.

"ஆஹா..." அவர் தன்னையும் மீறிக் குரல் எழுப்பினார்.

சற்று நேரத்துக்குள் அந்த ஒளிப்பெருக்கு மறுபடி கோயில் கருவறைக்குத் திரும்பியது. தேவி இருக்கையில் அமரப்போகும் தருணத்தில், மானவிக்கிரமன் பலிக்கல்லில் கடாயின் கழுத்து இரத்தத்தைச் சொட்டச் செய்தார்.

பலியின் திருப்தியில் தேவி மெய்மறந்து நின்ற வேளையில், மானவிக்கிரமன் நாக மந்திரத்தால் மோகினி ஒருத்தியைப் பந்தனம் செய்து அங்கிருந்து கடத்திக்கொண்டு வந்தார்.

தேவியின் அதிகார எல்லை தாண்டிய பிறகுதான் அவரது மூச்சே சீரானது. நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

அந்தத் தேவ மோகினியைத் தனது இல்லத்துக்குக் கொண்டு வந்தார்.

பலிக்குத் தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்து வைக்கப்பட்டிருந்தன.

நாக மந்திரத்தால் பந்தனம் செய்யப்பட்ட மோகினி தப்பித்து விடாமலிருக்க ஸ்தம்பன மந்திரத்தை உருவிட்டார். பிறகு ஹோம குண்டத்திலிருந்து சாம்பலை எடுத்து அந்த மோகினிக்குச் சுற்றும் தூவினார்.

பின்பு மோகினியை மந்திரத் தளையிலிருந்து விடுவித்தார்.

அப்போதுதான், தான் ஒரு வஞ்சகச் சதியில் சிக்கியிருக்கிறோம் என்பது அந்தத் தேவமோகினிக்குத் தெரிந்தது.

பீதியுடன் அது ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தது.

சுற்றுமுற்றும் பார்த்த மோகினி,அந்த ஆபத்திலிருந்து தப்பிக்க வழியேதும் இல்லை என்பதை உணர்ந்து கதறிக் கண்ணீர் வடித்தது.

மானவிக்கிரமன் கோடரி போன்ற தனது பலி ஆயுதத்தைக் கையில் எடுத்தார்.

தனக்கு முன்பாகக் கூப்பிய கைகளுடன் நிற்கும் தேவ மோகினியைப் பார்த்தபடி வாளை எடுத்தார். அந்த வாளின் இரு பக்க விளிம்புகளிலும், இதற்கு முன்னர் நடத்திய பலிகளின் அடையாளமாக இரத்தம் பல்வேறு நிலைகளில் சிதறி உலர்ந்து படிந்திருந்தது. *(தொடர்ந்து மிரட்டுவாள்...)*

---

**இவ்வாரச் சிறுகதை**

# விடியும்வரை காத்திரு..!

**விடிந்தால்** கல்யாணம். செல்விக்கு அழுதழுது முகம் வீங்கியிருந்தது. அவளுக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டமில்லை. அவளின் அப்பா சந்திரசேகரின் பிடிவாதத்தினால் அவரின் அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இதற்குச் சம்மதித்தாள். அவளுக்கு மாலையிடப் போகிறவன் யாரென்று தெரியாது. அவன் முகத்தைக் கூட அவள் பார்த்ததில்லை. இதற்கெல்லாம் காரணமானவன் அந்தப் பசுத்தோல் போர்த்திய புலி பவித்திரன். கடந்த இரண்டு வருடங்களாகத் தானுண்டு தன் வேலையுண்டென்டிருந்தவளை மயக்கி ஏமாற்றிக் காதல் வலையில் விழச் செய்தவன் இன்றோ கைகழுவிவிட்டு நழுவப் பார்க்கிறான். கண்ணே மணியே முத்தே கொம்புத் தேனேயென இனிக்க இனிக்கப் பேசியவன் அவள் கண்கள் பனிக்கப் பறந்தே போய்விட்டான். காதலுக்குக் கண்ணில்லையென்பார்கள். ஆனால் காதலுக்கு காது, பேச்சு, மூச்சு எதுவுமே கிடையாது. கன்னியவள் உள்ளத்தில் காதல் பூ மலரும் போது அவள் வாய் உளறும். கால்கள் தடுமாறும். உடல் நடுங்கும். ஆனால்- காதலித்தவன் கைவிடும் போதோ உலகமே மாயமாகத் தோன்றுகின்றது.

செல்வி ஒரு தனியார் வங்கியில் வேலை செய்கின்றாள். அவள் தந்தை ஓய்வு பெற்ற ஒரு தோட்டத் தலைமை குமாஸ்தா. அம்மா ஏற்கனவே இறந்துவிட்டாள். அவர்களுக்குச் சொந்தமாக ஒரு வீடு இருந்தது. அவள் சந்திரசேகரின் ஒரே மகள். செல்வி அழகானவள். சுறுசுறுப்பானவள். கலகலப்பாகப் பழகக் கூடியவள். அதே வங்கியிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றலாகிச் சென்ற சுகுமாருக்குப் பதிலாக வந்து சேர்ந்தான் பவித்திரன். பவித்திரன் நகைச்சுவைப் பேர்வழி. அவன் அந்த இடத்திலிருந்தால் எல்லோரும் சிரித்துக் கொண்டேயிருப்பார்கள். வேலை களைப்பில்லாமல் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள்.

செல்வி அவனிடம் சாதாரணமாகத்தான் பழகினாள். அவனின் துருதுருப்பான நடவடிக்கை மற்றவர்களைச் சிரிக்க வைத்து அதில் சந்தோஷப்படும் குணம் யாவையும் அவளைக் கவர்ந்தன. ஆனால் அவள் ஒரு எல்லைக்குள்ளேயே இருந்தாள். பவித்திரன் மற்றவர்களுடன் சாதாரணமாகப் பழகினாலும் அவளுடன் சற்று உரிமையுடன் பழக முற்பட்டான். ஆரம்பத்தில் அவள் விலகிச் சென்றாலும் கூட அவளை அறியாமலேயே அவள் மனம் அவனை நாடிச் சென்றது. வெறுமையாக இருந்த அவள் மனதில் மிக அருமையாகக் காதல் புகுந்து கொண்டது.

பவித்திரன் அவளை மிகக் கவனமாகக் கையாண்டான். அவர்களின் காதல் இறுக்கமாகியது. உறவு உறுதியானது. காற்றும் புக முடியாதளவுக்கு அவர்களுக்குள் இடைவெளி சுருங்கியது.

பவித்திரனும் செல்வியும் ஒரே அறையில் ஒன்றாக இருக்குமளவுக்கு அவர்களின் உறவு இறுகியது. சுமார் ஒரு வருடமாக நீடித்த இவர்களின் உறவில் திடீர் விரிசல் ஏற்பட்டது. பவித்திரன் இவளைக் கண்டும் காணாமலும் இருந்ததுடன் ஒருநாள் திடீரென வேறொரு இடத்துக்கு மாற்றல் வாங்கி விட்டுச் சென்றான்.

செல்வி துடித்தாள், துவண்டாள், அவன் எங்கே போனான் என்று தெரியவில்லை. மற்றக் கிளைக் காரியாலங்களுக்கு முயற்சி செய்த போதும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேசமயம் செல்விக்கு அவள் தந்தை தீவிரமாக மாப்பிள்ளைப் பார்த்து இதோ விடிந்தால் கல்யாணம்.

செல்வி ஒரு முடிவுக்கு வந்தாள். மனதில் ஒருவனை நிலைநிறுத்திவிட்டு இன்னொருவனுடன் அவளால் வாழ முடியாது. அவள் அன்றில் பறவைச் சாதியைச் சேர்ந்தவள். ஒரே துணையுடன் வாழ நினைப்பவள்.

விடிந்தால் கல்யாணம்! செல்விக்குத் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள். திருமண வேலைகள் சுறு சுறுப்பாக நடந்துகொண்டிருந்தது. அவள் சட்டெனப் படுக்கையை விட்டு எழுந்தாள். நன்றாக அலங்கரித்துக் கொண்டான். அவளும் பவித்திரனும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்துக் கொண்ட



பாலா சங்குப்பிள்ளை,
ஹட்டன்.

புகைப்படத்தை ஒருமுறை நன்றாகப் பார்த்துக் கொண்டாள். பின்பு ஏற்கனவே தயாராக வாங்கி வைத்திருந்த அந்தத் தூக்க மாத்திரைகள் அனைத்தையும் ஒன்றாக வாயில் போட்டுக் கொண்டு மடமடவெனத் தண்ணீரைக் குடித்தாள்.

அப்போது யாரோ கதவைத் தட்டினார்கள். அவள் மெதுவாக நடந்து சென்று கதவைத் திறந்தாள். வெளியே ஒரு சிறுவன் நின்றிருந்தான்.

"அக்கா இந்த லெட்டரை யாரோ ஒரு மாமா யாருக்கும் தெரியாம உங்கக்கிட்ட குடுக்கச் சொன்னாரு...."

அவள் கவரில் இருந்த கடிதத்தை வாங்கிக்கொண்டு கதவை மூடினாள். இந்த நேரத்தில் அவளுக்குக் கடிதம் எழுதியனுப்பியது யார்? அவளுக்கு லேசாகத் தலை சுற்றத் தொடங்கியது. அவள் கடிதத்தைப் பிரித்தாள்.

அன்பான செல்வி, என்னை மன்னித்துவிடு. என் மாமா இரத்தினவேலுதான் என்னைப் படிக்கவைத்து இந்த வேலையையும் வாங்கித் தந்தார். பெரிய வியாபாரியான அவர் அரசியல் செல்வாக்குள்ளவர். அவரின் ஒரே மகள் உமாவை மணக்க வேண்டுமென்பதுதான் அவருடைய ஆசை. நான் உன்னை நேசிப்பது எப்படியோ அவருக்குத் தெரிந்துவிட்டது. என்னை இடமாற்றல் செய்து அவர் ஊருக்கே எடுத்துவிட்டதுமல்லாமல், என்னை எங்கேயும் போகவிடாமல் வீட்டுக்காவலில் வைத்துவிட்டார். விடிந்தால் எனக்கும் உமாவுக்கும் கல்யாணம். ஆனால் அது நடக்காது. உன்னை என்னால் மறக்க முடியாது. உன்னையே மணம் முடிப்பேன். எனக்காக விடியும் வரை காத்திரு. விடிந்தவுடன் ஓடி வந்து விடுகிறேன். எனக்குப் பணம் அந்தஸ்து எதுவும் தேவையில்லை. உன் அன்பு மட்டுமே தேவை... தயவு செய்து காத்திரு. காலையிலேயே கட்டாயம் வந்து..... அவளால் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை. அப்படியே மயங்கிக் கட்டிலில் சாய்ந்தாள். கண்கள் மெதுவாக மூடிக் கொண்டன. *(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

**பெண்ணைப்** பேதை, பீடை என்றெல்லாம் சொல்லிய காலத்தில்தான் பெண்ணின் பெருமைகளையும் சொல்லி வைத்தார்கள். ஆனால் இன்றுதான் ஏதோ பெரிய கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தது போலும் சிந்தனையாளர் போலும் மார்தட்டிக் கொள்பவர்களைப் பார்த்தால் சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை. குறிப்பாகத் தமிழினத்தின் வாழ்வியல்,கலை,கலாசாரம் என்பன உலகுக்கெல்லாம் இல்லற தர்மத்திற்கே வழிகாட்டியாக விளங்குவதும் அதற்கான வரையறையைக் கூறிவைத்தவர் வள்ளுவப் பெருந்தகை கூறவந்ததென்ன?

***"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்***
***திண்மை யுண்டாகப் பெறின்"***

***(54)***

பெண்ணிடம் கற்பு என்னும் உறுதி நெறி இருக்குமானால் பெண்ணைவிடப் பெருமை வாய்ந்தது உலகில் வேறு என்ன இருக்கிறது என்கிறார்.

**சிந்தியா, கருணா அம்மான் தேசியக் கட்சிகளுடன் இணைந்து கொள்வதன் மூலம் எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா?**

*-எஸ்.பாவலன்,*
*மட்டக்களப்பு.*

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் தலைவர் யார் என்ற இடைவெளியிலிருந்துதான் இம்மாதிரியான கேள்விகள் வருவதாக உணர்கிறேன். ஆகையால்தான் சம்பந்தமில்லாத சம்பவங்களையும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளோடு இணைத்துப் பார்க்கும் நிலை உருவாகி



ஏ.ஆர்.ரஹ்மான்

யுள்ளது. எனவே கருணாவின் அரசியல் முடிவுக்கும் தமிழரின் அரசியல் தீர்வுக்கும் தொடர்புபடுத்திப் பார்ப்பது சரியானது என்று நான் நம்பவில்லை.

**சிந்தியா, 13ஆவது திருத்தச் சட்டம் ஒழுங்காக அமுல்படுத்தப் பட்டிருந்தால் பிரச்சினை நீடித்திருக்காது என்று முன்னால் ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பது எதைக் காட்டுகின்றது?**

*-வி.சண்முகம்,*
*கொழும்பு.*

காலம் கடந்து ஞானம் பெற்றவர்களாகக் காட்டிக்கொண்டவர்களில் இவரும் ஒருவர். அவர் சொல்வது சரிதான். அதிகாரத்தில் இருக்கும்போது அம்மையாரும் கவனம் எடுக்கவில்லை. ஆனால் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்காகப் பாராட்டலாம்.

நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். இப்போது கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த இவர் நிறைய உதவலாம். அம்மையாரின் முன்னைய தவறைத் திருத்துவாரா....

**அரசியல் ரீதியாக மலையக மக்கள் மாறிவிட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறீரா?**

*-க.நாகரட்னம்,*
*மஸ்கெலியா.*

மாற்றம் ஒன்று வரவேண்டும். வரும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளை மட்டும் வைத்துக்கொண்டு இந்த முடிவுக்கு வரமுடியாது. பிரதான கட்சிகள் யானைச் சவாரி செய்திருந்தால் உங்களின் இந்தக் கேள்விக்கு அவசியம் இருந்திருக்காது.

**சிந்தியா, இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானுக்கு "ஒஸ்கார்" விருது கிடைக்குமா?**

*-என்.சிவானுஜா,*
*வவுனியா.*

கிடைத்துவிட்டது. ஒன்று அல்ல இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுச் சாதனை நிகழ்த்திவிட்டார். விருதுகளைப் பெற்றுக் கொண்ட பிறகு அவர் சொன்னது "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்றுதான். உலகமெல்லாம் பரந்து வாழும் எட்டுக் கோடி தமிழர்களின் கனவு நனவாகி இருக்கிறது. ஏ.ஆர்.ரஹ்மான் பெருமை சேர்த்திருக்கின்றார். அத்தோடு முழு இந்திய தேசத்துக்கும் பெருமை சேர்த்திருக்கிறார்.

மெஸ்ரோ ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களுக்கு முரசு வாசகர்களின் வாழ்த்துக்களும் சேரட்டும். விருது வாங்கிய மகிழ்ச்சியை ஏ.ஆர். ரஹ்மான் எப்படித் தம்மோடு பகிர்ந்துகொள்ளப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்திருக்கும்போது அவர்களை விடவும், தனது வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களை மனதிற் கொண்டு தமிழில் உரையாற்றிய அந்தப் பணிவும், பக்குவமும் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு மேலும் வெற்றிகளைக் கொடுக்கும்.

**வன்னியில் தமது வாழ்க்கையைத் தொலைத்த நமது மக்களுக்கு மீள் வாழ்வு கொடுக்க யாராவது முன்வருவார்களா?**

*-எம்.ரமேஸ்,*
*தாண்டிக்குளம்.*

ரமேஸ் உங்கள் கேள்வி எனக்கு ஏமாற்றமாக இருக்கிறது. நாம் நம்பிக்கை இழந்து விடக்கூடாது. நம்மால் முடியும். "அணு



ஒஸ்கார் விருது பெற்ற 'ஸ்லம்டோக் மில்லியனர்' -படக் குழுவினர்

குண்டைத் தாங்கிய ஜப்பான் நாடு இன்று முன்னணி நாடாக வளர்ந்திருப்பதுபோல் நாம் நம்பிக்கையோடு உழைத்தால் இரண்டே வருடங்களில் அழிந்த எமது தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்போதெல்லாம் அடிக்கடி கூறுகிறார்.

"பிரபாகரன் எனும் பயங்கரவாதியின் தவறான செயலால் தமிழ் இனம் இன்று பல்வேறுபட்ட வறுமைக்குள் விழுந்து விட்டது. கௌரவத்தை இழந்துவிட்டதாக எண்ணுகிறது. அதை நினைத்து நாம் அழுது கொண்டிருக்க முடியாது. எழுச்சிகொண்டு உழைக்க வேண்டும். அதற்கு இனியாவது சரியானவர்களை மக்கள் தெரிவு செய்து வாய்ப்பை வழங்க வேண்டும். அது நம்மால் முடியும்" என்றும் அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார். அவரின் வார்த்தைகளின் யதார்த்தத்தை உணர்ந்துகொண்டால் நம்மால் முடியும், நாமும் சாதிப்போம்...

**சிந்தியா, சிவாஜிலிங்கம் எம்.பி.யின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்று நினைக்கின்றீர்கள்?**

*-என்.உதயன்,*
*வெள்ளவத்தை.*

மாங்குளத்தில் தமிழீழப் பாராளுமன்றம் கட்டப்படுகிறது என்று பகல் கனவு கண்டு பின்னர் பதவியைப் பறிகொடுத்துவிட்டுத் திரியும் ஐயா ஈழவேந்தன் அவர்கள் அளவுக்கு மோசமாக இருக்காது. எம்.பி. பதவியைக் காட்டிப் பணம் பார்த்தவர்களில் சிவாஜியும் ஒருவர், அது அவருக்கு உதவும்.

## இலக்கிய நயம்

# வலையில் சிக்கிய மீன்!

**தென்னை** இளங்கீற்றினைத் தொட்டுத் தழுவும் தென்றலின் ஓசையில் மூங்கிலின் நாதமும் சேர்ந்து நலங்கு பாடிக்கொண்டிருந்த மாலை வேளைதான். ஆனாலும் கயற்கண்ணியின் மனதில் இலேசாகப் புயல் கிளம்ப ஆரம்பித்ததற்கு அறிகுறியாக அவள் மலர் முகத்தில் வாட்டம் தோன்றியது.

இளந்தென்னை தோப்பாகி இருந்தபோதிலும், அவள் மட்டும் தன்னந்தனியே, தோப்பின் மத்தியில் சிந்தனைச் சுழலில் சிக்குண்டு கிடந்தாள். அவள் தோழி வருவது நிழலாடுகிறது. ஆனாலும் அதுபற்றி அவள் அலட்டிக் கொள்ளவில்லை. எண்ணமெல்லாம் மாருதனுடன் தான் பழகித் திரிந்த நாட்களிலே நடந்தவைப் பற்றிய நினைப்பில் லயித்திருந்தது. "என்னடி தோப்புக்குள் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேள்வியோடு அவளருகில் அமர்ந்தாள் தோழி. அவள் பதிலேதும் பேசவில்லை. நீண்டதொரு பெருமூச்சு, அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து கிளம்பியது.

மாருதனின் மடியில் சுகங்கண்ட நாட்களிளெல்லாம் அவள் பெற்ற இன்பங்கள் எத்தனையோ. அவைகளெல்லாம் இப்போது எங்கோ தொலைவில் சென்று மறைந்திருந்தன. வாடியிருந்த முகத்தைப் பார்த்தாள் தோழி. வண்ண மலர்ச் சோலையாக இருந்த முகம் இப்படி வாடிக்கிடப்பதற்குக் காரணம் அவள் சொல்லத் தேவையிருக்கவில்லை. காதலனைப் பிரிந்தவள் மனம் எத்தகையது என்று அவள் காவியங்களில் படித்ததுண்டு. கயற்கண்ணியின் கவலை அவளுக்குப் புரிந்தது.

**தருவது**
**கற்பகன்**

"கடற்கரையில் கூட மாருதனின் நடமாட்டம் தென்பட்டதாக இல்லையே" என்று அவள் கூறியதைக் கேட்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தாள் கயற்கண்ணி. "ஏனப்படி பார்க்கிறாய்?" என்று கேட்டபோது, எதிர்ப்புறமாக நோக்கி ஏதோ கண்களால் சைகை செய்தாள் கயற்கண்ணி.

"ஓ! அவருக்காகத்தான் காத்திருக்கிறாயா?" என்றவள், சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் கண்களுக்கு யாரும் தென்படவில்லை. மேலும் அவள் ஏதும் சொல்ல விரும்பாதவளாக "ஏதோ உன்பாடு" என்றவள், மெல்ல எழுந்து அப்பாற் செல்ல முற்பட்ட போது அவளைத் தடுத்து நிறுத்தினாள் கயற்கண்ணி. காரணம் புரியாமல் "என்னடி ஏன் தடுக்கிறாய்?" "அன்றுகூட அவரை அறிமுகம் செய்து வைக்கிறேன் என்று கேட்டபோது வேண்டாமென்றாய். இன்று நீ அவரைப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. கொஞ்சம் பொறுத்திரேன்" என்றாள் கயற்கண்ணி. ஏன் இப்படிக் கூறுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவளாய் அவள் தோழி அவள் முகத்தைப் பார்க்கச் செடி மறைவிலிருந்து தன் புரவியின் லகானைக் கையில் பிடித்த வண்ணம் அவர்கள் பக்கம் வந்தடைந்தான் மாருதன்.



சற்றும் எதிர்பாராத நிகழ்வுதான். என்றாலும் சமாளித்துக்கொண்டு அவன் வரவை எதிர்பார்த்தவள்போல் ஒரு செயற்கையான சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவனை நோக்கினாள் தோழி.

அவர்களை நெருங்கும்போதே மாருதனின் கண்கள் கயற்கண்ணியை உற்று நோக்கிய அவன் பார்வையில் யாரிந்தப் பெண்? என்ற கேள்வியும் எழுவதை உணர்ந்துகொண்ட கயற்கண்ணி, "இவள் என் தோழி" என்று கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தாள். ஓ! உனக்குத் தோழியும் ஒருத்தி இருக்கிறாளா, இதுவரை அதுபற்றி எனக்குச் சொல்லவே இல்லையே!" என்றவனின் முகத்தில் திடீரென்று ஒரு சிறிய பய உணர்வு பளிச்சிட்டு மறைத்தபோதிலும், அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆயினும், இதுவரை கயற்கண்ணிக்கும் தனக்குமிடையிலிருந்த இரகசியக் காதலுக்குச் சாட்சியாக இவள் ஒருத்தி இருக்கிறாளே. இவளால் இது அம்பலமாகிவிடுமோ என்று அஞ்சினான். மலருக்கு மலர்தாவும் வண்டாக வலம் வந்தவனுக்கு இதுவரை திருமணம் பற்றிய எண்ணம் தோன்றியதில்லை. அந்த அளவுக்கு அவன் யாரிடமும் மனதைப் பறிகொடுத்ததில்லை. ஆனால் கயற்கண்ணிக்கு அவன் மனதில் இடமிருப்பது உண்மைதான். என்றாலும் காதலுறவோடு நாட்களைக் கழித்துவிட எண்ணியவனுக்குத் தடையாகத் தோழி இருப்பாளோ என்ற எண்ணம் தலைதூக்கியபோது தோழி பேசத் தொடங்கினாள். "இப்படியே எத்தனை காலம் ஊருலகம் அறியாமல் காலத்தைக் களிப்பது? ஊரறிய நீங்கள் தம்பதிகளானால் என்ன? உங்களை நினைத்தே கயற்கண்ணி துரும்பாகிவிட்டாள்" ஊரறிந்தால் கௌவையாகிவிடுமே!" என்று கூறியதும், "வலையில் சிக்கிய மீனாகிவிட்டேன்" என்பதை உணர்ந்தான் மாருதன்.

**அம்ம வாழி தோழி! பன்மாண்**
**நுண்மணல் அடைகரை நம்மோடாடிய**
**தண்ணந் துறைவன் மறைஇ,**
**அன்னை அருங்கடி வந்து நின்றோனே!**
**-ஐங்குறு நூறு- 115**

**சிந்தியா, இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை விவகாரம் தாக்கத்தை ஏற்படுத்துமென நினைக்கிறீரா?**

*-எஸ்.இராமசாமி,*
*கொழும்பு - 12.*

நிச்சயமாக எதிரொலிக்கும் வீரப்பனுக்குப் பிறகு இந்திய அரசியலில் பேசப்பட்ட இன்னொரு வன்முறை கலந்த விடயம். சப்பாமலா இருப்பார்கள்.

**மேல் மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக் களமிறங்கவுள்ளதாக முடிவு செய்திருப்பது சரியானது தானா?**

*-எம்.என்.வாஹீப்,*
*பேருவளை.*

தேர்தல் தந்திரோபாயமாக இந்த முடிவுக்கு மு.கா. வந்திருக்கலாம். பல கேள்வி மு.கா. தலைமையை நோக்கி முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தத் தனித்த முடிவு வெளியாகி இருக்கிறது, பார்ப்போம்.

**சிந்தியா, யாழ்.மண்ணிலிருந்து இலங்கைத் தேசிய கிரிக்கெட் அணிக்கு வீரர்கள் தெரிவாகும் காலம் மலருமா?**

*-என்.ஆரூரன்,*
*யாழ்ப்பாணம்.*

இவ்வாறான ஏமாற்றமான கேள்விகள் அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருக்கின்றது. ஏன் சந்தேகம் உங்களுக்கு. நிச்சயமாக அது நடக்கும். யாழ்.குடாநாட்டு விளையாட்டு வீரர்களுக்கான வாய்ப்பு வெகு தொலைவில் இல்லை. வீரர்களுக்கு ஒரு உந்து சந்தியாக அங்கு தற்போது நடைபெற்றுவரும் "தேக சக்தியை வளர்ப்போம், தேச சக்தியாய் எழுவோம்" என்ற விளையாட்டுப் போட்டிகளும் வசந்த எழுச்சி விழாவும் அமைந்திருக்குமென்று நம்புகின்றேன்.

**சிந்தியா**
**பதில்கள்**

**சிந்தியா, இலங்கை அணியைப் பற்றிச் சொல்வது அடிக்கடி சரியாகவே நடந்து விடுகிறதே உமக்குக் கரி நாக்கா?**

*-பா.வசந்தன்,*
*கண்டி.*

மஹேல ஜெயவர்த்தனா அடித்திருக்கும் இரட்டைச்சதம் அவர் பதவி விலகப் போவதாகக் கூறியிருக்கும் ஒரு பின்னணியில் வந்திருக்கிறது. இதுபோதும், அவர் தனது திறமையை இழக்கவில்லை. சுமை என்று கருதும் பதவியைத்தான் இழக்கிறார் என்பது அரசியல் "தில்லு முல்லு" மூக்கை நுழைக்காமல் இருந்தால் இன்னும் நல்லது.

# ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழகமே எமது பின்தளம்; சமாதான- சகவாழ்வுச் சூழலில் கொழும்பே பின்தளம்

## -இன்றைய நிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கம்

''தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழியாக இருந்த அன்றைய காலகட்டத்தில் தமிழகம் எமது பின்தளமாகத் திகழ்ந்தது. ஐக்கிய இலங்கைக்குள் சமாதான- சகவாழ்வு என்ற கோட்பாட்டு நிலைப்பாட்டை நாம் எடுத்திருக்கும் இன்றைய நிலையில் இன்று கொழும்பு எமது பின்தளமாகத் திகழ்கிறது'' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். ஊடகவியலாளர்கள் மத்தியில் 'இன்றைய அரசியல் நிலை' தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

''1987ஆம் மேற்கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம், ஐக்கிய இலங்கைக்குள் சமாதான முறையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான களத்தை ஏற்படுத்தித் தந்தது. ஆனால் கிடைத்த அந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைத் துரதிர்ஷ்டவசமாக சிங்கள- தமிழ் தரப்புக்கள் இரண்டுமே சீர்குலைத்துவிட்டன'' என்றும் அவர் கூறினார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-



அன்று இடதுசாரிச் செல்வாக்குப் பெற்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈரோஸ் போன்ற அமைப்புக்கள் தமிழ் மக்கள் சார்பாகக் களத்தில் நின்றன. அன்று தென்னிலங்கையில் புரட்சிகர சக்திகள் இருந்திருக்குமேயானால் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான- சகவாழ்வு என்ற எமது கோட்பாட்டை அன்றே முன்னெடுத்துச் செல்ல முடிந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக அந்த நிலைமை அன்றிருக்கவில்லை.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களையும் புலித் தலைமையையும் ஒன்றாகவே பார்த்து வந்தன. இதுவே இன்றுவரை பிரச்சினை நீடித்து நின்றமைக்குக் காரணம். புலித் தலைமையின் பிரச்சினை வேறு, தமிழ் மக்களின் பிரச்சினை வேறு என்று இன்றைய அரசு பிரித்துப் பார்க்க முனைவது வரவேற்க வேண்டிய விடயம். புலித் தலைமையால் தவறாக வழிநடத்தப்பட்ட சாதாரண இளைஞர், யுவதிகள் தண்டிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. தலைமை வேறு, தவறாக வழிநடத்தப்பட்ட சாதாரண புலி உறுப்பினர்கள் வேறு என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் சரணடைந்த இளைஞர், யுவதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதைப்போன்று தவறாக வழி நடத்தப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். புலித் தலைமை அடிபட்டுப் போகும்வரை இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு வடக்கில் பிரச்சினைகள் இருக்கலாம். ஆயுதங்களைக் கைவிட்டு முற்றுமுழுதாக ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பியவர்கள் என்ற வகையில் நாம், ஆயுதப் போராட்டத்தில் பெற்றுக்கொண்ட முன் அனுபவம் மற்றும் ஜனநாயக வழிமுறைக்கூடாக பெற்றுக்கொண்ட முன் அனுபவம் ஆகிய இரண்டிலிருந்தும் பெற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு தொடர்ந்து முன் செல்வோம்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகள் நிலைமைகளை அனுசரித்துச் சரியாக நடந்துகொள்ளவில்லை. எடுத்ததை எல்லாம் எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டிலேயே அவை இருந்துவந்தன. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திலிருந்து பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே குறைந்த பட்ச தீர்வாக அமையும். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

### புலித் தலைவர்கள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய தேவையே இல்லாத நிலை ஏற்படும்'' என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''புலிகளின் ஆயுதங்கள்தான் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் கேடயமென்பது அரசியல் யதார்த்தமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னிக்குள் இரண்டரை இலட்சம் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்த புலிகளின் ஆயுதங்கள், எப்படித் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் என்றும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ''புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்'' என்று கூறி இறுதி யுத்தத்துக்காக ஆயுதமேந்திய புலிகள், தமிழீழ இலக்கைக் கைவிட்டுவிட்டு அதற்கும் குறைவான அரசியல் தீர்வை ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா? அல்லது ஒரு பேச்சுக்குச் சொல்வதானால் அரசியல் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசு வருமென்று வைத்துக் கொண்டால் நடேசன் முன்வைக்கப் போகும் தீர்வுத் திட்டம் என்ன? புதுக்குடியிருப்பை அண்டிய 73 சதுர கிலோமீற்றர்கள் பரப்புக்குள் தமிழீழம் அமைப்போமென வாய்ச் சவடால் அடிக்கப் போகிறார்களா? அல்லது தலைவர்கள் தப்பிச் செல்ல உதவுமாறு கோரப் போகிறார்களா? அழிவு நிச்சயமென்ற நிலையில் தப்பிச் செல்லும் யோசனை புலித் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

### முதன் முதலாக..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், மென்ரக விமானங்களைப் பயன்படுத்தி முதன் முதலாகத் தற்கொலைத் தாக்குதல் இலங்கையிலேயே நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த இருபதாம் திகதி மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் முயற்சியின்போது கொல்லப்பட்ட ரூபன், சிரித்திரன் ஆகிய புலி இயக்கப் பெயர்களைக்கொண்ட இருவர் பற்றிய உண்மையான விபரங்களை அறியும் முயற்சியில் இரகசியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். வெளிநாடொன்றில் விமானப் பொறியியல் துறையில் பயிற்சி பெற்ற பிரபாகரனின் மகனான சார்ள்ஸ் அன்ரனியைத் தற்கொலைத் தாக்குதல் முயற்சிக்குப் பயன்படுத்தாமல், சாதாரண ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இருவரைப் பயன்படுத்தியமை குறித்துப் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### வன்னி அகதிகளின்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களின் அவலநிலை சம்பந்தமாகத் தேவையான அக்கறை காட்டப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் உடல், உள ரீதியான நலனுக்காகத் தன்னிடமுள்ள அனைத்து வளங்களையும் அரசாங்கம் பயன்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும். இடம்பெயர்ந்தவர்களை இயன்றவரை விரைவாக அவரவர்களின் சொந்த இடங்களில் குடியேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கட்டாய கடமையாகும்.

நன்றி : டெய்லி மிரர்.

## இரு ஒஸ்கார் விருதுகள் பெற்ற ரஹ்மானின் அடக்க ஒடுக்கம் மாதங்கிக்கு இருக்கவில்லை

சென்னையில் தமிழ்க் குடும்பமொன்றில் பிறந்து பின்னர் இஸ்லாம் மதத்தைத் தழுவிய இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் இரண்டு ஒஸ்கார் விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளார். 'ஸ்லம்டோக் மில்லியனர்' என்ற ஹொலிவூட் திரைப்படத்தில் 'ஓ சாயா' என்ற பாடலோடு சம்பந்தப்பட்டே அவருக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதே பாடலில் பங்களித்த இலங்கைத் தமிழ்ப் பெண் மாதங்கி அருள்பிரகாசம் ஒஸ்கார் விருதுக்குச் சிபார்சு செய்யப்பட்டபோதும், அவர் வெற்றி பெறவில்லை. கலையுலக மேடைகளைத் தன் சொந்த அரசியல் கருத்துக்களுக்காக அவர் பயன்படுத்த முனைந்தமை பல கலையுலக பிரபலங்களின் முகங்களைச் சுளிக்க வைத்திருக்கின்றது.



பிரிட்டனில் கிராமி விருதுக்காக அண்மையில் இவர் சிபார்சு செய்யப்பட்டிருந்தார். அந்த அரங்கைத் தனது பிரிவினைவாத சார்புப் பிரசாரத்துக்காக இவர் பயன்படுத்த முனைந்தமை பலா-ின் கண்டனத்துக்கு இலக்கானது. ஈரோஸ் இயக்கத்தில் முன்னர் அங்கம் வகித்தவரும், 1983ஆம் ஆண்டு ஆடிக் கலவரத்தைத் தொனிப்பொருளாக வைத்து 'லங்காராணி' என்ற நூலை எழுதியவருமான அருளர் என்றழைக்கப்படும் அருட்பிரகாசத்தின் மகளே இவராவார். பிரிட்டனில் பிறந்தவர், மாயா என்றும் அழைக்கப்படும் மாதங்கி. ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது பெற்றோருடன் இலங்கை திரும்பிய இவர், தனது பத்தாவது வயதில் இந்தியாவுக்குச் சென்றார். தனது தாயார் மூத்த சகோதரி, இளைய சகோதரன் ஆகியோருடன் இந்தியா சென்ற அவர் பின்னர் பிரிட்டனுக்குக் குடிபெயர்ந்தார்.

'பேப்பர் பிளேன்ஸ்' என்ற பாடலுக்காகவே இங்கிலாந்தின் கிராமி விருதுக்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தார். தற்போது லொஸ் ஏஞ் ஜல்சில் வசித்துவரும் இவர், பெஞ்சமின் பிரேவர் என்ற ஆங்கிலேயரைத் திருமணம் செய்துள்ளார். இவரது முதலாவது பிரசவமும் அண்மையில் இடம்பெற்றது. சிறந்த பாடல், சிறந்த இசை ஆகியவற்றுக்காக இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற ஏ.ஆர். ரஹ்மான் நன்றி தெரிவித்துப் பேசும்போது, ''எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்று மிகவும் அடக்க ஒடுக்கமாகத் தமிழில் குறிப்பிட்டவை அவருக்குப் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுத் தந்துள்ளது.

# புலிகளின் இராணுவத் தோல்வியும் புலம்பெயர் நாட்டு ஆதரவாளர்களும்!

**புலிகளின்** கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்குள்ளும் இராணுவம் தற்போது பிரவேசித்து அப்பிரதேசமும் மீட்கப்படும் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. புலிகளுக்கு வன்னியில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் இராணுவத் தோல்வியை ஏற்க முடியாத மனோநிலையில்தான் புலம்பெயர் நாடுகளிலுள்ள புலி ஆதரவாளர்களின் மனோநிலை இருந்தது. ஏதாவது அதிசயங்கள் நிகழ்ந்தாவது வன்னிக்குள் நிற்கின்ற இராணுவத்திற்குத் தோல்வி ஏற்படாதா என்கிற எதிர்பார்ப்புகள் இவர்களுக்குள் நாளுக்கு நாள் அதிகரித்தே வந்தது.

இவர்களின் இந்த மனோநிலை ஒரு வகை மனநோயுடன் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது. நிஜத்தில் வன்னிக்குள் நிலை கொண்டுள்ள இராணுவத்திற்குப் பாரிய இழப்புக்கள் ஏற்படாத நிலையில் கற்பனையில், கட்டுக்கதையில் இங்கு பெரும் இழப்புக்கள் இராணுவத்திற்கு ஏற்பட்டதாகவும் புலிகள் இன்னும் பலமிழக்கவில்லையென்றும் ஒரு வித மயக்கம் கலந்த மாயையில் இவர்கள் உழன்றுகொண்டிருந்தார்கள். அப்படியானதொரு கற்பனையை நிஜமாக்கி மது அருந்தி, பட்டாசு கொளுத்திக் கொண்டாடிய நிகழ்வுகள் கல்மடுக்குள உடைப்பினால் 2000க்கும் அதிகமான இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் 3000க்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் காணவில்லை என்கிற கற்பனைக் கதை!

கற்பனைகள் கற்பனைகளாகவே இருந்து வருகின்ற நிலையில்; கடந்த வாரம் கொழும்பு நகர் மீது புலிகள் நடாத்திய விமானத் தாக்குதல் தோல்வியில் முடிந்ததும் புலிகளிடம் இருந்த இரு விமானங்களுமே இந்த நடவடிக்கையின்போது சுட்டு வீழ்த்தப்பட்டதும் புலம்பெயர் நாடுகளிலுள்ள புலி ஆதரவாளர்கள் மத்தியில் நம்பிக்கை வரட்சியையும் மன ஆட்டத்தையும் ஏற்படுத்தி விட்டுள்ளது. கற்பனையிலும் கனவிலும் ஊறித் திளைத்த இவர்களின் கண்ணும் காதும் இப்போதுதான் உண்மை நிலையை உணர வாசலைத் திறந்து விட்டிருக்கிறது.

தலைவர் பின்வாங்குவது பாரிய தாக்குதலை நடாத்தத்தான், உள்ளுக்குள் விட்டு அடிக்கப் போகிறார்கள், வன்னிக்குள் கால் வைத்த இராணுவத்தினர் மரணக்குழிக்குள் கால் வைத்திருக்கிறார்கள், புலிகளின் விமானப்படையினர் இருக்கும்வரை துவண்டுவிடத் தேவையில்லை என வெளுத்து வாங்கிக்கொண்டிருந்த இவர்களுக்குப் புலிகளின் விமானத் தாக்குதல் தோல்வியில் முடிந்ததும் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதும் முகத்தில் அறைந்து சுய நிலைக்குக் கொண்டுவந்து விட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகத்தான் இந்தப் புலி ஆதரவுச் சக்திகள் தோல்வி மனப்பான்மையில் விழத் தொடங்கியுள்ளனர். கனடாவாகட்டும், லண்டன் ஆகட்டும் பிரான்ஸ் ஆகட்டும் சுவிஸ், ஜெர்மன் ஆகட்டும் கொடி பிடித்துக் கோஷம் போட்டு, குடும்பத்திற்கு ஆயிரம் பவுண்ஸ், யூரோ சேர்ந்தவர்கள் ஆமை தலையை ஓட்டுக்குள் இழப்பதுபோல் இழுத்துக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். இன்னும் சில நாட்களில் புலம்பெயர் நாடுகளில் இப்புலி ஆதரவுப் பினாமிகளும் கோஷ்டிகளும் போட்ட கூத்துக்கு முடிவு வந்துவிடும் என்கிறார்கள் நமது புலம்பெயர் நண்பர்கள்.



வன்னிக்குள் மக்களைப் பணயக் கைதியாக வைத்து; தம் மீதான இராணுவத் தாக்குதலுக்கு மக்களைப் பலியிட்டு அதனை வைத்துக் கொண்டு அரசியல் நடாத்திவரும் புலிகள்; புலம் பெயர் நாடுகளிலுள்ள தமது ஆதரவாளர்களிடம் அதிகப் பணத்தை இறுதிச் சேகரிப்பாகச் சேர்த்துக் கொள்ளவே கடந்த வாரம் நடாத்திய விமானத் தாக்குதல் திட்டத்தைத் திட்டமிட்டனர். கட்டுநாயக்கா விமானத்தளம், இலங்கை விமானப்படைத் தலைமையகம் இவைகள் மீது தாக்குதலை நடாத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்துவதே புலித் தலைமையின் இலக்காக இருந்தது.

இத்தாக்குதல் நடந்த அடுத்த தினம் புலம்பெயர் நாடுகளில் பெரும் கொண்டாட்டங்களைச் செய்யவும் இந்தக் கொண்டாட்டங்களின் ஊடாகத் தமது ஆதரவாளர்களிடையே ஏற்படுகின்ற மனோநிலையைப் பயன்படுத்திப் பெரும் பணச் சேகரிப்பைச் செய்யவுமான திட்டமிடல் தயார்படுத்தப்பட்டிருந்தது. கற்பனையில் நிகழ்ந்த கல்மடுக்குள உடைப்பிற்குக் கொண்டாடியவர்கள், நிஜமாக நடந்த ஒன்றிற்கு எப்படிக் கொண்டாடுவார்கள் என்கிற கணிப்பீடு புலம்பெயர் நாடுகளிலுள்ள புலி அமைப்பாளர்களுக்கு இருந்தது.

ஆனால் தாக்குதல் புஷ்வாணமாகிப் போனதுடன்; இருந்த இரு விமானங்களையும் இழந்தது இவர்கள் போட்டு நின்ற திட்டத்தை மட்டுமல்ல இவர்களின் மனோநிலையையும் அடியோடு சரித்துவிட்டது. இந்நிலையில் புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்களும் இந்தப் புலிப் பினாமிகள் மீது இப்போது தமது அதிருப்திகளையும் எதிர்ப்புகளையும் காட்டத் தொடங்கிவிட்டனர். நாட்பட நாட்பட இவர்கள் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என ஓடி ஒளிவதைத் தவிர வேறு வழியில்லை. தாயகத்தில் புலித் தலைமைக்கு ஏற்பட்டுள்ள தோல்வியின் தாக்கம் இப்போதுதான் புலம்பெயர் நாடுகளில் எதிரொலித்து, வெளுக்கத் தொடங்கியுள்ளது.

**—பிரசாத்—**

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.02.2009 தொடக்கம் 04.03.2009 வரை)

ஞானயோகி. டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:–** மேஷராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரத்தில் இது வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி மன நிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மருத்துவச் செலவுகளும் உண்டாகலாம். நண்பர் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் பொருள் வரவும் மன மகிழ்ச்சியும் வந்து சேரும்.
**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:–** ரிஷபராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, புதன் நன்மை தரும் கிரகமாகும். வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித் தொகைகள் கிடைப்பதில் இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். தீராத நாட்பட்ட நோய்களுக்காக மருத்துவச் செலவுகளைச் செய்யும் பொருட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். மன தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்து முடிப்பீர்கள்.
**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன் கிழமைகளில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:–** மிதுனராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் சகோதர சகோதரிகளால் பொருள்வரவும் மன மகிழ்ச்சியும் ஏற்படும். தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் வீண் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள வேண்டாம். உத்தியோக விசயமாகப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். பொதுவாக இது ஒரு எச்சரிக்கை நிறைந்த வாரமாகும்.
**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு
**பரிகாரம்:-** வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:–** கடகராசி அன்பர்களே இந்த வாரம் உங்களுக்கு, ராகு நன்மை தரும் கிரகமாகும். வெளிநாடு சென்று வருதல் போன்ற விசயங்களுக்காகப் புதிய முயற்சிகளில் தலையிட்டு வெற்றி பெறுவீர்கள். வெகு காலமாகப் பிரச்சினைகளில் இருந்து வந்த பூர்வீகச் சொத்துக்கள் சட்டபூர்வமாக கைக்கு வந்து சேரும். செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர் ஏற்பட இருப்பதால் எதிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்.
**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் பிதுர் மற்றும் காளி போன்ற அம்மன் வழிபாடுகளை செய்து வரவும்.

**சிம்மம்:–** சிம்மராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். திருட்டுப் போன பொருட்கள் மற்றும் வாகனங்கள் காவல் துறையினரின் உதவியால் திரும்பக் கிடைக்கும். மனைவியின் உடல் நிலையில் சில பாதிப்புகள் ஏற்படுவதன் மூலம் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் புதிய பிரச்சினைகள் வர இருப்பதால் பயணங்களைச் சற்றுத் தள்ளிப் போடுதல் நல்லது.
**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் முருகன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:–** கன்னிராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். கணவன்-மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளி நாட்டில் வசிப்பவர்கள் தாய் நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ளது. வராத பணம் மற்றும் பொருட்கள் பெரிய மனிதர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் நினைத்த இடத்திற்கு பணி இடமாற்றமும் ஏற்படலாம்.
**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:–** துலாராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, சனி நன்மை தரும் கிரகமாகும். இது வரையில் நெருக்கடியில் இருந்து வந்த பணத் தட்டுப் பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத் தகவல் மையங்கள் மற்றும் நண்பர்களின் உதவிகளால் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. நாட்பட்ட தீராத நோய்கள் தீர வேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன் மூலம் நல்ல பலன் அடைவீர்கள்.
**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** சனிக்கிழமைகளில் சனீஸ்வர வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:–** விருச்சிகராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, கேது நன்மை தரும் கிரகமாகும். புதிய தொழில் செய்வதற்கான முயற்சிகளில் வங்கிகளில் இருந்து நல்ல தகவல்கள் கிடைக்கும். பணத் தேவைகளுக்காகப் பூர்வீகச் சொத்துக்கள் சிலவற்றை விற்பதன் மூலம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மனக் குழப்பங்களும் உண்டாக வாய்ப்பு உள்ளதால் முன் கோபம் தவிர்த்தல் உகந்ததாகும்.
**இராசியான எண்:-** 7
**இராசியான நிறம்:-** கருஞ்சிவப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் விநாயகர் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:–** தனுசுராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, ராகு நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலை விலைக்கு வாங்காதீர்கள். தந்தை-மகன் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு விலகும். மனத் தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்றுப் பிரயாசையுடன் செய்து முடிப்பீர்கள்.
**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக்கிழமைகளில் பிதுர் மற்றும் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்

**மகரம்:–** மகரராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்களை நடத்துவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். வெளிநாடுகள் சென்று வருதல் போன்ற புதிய முயற்சிகளில் ஈடு பட்டு வெற்றி அடைவீர்கள். கணவன்-மனைவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும்.
**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:–** கும்பராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். உற்றார் உறவினர்களின் வரவால் மன நிம்மதியும் பொருள் வரவும் உண்டாகும். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்து சேரும். பணி ஆற்றும் இடங்களில் மேலதிகாரிகளிடம் முன் கோபத்தைத் தவிர்க்கவும்.
**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக் கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:–** மீனராசி அன்பர்களே, இந்த வாரம் உங்களுக்கு, வியாழன் நன்மை தரும் கிரகமாகும், கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று நீடிக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் தேவையில்லாத மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். கொடுக்கல் வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது.
**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்தி ஆலய வழிபாடு செய்து வரவும்.




உ

ஓம் சக்தி சிவமயம்
ஓம் அகத்கீஸ்வராய நமஹ

ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் அநுக்கிரகத் தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழியில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அநுகவும்.

**Contact:**
Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi , Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390 Email:Paramasivan_esakki@yahoo.com
Website:- www.gnanayohi.com Consultation by appointment only.


# காதில பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

*வணக்கமுங்கோ.*

**போனவாரம்** நடேஷனைத் தொடர்புகொண்டு நாலே நாலு வார்த்தைகள் கேட்டனுங்கோ. அவர் நாக்கைப் பிடுங்கிக்கொண்டாரோ, நாண்டு கொண்டாரோ தெரியாதுங்கோ.

**அட்டேக் வன்:-** வன்னியில மக்களைப் பலாத்காரமாக நீங்கள் தடுத்து வச்சிருக்கியள் எண்டு சொல்லப்படுகிறது. அதுதான் உண்மை எண்டும் நினைக்கிறன். நீங்கள் என்ன சொல்லுறியள்...

***பங்கர் வாசி நடேஷன்:-*** முதலில நான் சொல்லுறதைக் கவனத்தில எடும். உமக்குச் சொல்லுறதை வெளியால கசிய விட்டிடாதையும். உண்மை வெளியால வந்ததெண்டால் தலைவருக்கு விசர் முத்திப்போடும். பிறகு மனிசன் என்னைக் கூப்பிட்டுக் கடிச்சுக் குதறிப்போடுவார்.

வன்னியில சனம் நூற்றுக்கணக்கில சாகுதுகள், நூற்றுக்கணக்கில காயமடையுதுகள். சனத்தை வெளியால விடுவம் எண்டால் தலைவர் மூசிக்கொண்டு அடிக்கவாறார். ஏன் சனத்தை உப்பிடிச் சாகக் குடுக்க வேணும் எண்டு தளபதி ஒருவர் கேட்டதுக்கு, மடையா... மடையா சனம் மட்டும் இதுக்க இல்லாட்டில் உன்ர அப்பன், அதாண்டா உன்ர எமன் எப்பவோ நம்மைத் துலைச்சிருப்பான் எண்டு பிஸ்டலை எடுத்து அவனை மண்டையில போட்டிட்டார். எப்ப என்ன நடக்குமோ எண்டு தெரியாத டென்சனில தூக்கமும் இல்லாம கண் சிவந்து போய் தாடியும் வளர்த்து தலைவர் பேய் பிடிச்ச மாதிரி இருக்கிறார். சனங்கள் கோரமாகச் சாகிற படங்களைப் பார்த்து கைதட்டிச் சிரிக்கிறார். இதுதான்.. இதைத்தான் எதிர்பார்த்தேன்.. இந்தப் படங்களை உடனடியாக அனுப்புங்கோ எண்டு சொல்லுறார்.

**அட்டேக் ரு:-** சரி அதிருக்கட்டும்... ஒரு தடவை வைகோ சொன்னவர், நீங்கள் அவரோடு தொடர்புகொண்டு கதைச்சியளாம். அப்போது வெடிச்சத்தங்கள் கேட்டதாம் எண்டு. ஆனால் இண்டைக்கு அப்பிடி ஒண்டுமில்லாமல் ரொம்பக் கூலாகக் கதைக்குமாப்போலை இருக்குதே. சட்டலைட் போன் எண்டதாலை பொய் சொல்லாமல் உண்மையைச் சொல்லும். இப்ப எங்க இருக்கிறீர்?

***பங்கர் வாசி நடேஷன்:-*** ஆஹா சந்தேகப்பட்டுட்டானே, சந்தேகப்பட்டுட்டானே. அது.. அதெல்லாம் ஒண்டுமில்லையுங்கோ. நான்... நான் பங்கருக்கதான் இப்பவும் இருக்கிறன். ஏன் உங்களுக்குச் சத்தம் கேட்கயில்லையோ. எனக்கு நல்லாக் கேக்குதே... ஹலோ... ஹலோ... கந்தசாமி... கந்தசாமி... நான் ஒருவேளை, தமிழ் நாட்டுக்குப் போய் பதுங்கி நிக்கிறன் எண்டும், நாங்கள் சில பேர் வந்த படகுகள்தான் உங்க கரை ஒதுங்கினதெண்டும் நீர் சந்தேக்கிறீர் போலை. ஏன் உப்பிடித் தாறுமாறாகச் சந்தேகப்படுகிறீர். நான் இன்னும் தாயக மண்ணுக்குள்ளதான் இருக்கிறன். பிளீஸ் நம்புங்கோ. சிலபேர் போயிட்டினம் எண்டது உண்மைதான். அவையின்ர பெயர்களைச் சொல்ல ஏலாது. அப்பிடிச் சொன்னால் தலைவர் என்ர பங்கர் மண்ணைச் சரிச்சுக் கொட்டி என்னை அப்படியே சமாதியாக்கிப் போடுவார்.

**அட்டேக் திரீ:-** சரி... சரி அதுக்கு ஏன் உப்பிடி உமக்குக் குழப்பமடிக்குது. நீர் இந்தியாவுக்குப் போகயில்லை எண்டால் விடும். சட்டலைட் போன் எண்டதாலை லொக்கேஷன் தெரியவே போகுது. உந்தத் தீக்குளிப்புக் கேஸில ஏன் உங்களிட்ட காசு வேண்டுறவை யாரும் இறங்காமல் இருக்கினம்?

***பங்கர் வாசி நடேஷன்:-*** சரியாக் கேட்டியள். "தலைவன் எவ்வழியோ தொண்டர்களும் அவ்வழியே" எண்டுவினமெல்லோ. இப்ப பாருங்கோ எங்கட தலைவர் இவ்வளவு சண்டை உக்கிரமடைஞ்சும் அவர் இன்னும் களத்தில இறங்க இல்லையே. அடுத்தவனின்ட பிள்ளைகளைச் சாகடிச்சுப் போடுறதிலதான் குறியா இருக்கிறார். அதையேதான் வைகோவும், திருமாவும் செய்துகொண்டிருக்கினம்.

**அட்டேக் போ:-** உங்க தலைவரின்ர "தமிழீழம்" இப்ப எங்க இருக்கு?

***பங்கர் வாசி நடேஷன்:-*** தலைவரே அடுத்த நிமிஷம் எங்க இருக்கிறார் எண்டது தெரியாமக் கிடக்கு. உதில தமிழீழம் எங்க இருக்கெண்டால் நான் என்ன சொல்லுறது "தமிழீழம்" எண்டதையெல்லாம் தலைவர் கவுட்டுக் கொட்டிப்போட்டார் எண்டு நினைச்சுக்கொள்ளுங்கோ. உப்பிடியெல்லாம் நான் உளறியதைப் பிளீஸ் பிரசுரிச்சுப் போடாதையும். அம்மா சத்தியமா உம்மை நம்பித்தான் உள்ளதைச் சொல்லிப்போட்டன். ஓகே பாய்...

## யாவும் கலப்பட்டமற்ற கற்பனை

# சாக்ரடீஸ்

## உலகை வியக்க வைத்தவர்கள்

**ஏது** சரி என்பதை மக்கள் அறிவார்களானால், அதைச் செயல்படுத்துவதில் அவர்களுக்குக் கஷ்டம் இருக்காது. நற்பண்பே அறிவு, யாரும் தவறுகளை விரும்பிச் செய்வதில்லை போன்ற புகழ்பெற்ற கருத்துக்களை வலியுறுத்தினார் சாக்ரடீஸ். தவறுகளைச் செய்து துன்பப்படுவதைவிட, தவறுகளினால் துன்பப்படுவது மேல் என்பதும் சாக்ரடீஸின் கொள்கையாக இருந்தது. இது இன்றைய கிறிஸ்துவ மதச் சார்புடையவர்களின் கொள்கையாக இருந்தாலும், கி.மு. 5ஆம் நூற்றாண்டில், அத்தீனியர்களின் கொள்கையாக இருந்திருக்கிறது என்பது வியப்பூட்டும் செய்தியல்லவா? ஒரு மனிதனின் ஆத்மா பரிசுத்தமாக இருக்க, தன் கொள்கைகளைக் கைவிடுவதற்கு இணங்காமல், தன் வாழ்க்கையையே உயிரையே இழப்பதற்குத் தயங்கக் கூடாது என்னும் இன்றைய நினைப்பை, ஐரோப்பியர்களிடையே அறிமுகப்படுத்தியது சாக்ரடீஸே என்பதைச் சரித்திரம் கூறுகிறது.

சாக்ரடீஸ் தம் தத்துவங்கள் எதையும் எழுதி வைக்கவில்லை. இன்று அவருடைய கொள்கைகள், தத்துவங்கள் நமக்குக் கிடைத்திருப்பது, அவருடைய சீடராக விளங்கிய பிளேட்டோ என்பவர், சாக்ரடீஸ் பேசிய பேச்சுக்களையெல்லாம் 'உரையாடல்கள்' (Dialogues) என்ற பெயரில் தொகுத்துள்ளார். அதிலிருந்தே நாம் அறிய முடிகிறது. சாக்ரடீஸின் உரையாடல்களின் முதல் கட்டம், முதலில் ஒரு மனிதனிடம் போய் அவன் தற்போது நம்பும் கருத்துக்கள் தவறு என்றோ அல்லது போதுமானதானதல்ல என்றோ கூறுவார். இச்செயலில் தன்னைக் குறைவாக மதிப்பிடும் ஒரு நகைச்சுவை கலந்திருக்கும். இதை சாக்ரடீஸின் வஞ்சப் புகழ்ச்சி என்று கூறுவார்கள். இம்முறையினால் அவர் காலத்தில் தங்களை அறிவாளிகள் என்று கூறி



இறுமாப்புக் கொண்டிருந்த பல பிரபலங்களை, அவர்கள் முட்டாள்கள் என்று வெளிச்சம் போட்டுக் காட்டினார் சாக்ரடீஸ். இச்செயல் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. பழைமை வாதிகளின் கருத்துக்களை சாக்ரடீஸ் நாசமாக்கியதை வாலிபர்கள் வரவேற்றார்கள். ஆனால் இச்செயலே அவருக்குப் பல விரோதிகளையும் உருவாக்கியது. உதாரணமாக அரிஸ்டோபோன்ஸ் (Aristophanes) என்னும் கவி, தன் தி க்ளௌட்ஸ். (The Clouds) என்னும் நகைச்சுவைப் பாடல்களில், பணத்துக்காக, நேர்மையற்ற தம் சொல் விளையாட்டினால், மக்களை ஏமாற்றிப் போதிக்கும் ஒரு

வியப்புக்கள் தொடரும்

புதிய டிக்கட் மூலம் செல்வயோகம்

# இரட்டிப்புப் பரிசுகள்



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உங்களை வெற்றியாளர்களாக்கும் செல்வயோகம்

பரிசுத் தொகையை இரட்டிப்பாக்கி...

உங்கள் கைகளில் புதிய டிக்கட்டுகள்

1 இலக்கத்திற்கு 20/-
2 இலக்கங்களுக்கு 40/-
3 இலக்கங்களுக்கு 1,000/-
4 இலக்கங்களுக்கு 200,000/-
1 இலக்கத்துடன் லக்கினத்திற்கு 60/-
2 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 200/-
3 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 10,000/-
4 இலக்கங்களுடன் லக்கினத்திற்கு 2,000,000/-
அல்லது அன்றைய தினத்தின் ஜக்போட்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



# கொவிசெத லொத்தரின் மிகப்பாரியதொரு மாற்றம்

ஒரு கோடி ரூபாவால் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு

பத்து இலட்சம் ரூபாவாக இருந்த முதல் பரிசு இப்போது இருபது இலட்சம்.

ஏனைய பரிசுத்தொகைகளும் இரட்டிப்பாக அதிகரிப்பு

சீட்டின் இலக்க வரிகளும் இரண்டு

இரு வரிகளிலும் இலக்கங்கள் பொருந்தினால் இலட்சக்கணக்கான பரிசுகள்

புதிய பரிசு முறைகள்

| | | |
|---|---|---|
| ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,693,313.00 | |
| 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | வீதம் |
| ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 10,000.00 | வீதம் |
| 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | வீதம் |
| ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 500.00 | வீதம் |
| 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 50.00 | வீதம் |
| ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | வீதம் |
| 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | வீதம் |

போனஸ் பரிசு

| | | |
|---|---|---|
| மேல் வரிசையில் ஏதாவதொரு வெற்றி இலக்கம், கீழ் வரிசையின் 1 வது இலக்கத்துடன் பொருந்தினால் | ரூ. 40.00 | வீதம் |
| மேல் வரிசையில் ஏதாவதொரு வெற்றி இலக்கம், கீழ் வரிசையின் 2 வது இலக்கத்துடன் பொருந்தினால் | ரூ. 40.00 | வீதம் |
| மேல் வரிசையில் ஏதாவதொரு வெற்றி இலக்கம், கீழ் வரிசையின் 3 வது இலக்கத்துடன் பொருந்தினால் | ரூ. 100.00 | வீதம் |
| மேல் வரிசையில் ஏதாவதொரு வெற்றி இலக்கம், கீழ் வரிசையின் 4 வது இலக்கத்துடன் பொருந்தினால் | ரூ. 100.00 | வீதம் |

வெற்றி இலக்கமானது கீழ் வரிசையில் மாத்திரம் காணப்பட்டால் அதற்கு பரிசுகள் வழங்கப்பட மாட்டாது.

இந்த அனைத்து பரிசுகளையும் வெல்லுங்கள் கொவிசெத சீட்டை [illegible] விலை கொடுத்து வாங்குங்கள்

# கொவிசெத

பெருமைமிகு இலங்கையர்களின் அபிமான லொத்தர்

உங்கள் வைத்திற்கும் நாட்டின் வைத்திற்கும்

**தேசிய லொத்தர் சபை**

234/2 காலி வீதி, கொழும்பு-03.

தொலைபேசி: 2470662, 2470663 வெப் சேவை: www.nlb.lk